www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්
ஆக.25–31,1996

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 167



# பிரபாவுக்கு இலக்கு



# காட்டுக்குள் யுத்தம்

## அமெரிக்காவின் இரகசியப்பயிற்சி




சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## அனுபவமே ஆசான்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

வாக்குறுதிகள் மட்டும் இங்கு
வெகுவாக மலிந்துவிட்டன.
எந்தப் பிரச்சனை
நெருப்பாக மாறுகிறதோ
அதனை மூடும் சாம்பலாகவும்
வாக்குறுதிகள் உதவுகின்றன.

அரசியல் கைதிகள் விடயத்திலும்
அலட்சியமாக இருந்தபோது
அவர்கள் உண்ணாவிரதமிருந்தனர்.
அந்த நெருப்பை
தற்காலிகமாக மூடிவிடும் சாம்பலாக
வாக்குறுதி வீசப்பட்டது.

வாக்குறுதி காற்றில் பறந்துவிட
மீண்டும் நெருப்புத் தெரிகிறது.
சொல்லப்பட்டதுபோல
துரித நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
தாங்கள் இன்னமும் சிறையில்தான்
என்பதை அரசியல் கைதிகள்
அறிவித்திருக்கிறார்கள்.

மலையகத் தமிழ் கைதிகள் உட்பட
வடக்கு-கிழக்கு இளைஞர்கள்
தொடர்ந்து சிறையில் வாடுகின்றனர்.

பொறுமை எல்லை மீறி
அவர்கள் உண்ணாவிரதமிருக்கும்போது
வாக்குறுதிகளோடு
உண்ணாவிரதம் முடித்துவைக்கப்படும்!

அத்தோடு சரி.
பின்னர் அரசியல் தலைவர்கள் முதல்
ஆட்சியில் இருப்போர்வரை
அவர்களை மறந்துவிடுவார்கள்!

இனப்பிரச்சனை தீர்வில்
அக்கறையுள்ளவர் நீதியமைச்சர்.
இனரீதியாக சிறையில் வாடும்
இளைஞர்கள் விடயத்தில்
அவரது அமைச்சாவது
அக்கறை காட்டலாமே!

"குற்றம் என்ன செய்தேன்
கொற்றவனே?" என்று
மன்னராட்சிக் காலத்தில் கூட
மக்கள் வாதாட முடிந்தது.

இப்போது நடப்பது
மக்களாட்சி எனப்படுகிறது.
"குற்றம் என்ன செய்தோம்?" என்று
கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள்
தமிழ் அரசியல் கைதிகள்.

சிறையிலடைத்தவர்களுக்கோ,
விளக்கம் சொல்லவும் முடியவில்லை.
வெளியே விடவும் மனமுமில்லை!

மனித உரிமைக் குழுக்களுக்கு
இங்கு குறைவில்லை.
பொதுஜன முன்னணி அரசு
பதவிக்கு வந்த பின்னர் மட்டும்
இரண்டு ஆணைக்குழுக்கள்
உருவாக்கப்பட்டுவிட்டன.

மனித உரிமை என்பது
தமிழ்பேசும் மக்களுக்கு
அப்பாற்பட்ட ஒரு விடயமென்று
குறிப்பிட்ட ஆணைக்குழுக்கள்
தப்பான ஒரு வரைவிலக்கணம்
வைத்திருக்கின்றனவோ தெரியவில்லை!

அதனால்தான்-
குறிப்பிட்ட மனித உரிமை
ஆணைக்குழுக்கள்
தங்கள் திருமுகத்தை
சிறைப்பக்கம் திருப்பவில்லையோ?

மனித உரிமை சட்டங்கள்,
தாமதமில்லாத நீதி விசாரணைகள்
என்பவையெல்லாம்
தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை
ஏட்டுச் சுரைக்காய்கள்தான்!

நிரபராதிகளுக்கு வழங்கப்படும்
தாமதமான நீதி என்பதும்
தண்டனைக்குச் சமமானதுதான்!

குற்றவாளிகளை-
சீர்திருத்துவதும் சிறையிடுவதன்
நோக்கங்களில் ஒன்று.
குற்றமற்றவர்களை
சிறையில் பூட்டி வாட்டி
அவர்கள் மனதையும்
கெடுத்துவிடும் காரியம்தான்
காலாகாலமாக
தமிழ் இளைஞர்கள் விடயத்தில்
நடந்து கொண்டிருக்கிறது.

வடக்கு-கிழக்கில்
ஆயுதப் போராட்டம்
ஆரம்பமாக முன்னரே
ஆயிரமாயிரம் இளைஞர்கள்
அரசியல் கைதிகளாக்கப்பட்டனர்.

விளைவு என்ன?
அகிம்சைவாதிகளாக சிறை சென்றவர்கள்
ஆயுதப் போராட்ட நம்பிக்கையுடன்
வெளியே வந்தார்கள்!

அனுபவமே சிறந்த ஆசான்!
அதனிடம் கற்றுக் கொண்டால்
இனிமேல் நடப்பதாயினும்
நல்லதாய் நடக்கும்?
ஆனால்-கற்றுக்கொள்ளத்தான்
யாருக்கும் அக்கறையில்லையே!

❑❑

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## திருமணத்தில் ஆணும் பெண்ணும்

சுயநலமற்ற, பூரண சமர்ப்பணம் நிறைந்த அன்பே உண்மையான இல்லற வாழ்வின் அடிப்படையாகும். இது உடலுறவின் சங்கமம் மட்டுமல்ல, மாறாக ஆன்மீக பேருறவின் விளைவாகும்.

கருணை, பொறுமை, மன்னித்தல், ஒருவர் ஒருவருக்குள்ள பாசத்தின் வெளிப்பாடு போன்றவை இன்பமான இல்லற வாழ்வின் ஏனைய தேவை அம்சங்களாகும்.

துணைவரின், துணைவியின் தேவைகளுக்கு முதலுரிமை வழங்குவதே இல்லச் சமாதானத்தின் வெண்புறாவாகும். இதனாலேயே திருச்சபை கிறிஸ்துவின் துணைவி என்று அழைக்கப்படுகிறது. ஏன்?-என்றும் பிரியாது இணைந்திருப்பது. ஒன்றுக்காக ஒன்று; ஒருவருக்காக ஒருவர் இன்னுயிரை கொடுப்பது. எனவேதான் திருமணம் பற்றிப் பேசும் வேதாகமத்தில் இவ்வாறு கூறப்படுகின்றது.

"தேவனாகிய கர்த்தர் மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதில்லை. ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன்" என்றார். இதனிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் ஒரே மாம்சமாய் இருப்பார்கள்."-(ஆதி2:18-24).

ஆம் நாம் பொதுவாக 'ஈருடல் ஓருயிர்' என்போம். ஆனால், இங்கு ஓருடல் என்றே கூறப்படுகிறது. எக்காரணம் கொண்டும் பிரியக்கூடாது என்பதையல்லவா காட்டுகிறது.

"கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருப்பானாக."

ஆன்மீக வாழ்வில் மட்டுமல்ல, லௌகீக விடயங்களிலும் ஒன்றிணைந்து நடத்தல் வேண்டும் என்பதே கருத்து.

-ஏ.பி.வி.கோமஸ்-

## ஆன்மீகம்



## ஆடம்பரத்தை விரும்பாத அண்ணல் நபி!

நபி (ஸல்) அவர்கள் தங்களுடைய புதல்வி பாத்திமா (றலி) அவர்களின் வீட்டுக்கு வந்தார்கள். ஆனால், (அவர்களிடம்) உள்ளே செல்லாமல் திரும்பிவிட்டார்கள். அப்பொழுது அலி(றலி) அவர்கள் வந்த சமயம், அவர்களிடம் விஷயத்தை (அதாவது நபி(ஸல்) அவர்கள் வந்ததையும் வீட்டிற்குள் வராமல் திரும்பிச் சென்றதையும்) கூறினார். அதனை அலீ (றலி) அவர்கள் நபியவர்களிடம் கூறியபோது நபி(ஸல்) அவர்கள் "அவரின் தலைவாசலில் பட்டு பர்தாவைப் பார்த்தேன். எனக்கும் துன்யாவிற்கும் என்ன (சம்பந்தம்) கூறினார்கள்." பாத்திமா (றலி) அவர்களிடம் அலி (றலி) வந்து இவ்விபரத்தைக் கூறினார்கள். "அவ்வாறாயின் அவருக்கு (நபி (ஸல்) அவர்களுக்கு) இஷ்டமானதை எனக்கு கட்டளையிடட்டும்" என்று பாத்திமா (றலி) கூறினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் "இன் வீட்டார்களுக்கு (அதை) அனுப்பிவிட வேண்டும். அவர்களுக்கு (அது) தேவை இருக்கிறது" என்று கூறினார்கள்.

(ஆதாரம்:- ஸஹீஹுல் புஹாரி, அறிவிப்பு:- இப்னு உமர் (றலி-அன்ஹுமா.)

நபி(ஸல்) அவர்கள் தனது புதல்வி ஆடம்பரமான முறையில் வாழ்வதைக்கூட விரும்பவில்லை என்பதும், தமது மிதமிஞ்சியதாக உள்ளதை தேவையுள்ளவர்களை அறிந்து அவர்களுக்கு அளிப்பது சிறந்தது என்பதனையும் மேற்சொன்ன சம்பவம் விளக்குகின்றது. எனவே, நபியவர்கள் காட்டிய வழிமுறையினைப் பின்பற்றி நடக்க முயற்சி எடுப்போமாக!

எம்.ஏ.எம்.மசூத் அஹ்மத், காத்தான்குடி-03.

## கவிதைப் போட்டி இல.164

### பரிசுக்குரிய கவிதை

**2000**

ஆறறிவு விலங்குகள்
அடிபட்டு
அழிவது பார்த்து
ஐந்தறிவு விலங்கு
வெட்கி முகம்புதைக்கும்.

சுபா வரன்- கண்டி.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்



**உன்னிடம் வந்தேன்**

ஆயுதமும், அழிவும்தான்- எங்கள்
ஆறறிவில் மிச்சம்
ஆறுதலும், தேறுதலும்-இனி உன்
ஐந்தறிவின் பக்கம்!

எஸ். பி.முத்து-
அல்விஸ் பிளேஸ், கொழும்பு-13.

**தீர்வொன்று தாரீரோ.**

சமரசமாய் வாழ்வதாயின்
சமூகத்தோடு வாழ்ந்திடுவேன்;
சண்டைதான் தினமுமெனின்
மந்தையோடு சென்றிடுவேன்!

பீ.எம்.எம்.அன்ஸார்- புதுதெரு, வெலிகம.

**கலங்கும் நெஞ்சம்.**

இரைபோடும் இனத்திற்கே
இரையாவதே நியதி என்றால்,
திரை போட்டு மறைத்தாலும்
தீராது துயரங்கள்
கரை காணா கலம் போலே
கலங்கும் இள நெஞ்சமே!
விரைவான அமைதி இங்கே
விளைவதுதான் எக்காலம்?

சி. ஆறுமுகம்- உளுகங்கை, மடுல்கெல.

**தேசத்தின் சொத்து**

ஒருபுறம் ஆயுதங்கள்
தேசிய சின்னமென முழங்க!
மறுபுறம் அழுகை யெங்கும்
தேசிய கீதமாய் ஒலிக்க!
நடுவில் நாங்கள் தேசத்தின்
சொத்தாகிப் போனோம்....!

எம்.எம்.ஸன்பர்- கிண்ணியா-06.

**பாலகன் சந்தியில்**

காத்தவரை காற்று என,
காலன் அள்ளிப் போனதனால்,
காலம் என்று கைகொடுக்கும்?
நாளை எண்ணிக் காத்திருக்கும்
பாலகன் உன் வாழ்வு இனி
சந்தியிலோ?
மீதமிந்த ஆடுமட்டும் நிட்சயமாய்
நாளை ஒரு பந்தியிலே!


தர்ஷிக்கா கனகசிங்கம்- கல்லடி, மட்டக்களப்பு.

**தாய்=நாடு**

எந்தக் குழந்தையும்
உயர்திணைதான்-அது
உற்பத்தியாகையிலே
பின்
உயர்திணையாவதும்
அஃறிணையாவதும்-தாய்
நாட்டு நடப்பினிலே.

எஸ்.பிரபா-கொக்காகல.

## கவிதைப் போட்டி இல-167



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை **கவனியுங்கள்** வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி- 31.08.1996

—முகவரி—

கவிதைப் போட்டி இல.167 தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

**ஓடும் மட்டும் ஓடுவோம்.**

தெல்லிப்பளையிலிருந்து தென்மராட்சி
தென்மராட்சியில் இருந்து கிளிநொச்சி
கிளிநொச்சியிலிருந்து முல்லைத்தீவு
மரணிக்குமட்டும் ஓடுவோம் வா!

ஆர்.இளந்திரையன்- தெகிவளை.

## வாசக(ர்) சாலை



முரசு தரும் அரசியல் விமர்சனங்கள் யாவும் உள்ளதை உள்ளபடி நேர்நின்று நோக்குபவன. முல்லை நிலவரம் தொடர்பான 'ரிப்போர்ட்' நேர்த்தியாக இருந்தது. அரசியல் தீர்வுக்கு நேர்ந்துள்ள கதி முரசு வாசகர்களுக்கு ஆச்சரியமல்ல. முன்கூட்டியே அதன் கதி 'எக்ஸ்ரே ரிப்போர்ட்டில்' தெளிவாக்கப்பட்டதல்லவா. நேர்மையான விமர்சனங்களுக்கு ஆயுள் அதிகம். முரசுக்கு வாழ்த்துக்கள்.

வே.செல்லத்துரை, திருகோணமலை.

//

புலிகள் இயக்கத்தாரின் சண்டைகளில் முரசுக்கு என்ன ஒரு மயக்கம்? போர் விறுவிறுப்பாக இருந்தாலும், சமாதானத்தின் பெறுமதியும், உயிர்ப்பும் போரில் கிட்டுமா? புலிகளும், அரசும் போர் ஒன்றே கொள்கையாக பிடிவாதம் பிடிப்பதை சமாதான நெஞ்சங்கள் சகிக்க முடியுமா? போருக்கு விவரணம் தேவைதானா?

கே.இஸ்மாயில், கண்டி.

//

ராஜதந்திரியார் புலிகளோடு அரசு பேசவேண்டும் என்பதை மட்டுமே எடுத்துக்கூறிவருகிறார். புலிகள் முக்கியமான பங்காளிகள்தான். அவர்கள் கலந்துகொள்ளாமல் திருப்தியான தீர்வு கிட்டாது என்பதும் உண்மையே. என்றாலும் தமிழ் கட்சிகளின் பங்கினையும் முற்றாக மறுதலித்து விடமுடியாது. தமிழ் கட்சிகளுக்கு உரிய முக்கியத்துவமும் வழங்கப்படவேண்டும் அப்போதுதானே தமிழர்களின் ஒற்றுமை உறுதிப்படும்.

இ.வீரசிங்கம், வவுனியா.

//

என் அன்பிற்கினிய தினமுரசே!

நீ தாங்கி வரும் அம்சங்கள் அனைத்தும் ரொம்ப பிரமாதம். அதிலும் கொள்ளை ராணியின் உண்மைக் கதை ஆரம்பமே அபாரம். எனது மனமார்ந்த பாராட்டுக்கள் தொடரட்டும் உன் பணி.

செல்வி.எஸ்.யுவராணி, பிட்டகந்தை.

என்றும் எனது அன்பிற்கினிய முரசே!

நீ சுமந்துவரும் அம்சங்கள் அனைத்தும் விலைமதிக்க முடியாத மாணிக்கங்கள்! குறிப்பாக ரசிகன் தரும் பூலான் தேவியின் உண்மைக் கதை. இலக்கிய நயம், காதிலை பூ கந்தசாமி, மற்றும் நாரதர் தரும் எக்ஸ்ரே ரிப்போர்ட் என்பன என்னைக் கவர்ந்தவை. ஜெயா-சசி சாம்ராச்சியம் சிறப்பாக வெளியிட்டு அறிய தந்தமைக்கு எனது இனிதான நன்றி.

இரா:மோகன்ராஜ், பண்டாரவளை.

//

அன்பின் முரசே!

நீ சுமந்து வரும் அத்தனை ஆக்கங்களும் அருமையிலும் அருமை. அந்த நாள் ஞாபகத்தை இந்த நாளில் இனிதாகவே படங்களைப் பிரசுரிப்பது எங்களைக் கவருகிறது. பூலான் தேவியின் கதை ஆரம்பமே ரசிகனின் வித்தியாசத்தில் அட்டகாசம். சிந்தியா புதிய கதைகள் எல்லாம் சொல்லி விடையளிக்கிறார். முல்லைத் தாக்குதல் பற்றிய முழு விபரங் களையும் தந்தமைக்கு நன்றிகள்.

ஸலீம்.எம்.கடாபி, ஸாதாத்,
ஹொறவபொதானை.

//

பூலான்தேவியின் புதையுண்டிருக்கும் வாழ்க்கை சரித்திரத்தை ரசிகனின் பாணியில் புட்டு புட்டு வைக்கும் முரசே நீ கொட்டும் அத்தனை ஆக்கங்களும் தித்திப்பாயிருக்கிறது.

எம்.ஸாலிஹ் அஸீம், புத்தளம்.

//

கொள்ளைராணி பூலான்தேவியின் வாழ்க்கை வரலாற்றை எழுதி வரும் ரசிகனுக்கு நன்றி. முரசு எப்போது வரும் என்று எதிர்பார்க்க வைக்கின்றது.

ராதா சிவபெருமான், வெளிமடை.

என் அபிமான முரசே!

நீ சுமந்துவரும் "கொள்ளைராணி பூலான் தேவி" எங்கள் அனைவரையும் கலக்கிவருவதுடன் அற்புதனின் அரசியல் தொடர் அறிய முடியாத பல உண்மைகளை எல்லாம் அறிய சந்தர்ப்பம் தந்துள்ளது. இது போன்று மேலும் பல சுவைமிகு செய்திகளை சுமந்துவரும் இனிய முரசுக்கு என் பலகோடி வாழ்த்துக்கள்.

ஏ.எம்.ஏ.அஹத்,
பழைய தபாலக வீதி, சாய்ந்தமருது-10.

//

ஆசிரியருக்கு!

தமிழின் பெயரால் வாழ்த்துக்கள்.

ஐயா! தரமான எத்தனையோ காரியங்கள் தொடர்ந்து தந்து கொண்டிருக்கிறீர்கள். எல்லோரையும் திருப்தி தரும் முரசு- எங்கெல்லாமோ திரட்டித் தரும் புதினங்களுக்கும் நன்றி.

வாசகர் வளர்ச்சிக்கு கவிதை முயற்சி நல்லதே! கொலைகார வெறிக் கூட்டமாய் நெறிதவறிப் போனோமே என நோக வேண்டியுள்ளது. எவ்வளவோ நடந்துள்ளது யாழ்ப்பாணத்தில்! அரசியல் தொடர் மூலம்தான் அறிகிறோம்.

அரசியல் கட்டுரைகள் கட்டாயமாக புத்தகங்களாக வெளியிடுங்கள். இவைகள் காலத்தின் கண்ணாடி. தொடர்ந்து முரசொலிக்க வாழ்த்துக்கள்.

சீவரத்தினம், கடற்கரைவீதி,
கல்முனை.3.

//

அன்பின் முரசுக்கு இதயம் கனிந்த வாழ்த்துக்கள், வெளி நாடுகளில் தொழில் புரியும் என் போன்றோருக்கு வாரத்தில் ஒரு தரம் செய்தி சொல்லும் உன்னால் தான் எமக்கு மகிழ்ச்சி.

எஸ்.எச்.சுபியான், குவைத்.

//

ஆசிரியர் அவர்களுக்கு,
அன்புகலந்த வணக்கம்.

வாரா வாரம் முரசு வழங்கும் 'அந்தநாள் ஞாபகம்' பகுதி பழம்பெரும் கலைஞர்களின் நினைவுகளை மீட்டித் தருகிறது. முரசுக்கு நன்றி.

மங்களா வாமதேவன், தங்களா வாமதேவன்,
மட்டக்களப்பு.



படிப்பகம்

www.padippakam.com

# கொழும்புக்கு வெளியிலும் புலிகளின் இலக்குகள்?

# கிழக்கில் ஆட்திரட்டலில் புலிகள் தீவிரம்!

- யாழ்-குடாநாட்டில் கெரில்லாப் போரைத் தீவிரப்படுத்துவது.
- கிழக்கில் தாக்குதல்களை தொடர்வது.
- வடக்கு-கிழக்குக்கு வெளியே தாக்குதல்கள் நடத்துவது.
- இந்திய மத்திய அரசுக்கும் தமிழக அரசுக்கும்-இலங்கைப் பிரச்சனையின் தீவிரத்தை உணர்த்த குறிப்பிட்டளவு அகதிகள் தமிழகம் செல்வதை அனுமதிப்பது.

மேற்கண்ட திட்டங்களுடன் புலிகள் இயக்கத்தினர் தமது நடவடிக்கைகளை விரைவுபடுத்த ஆரம்பித்துள்ளனர்.

யாழ்-குடாநாட்டில் தமது தாக்குதல் சிவில் நிர்வாக இயந்திரத்தைக் குறிவைத்தும், படையினரைக் குறி வைத்தும் நடத்தப்படும் என்று புலிகள் அறிவித்துள்ளனர்.

யாழ்-குடாநாட்டில் புலிகள் இயக்கத்தின் ஊடுருவல்கள் இருப்பதாலும், கெரில்லாத் தாக்குதல்கள், மோதல்கள் தொடர்வதாலும் படையினரும் பாதுகாப்பு ஏற்பாடுகளை இறுக்கமாக்கியுள்ளனர்.

பாதுகாப்பு ஏற்பாடுகள் இறுக்கமாகும் நிலையில் மக்களுக்கும் படையினருக்குமான உறவில் கசப்புக்கள் தோன்றலாம் என்பது புலிகள் இயக்கத்தினரின் எதிர்பார்ப்பாகும்.

**தீவிர சோதனைகள்**

முன்னைவிட தற்போது யாழ்-குடாநாட்டில் பாதுகாப்பு சோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்றே தெரியவருகிறது.

கிழக்கில் சாதகமான இடங்களில் தாக்குதல்களை நடத்துமாறு புலிகளின் அணிகளுக்கு தலைமைப்பீடம் உத்தரவிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை இந்தியாவுக்கு தமிழ் அகதிகள் செல்வதன்மூலம், இந்தியாவில் மட்டுமல்லாமல் சர்வதேசரீதியாகவும் இலங்கை அரசு சங்கடங்களை எதிர்கொள்ளவேண்டி ஏற்படும்.

தமிழகம் செல்லும் அகதிகள் தமக்கு வடபகுதியில் பாதுகாப்பில்லை என்பதால் தான் கடல் கடந்து சென்றதாக கூறுகின்றனர். அதன் மூலம் இலங்கைத் தமிழ் அகதிகள் நிலை தொடர்பாக சர்வதேச பிரச்சாரமும் செய்யமுடிகிறது.

இந்நிலையானது இந்தியாவிலும் வெளி உலகிலும் தம்மீதும் சாதகமான கண்ணோட்டம் ஏற்பட வழிவகுக்கும் என்பது புலிகளின் நம்பிக்கை.

**யுத்தத்தின் சத்தம்**

இதேவேளை ஆகஸ்ட் 1-15 திகதியிடப்பட்ட விடுதலைப் புலிகள் பத்திரிகையில் இலங்கையின் உல்லாசப் பயணத்துறை பற்றி ஒரு ஆய்வு வெளியிடப்பட்டுள்ளது.

அடுத்துவரும் மாதங்களில் கொழும்பில் கேட்கும் யுத்தத்தின் சத்தங்கள், உல்லாசப் பயணத்துறையை கேள்விக்குள்ளாக்கி பாதிக்கும் என்று 'விடுதலைப்புலிகள்' பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்புக்கு வெளியே கண்டி போன்ற பகுதிகளிலும் புலிகளின் கவனம் திரும்பியிருப்பதாக நம்பப்படுகிறது.

சமீபத்தில் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் கண்டியில் வைத்து கைதுசெய்யப்பட்டதாக தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் பின்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள புலிகளின் முகாம் ஒன்றில் கண்டியில் உள்ள பிரதான இடமொன்றின் மாதிரி வடிவம் காணப்பட்டது.

அதனால் புலிகளின் தாக்குதல் இலக்குகள் கொழும்புக்கு வெளியிலும் இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

**கிழக்கில்**

கிழக்கு மாகாணத்தில் இயக்கத்திற்கு ஆட்திரட்டும் நடவடிக்கைகளில் புலிகள் இயக்கத்தினர் தீவிரமாகியுள்ளனர்.

சமீபத்தில் வெளியிடப்பட்ட பிரசுரம் ஒன்றில்; "ஆயுதங்கள் எம்மிடம் தேவைக்கு அதிகமாக உள்ளன. அவற்றைப் பயன்படுத்த ஆட்கள்தான் தேவை" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை ஆனையிறவில் இருந்து 'சத்ய · ஜெய' நடவடிக்கையை ஆரம்பித்த படையினர் தற்போது பரந்தனில் சென்று நிலைகொண்டுள்ளனர். புலிகள் இடைக்கிடையே ஷெல் தாக்குதல்களில் ஈடுபடுகின்றனர்.

ஆட்டிலெறி தாக்குதல்களிலும் புலிகள் ஈடுபட்டிருக்கலாம் என்று தெரிகிறது.

## நிதி திரட்டல் பெயர் மாற்றம்
## 'முல்லைச் சமர்' வீடியோ கசட்

கனடாவில் புலிகள் இயக்கத்தினரின் நடவடிக்கைகள் தொடர்பாக அங்குள்ள புலனாய்வு அமைப்புக்கள் கவனம் செலுத்தி வருகின்றன.

புலிகள் இயக்கத்தில் முன்னர் முக்கிய உறுப்பினர்களாக இருந்து விலகிச் சென்றவர்கள் மூலமாக, கனடாவில் உள்ள புலிகள் இயக்க உறுப்பினர்கள், மற்றும் ஆதரவாளர்கள் தொடர்பான விபரங்களை கனடிய புலனாய்வு அமைப்புக்கள் பெற்றுள்ளன.

அத் தகவல்களை கொடுத்து உதவிய சிவகுமார், நிரஞ்சன் ஆகியோரும் கைது செய்யப்பட்டு வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் கனடாவில் உலகத் தமிழர் இயக்கம் என்ற பெயரில் இயங்கிவரும் புலிகள் இயக்கதினர் தமது நடவடிக்கைகளை அவதானமாக மேற்கொண்டுவருகின்றனர்.

முன்னர் தமிழீழ பாதுகாப்பு நிதிக்கு உதவுமாறு கோரிக்கை விடப்பட்டு நிதி திரட்டலில் ஈடுபட்டனர். தற்போது தமிழீழ நிர்மாணப் பணிகளுக்கும், நிவாரணப் பணிகளுக்கும் உதவுமாறு கோரிக்கை விட்டுள்ளனர். 'பாதுகாப்பு நிதி' என்று அறிவித்தால் கனடா அரசு சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடும் என்று கருதியே அவ்வாறு அறிவித்துள்ளனர்.

இதேவேளை 'முல்லைச் சமர்' தொடர்பான புலிகளின் வீடியோ கசட்டுக்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டுவிட்டன. வெளிநாடுகளில் புலிகள் இயக்க கிளையினர் தமது ஆதரவாளர்களுக்கு அவற்றைக் காண்பித்து வருகின்றனர்.

## கல்முனைச் சம்பவம்! நீதிவிசாரணை கோரப்படும்!
## வெளியாகிக் கொண்டிருக்கும் முரண்பட்ட தகவல்கள்

கல்முனையில் 15.08.96 அன்று அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ரப், அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி ஆகியோர் கலந்துகொண்ட கூட்டமொன்று நடைபெற்றது.

அக்கூட்டத்தில் தற்கொலை தாக்குதல் நடத்த முயன்றதாக இரு இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஒருவர் பெயர்-தில்லைநாயகம் சிவானந்தராஜா, இன்னொருவர்- நாகராஜன் தினேஷ்குமார்.

இருவரும் அமைச்சர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் சைக்கிள் குண்டை வெடிக்கவைக்கச் சென்றதாகவும், அவர்கள் மீது சந்தேகப்பட்டு தடுத்த அதிரடிப்படை இன்ஸ்பெக்டர் ஒருவர் அவர்களை சுட்டுக் கொன்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் கிடைத்த விபரங்கள் வேறுவிதமாக உள்ளன.

இந்த விடயம் தொடர்பாக சமீபத்தில் கொழும்பில் கூடிய ஐந்து தமிழ் கட்சிகளின் சந்திப்பில் பிரஸ்தாபிக்கப்பட்டது. இவ்விடயம் தொடர்பான பூரண விபரங்களை திரட்டுவதுடன், நீதிவிசாரணை நடத்துமாறு கோருவதெனவும் ஐந்து தமிழ் கட்சிகளின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கொல்லப்பட்டவர்களில் ஒருவரான நாகராஜன் தினேஷ்குமார் தமிழ் கட்சி ஒன்றின் உறுப்பினரின் உறவினர் என்றும் தெரியவருகிறது.

இது தொடர்பாக முரசுக்கு கிடைத்துள்ள தகவல்களும் ஏற்கனவே வெளியான செய்திகளை ஒட்டியதாக அமையவில்லை. நீதி விசாரணை ஒன்றை தமிழ் கட்சிகள் கோருமானால் உண்மை என்ன என்று தகவல்கள் வெளியாகலாம் என்று நம்பப்படுகிறது.

மேற்படி இரு இளைஞர்களின் உடல்களை பொறுப்பேற்க யாரும் முன்வரவில்லை. இதற்கும் சில காரணங்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இரு இளைஞர்களின் உறவினர்கள் சிலரிடம் விசாரித்தபோது, குறிப்பிட்ட இருவரும் வெளிநாடு செல்லப்போவதாக தம்மிடம் கூறியிருந்ததாகவும் அவர்கள் காரைத்தீவில் உள்ள ஒரு வெளிநாட்டு முகவரிடம் பணம் செலுத்துப் போவதாகத் தெரிவித்ததாகவும் கூறினர். "இருவரும் புலிகள் இயக்கத்துடன் தொடர்பாக இருந்தனரா இல்லையா என்பது நமக்குத் தெரியாது" என்று மட்டுமே தெரிவிக்கின்றனர்.

## திருமணப்பதிவில் பெயர் தொலைகிறது

(கண்டி நிருபர்)

கண்டி மாவட்டத்தில் சுமார் ஒன்றரை இலட்சம் தமிழ் மக்கள் வாழ்கின்றனர். கண்டி மாவட்டத்தில் இதுவரை தமிழர் எவரும் திருமணப் பதிவாளராக நியமிக்கப்படவில்லை. இதனால் தமிழ் மக்கள் ஆழ்ந்த அதிருப்தி தெரிவித்து வருகின்றனர்.

தமிழ் மக்களின் விவாகப்பதிவுகள் சிங்கள விவாகப்பதிவாளரினால் சிங்கள மொழியிலேயே செய்யப்படுகின்றன. அதனால் பெயர்கள் தவறுதலாக பதிவு செய்யப்படும் நிலையும் ஏற்படுகிறது.

மலையகத் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு அமைச்சரும், பிரதி அமைச்சரும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றனர். அவர்கள்கூட கண்டி மாவட்ட தமிழ் மக்களின் நீண்டகால தேவையை நிறைவேற்ற முடியாதவர்களாக உள்ளனர்.

கண்டி மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் மக்கள் தமது திருமணப் பதிவுகளை முஸ்லிம் விவாகப்பதிவாளர் மூலம் தனித் தமிழ் மொழியில் மேற்கொண்டுவருகின்றனர்.

கண்டி மாவட்ட மலையக தமிழ் மக்கள் தமது இனத்தைச் சேர்ந்த ஒருவராவது திருமணப்பதிவாளராக நியமிக்கப்படுவது எப்போது என்று ஆதங்கத்துடன் உள்ளனர்.

## கண்டியில் வெளியீட்டு விழா

(கண்டி நிருபர்)

கண்டி முஸ்லிம் வர்த்தகசங்கத்தின் மாத வெளியீடான "முஸ்லிம் நேசன்" சஞ்சிகை வெளியீட்டு விழா எதிர்வரும் 25.8.96 ஞாயிறு மு.ப.9.00 மணிக்கு கண்டி ஒறாபிபாஷா கலாசார நிலைய மண்டபத்தில் நடைபெற உள்ளது.

பிரஸ்தாப சங்கத்துடன் கண்டி சுதந்திர பத்திரிகையாளர் சங்கம், இஸ்லாமிய எழுத்தாளர் இயக்கம் என்பன இணைந்து இவ் விழாவை நடாத்துகின்றன.

கலாசார, சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் ஜனாப் எஸ்.எச்.எம். ஜெமீல் இதில் பிரதம சொற்பொழிவாளராகவும், பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி துரை மனோகரன் ஆய்வுரையாளராகவும் கலந்து கொள்வார்கள்.

செய்தியாளர்கள் மற்றும் கல்விமான்கள், எழுத்தாளர்கள் ஆகியோரும் இதில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டுள்ளனர். பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஜனாப் எம்.எஸ்.எம். அனஸ் விழாவுக்குத் தலைமை தாங்குவார்.

## அகதிகள் வெளியேறப் புலிகள் அனுமதி!

இந்தியாவுக்கு சென்று கொண்டிருக்கும் தமிழ் அகதிகளை புலிகள் இயக்கத்தினர் தடுக்கவில்லை.

தமிழ்நாட்டுக்கு அகதிகள் செல்வதன் மூலமாக தமிழக அரசுக்கும், இந்திய மத்திய அரசுக்கும் இலங்கைத் தமிழர் விடயத்தில் கவனம் செலுத்தவேண்டிய கட்டாயம் ஏற்படும் என்று புலிகள் இயக்கத்தினர் கருதுகின்றனர்.

தமிழகம் சென்ற அகதிகளில் சிலர் இலண்டன் பி.பி.சி. தமிழக செய்தியாளருக்கு சமீபத்தில் பேட்டியளித்திருந்தனர்.

தங்களில் சிலரை புலிகள் இயக்கத்தினர் தமது படகுகளில் ஏற்றிக்கொண்டுவந்து இந்திய மீன்பிடி வள்ளங்களில் ஏற்றிவிட்டுச் சென்றதாக அகதிகள் கூறியிருந்தனர்.

தமிழ்நாட்டுக்கு செல்லுமாறு புலிகள் நேரடியாகக் கூறுவதாக எத்தகவலும் கிடைக்கவில்லை. ஆனால் தமிழ்நாட்டுக்கு செல்ல விரும்பும் அகதிகளை தடுக்காது இருப்பதுடன், தாமாக செல்ல விரும்பும் அகதிகளுக்கு உதவியும் செய்கிறார்கள்.

அகதிகள் பெருந்தொகையாக சென்றால் தமிழக மக்களின் அனுதாபமும் திரும்பும். தமிழக அரசும் தவிர்க்க முடியாமல் இலங்கைத் தமிழர் விவகாரம் பற்றி பேசியே ஆகவேண்டும்.

இலங்கையில் இராணுவ நடவடிக்கை தொடர்ந்தால் இந்தியாவில் மீண்டும் இலங்கைத் தமிழ் அகதிகளின் எண்ணிக்கை அதிகமாகலாம். எனவே இந்திய அரசு அகதிகள் வரவைக் கட்டுப்படுத்த வேண்டுமானால், இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகள் தொடர்வதையிட்டு கவனம் செலுத்த வேண்டி ஏற்படலாம் என்பதே புலிகளின் எண்ணமாகும். அதனால்தான் அகதிகள் வெளியேற்றத்தை புலிகள் இயக்கத்தினர் தடுக்கவில்லை.

## வாகனக்கடத்தலைத் தடுக்க வீதியின் குறுக்கே அகழி
## மட்டக்களப்பில் பற்றரியின்றி ஓடும் பஸ்கள்!

(ஏறாவூர் நிருபர்)

கிழக்கில் அரச நிர்வாகச் சீர்குலைப்பில் புலிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில் பொதுப்போக்குவரத்து, மற்றும் தொலைத்தொடர்பு, மின்மாற்றிகள், அரச, தனியார் வாகனங்கள் என்பவற்றை முடக்குவதிலும் பறிப்பதிலும் புலிகளின் கவனம் திரும்பியிருக்கிறது.

கடந்த இரு வாரங்களில் மட்டக்களப்பு-சித்தாண்டிப் பகுதியில் புலிகள் பல வாகனங்களைக் கடத்திச்சென்றுள்ளனர்.

இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான ஜீப் வண்டியொன்று, கால் நடை மிருக வைத்தியப் பிரிவினரின் பிக்-அப் வாகனமொன்று, திருமலை- மட்டக்களப்பு போ.வ.சேவையிலீடுபட்ட (திருக்கோணமலை டிப்போ) இ.போ.ச. பஸ் ஒன்று, தனியாருக்குச் சொந்தமான வேன்கள் இரண்டு, (இவற்றிலொன்று பாகிஸ்தானைச் சேர்ந்த பிரமுகர்களுடையது.) என்பனவே கடந்த இரண்டு வாரங்களில் கடத்தப்பட்ட வாகனங்களாகும். இதற்கு முன்னரும் அநேக வாகனங்கள் சித்தாண்டிப் பகுதியில் புலிகளால் கடத்தப்பட்டிருந்தன.

வாகனங்கள் கடத்திச் செல்லப்படுவதைத் தடுக்க படைத்தரப்பு எடுத்துள்ள நடவடிக்கையின் ஒரு பகுதியாக சித்தாண்டி முருகன் கோயில் வீதியின் குறுக்கே 10 அடி ஆழத்திலும் 6 அடி அகலத்திலும் பாரிய குழி தோண்டப்பட்டு வாகனங்கள் செல்ல முடியாதவாறு அகழி அமைக்கப்பட்டுள்ளது.

இது தவிர பல வாகனங்களிலிருந்து புலிகள் இதே பகுதியில் வாகன பற்றரிகளை எடுத்துச் சென்று விடுகின்றனர். இதன் காரணமாக படையினர் வீதிப் பாதுகாப்பை வழங்குமுன் காலையில் நேரத்துடனேயே சேவையிலீடுபடும் பஸ்கள் பற்றரிகளின்றிச் செல்கின்றன. ஆட்களால் தள்ளிச் செல்லப்பட்டே பஸ்ஸினது இயந்திரம் இயக்கப்படுகிறது. பஸ்ஸைத் தள்ளிச்சென்று ஸ்டார்ட் எடுப்பதற்கு போதிய ஆட்களைத் தேடிப் பிடிப்பதில் பஸ் சாரதிகளும் நடத்துநர்களும் சலித்துப் போய்விடுகிறார்கள்.

இதனிடையே கிழக்கில் மின்மாற்றிகளைத் தகர்த்தெறிவதிலும், மின் கம்பங்களைச் சாய்த்து விடுவதிலும் புலிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். சமீப காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகள் சேதமாக்கிய மின்மாற்றிகளின் எண்ணிக்கை எழுபதைத் தாண்டி விட்டதாக இலங்கை மின்சார சபையின் மட்டக்களப்புப் பொறியியலாளர் தெரிவிக்கிறார்.

## கொரிய விமானங்கள் கொழும்பில் தரிக்காது

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்கா தென்கொரியாவுக்கு விஜயம் செய்து திரும்பியிருக்கிறார்.

தென் கொரியா- இலங்கை அரசுக்கு உதவ முன்வந்துள்ளது. இதனையடுத்து திருக்கோணமலையில் தென் கொரிய பிரஜைகள் தங்கியிருந்த இல்லத்துக்கு கைக்குண்டு வீசப்பட்டது. அதனால் திருமலையில் தொலைத் தொடர்பு பணிகளில் ஈடுபட்டிருந்த தென் கொரிய ஊழியர்கள் பாதுகாப்புக் கருதி கொழும்பு திரும்பியுள்ளனர்.

தென் கொரியா இலங்கை அரசுக்கு உதவிவருவதால் புலிகளின் கோபம் இலங்கையிலுள்ள தென் கொரிய நிறுவனங்கள்மீது திரும்பலாம் என்று கருதப்படுகிறது. தற்போது தென் கொரிய சரக்கு விமானங்கள் தரித்து செல்லாமையால் இலங்கைக்கு அந்நிய செலாவணி நஷ்டம் ஏற்படும்.

அதன் பின்னரே திருமலையில் தங்கியிருந்த தொலைத் தொடர்பு பணியாளர்களை எச்சரிக்கும் வகையில் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த நடவடிக்கைகளை அடுத்து கொழும்பு கட்டுநாயக்கா விமானநிலையத்தில் தமது சரக்கு விமானங்கள் தரித்து செல்லாது என்று தென்கொரியா அறிவித்துள்ளது.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தரித்துச் செல்லும் சரக்கு விமானங்களில் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் ஆடைகள் அமெரிக்காவுக்கு அனுப்பிவைக்கப் படுவதுண்டு.

## தமிழகம் செல்லத் தயார்நிலை!
## அவசரமாகச் சொத்து விற்பனை!

(மன்னார் நிருபர்)

மன்னார்-பேசாலையிலிருந்து தமிழ் நாடு சென்ற அகதிகளின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டிவிட்டது.

இப்பகுதியிலிருந்த அகதி முகாம்களில் தங்கியிருப்பவர்களே பெரும்பாலும் தமிழகம் சென்றுள்ளனர். மீன்பிடிப்படகுகள் மற்றும் வள்ளங்கள் மூலமாக இந்த அகதிகள் தமிழகம் செல்வதாகக் கூறப்படுகின்றது.

பேசாலைப் பகுதியில் அடிக்கடி மோதல்கள் இடம்பெற்றுவருவதாலேயே பலர் இவ்வாறு இடம்பெயர்வதாகத் தெரிகிறது. 19.08.1996 வரை மன்னார் தீவிலுள்ள ஏனைய பகுதிகளிலிருந்து தமிழகம் சென்றவர்கள் மிக மிகக் குறைவாகும்.

எனினும் இங்குள்ள பலர் தமிழகம் செல்வதற்குத் தயார் நிலையிலுள்ளனர். இவர்கள் தமக்குச் சொந்தமான கால் நடைகள் மற்றும் சொத்துக்களை குறைந்த விலைக்கு விற்று வருகின்றனர். இதனால் தமிழகம் செல்பவர்களின் எண்ணிக்கை இம்மாத இறுதியளவில் பல மடங்குகளால் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை தமிழ் மக்கள் தமிழகம் செல்வது தொடர்ந்து நடைபெறுமானால் இப்பகுதியில் மீள் குடியேறியுள்ள முஸ்லிம்களும், தமிழ்நாடு மற்றும் கற்பிட்டி ஆகிய இடங்களுக்கு இடம்பெயரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க, எருக்கலம்பிட்டிப் பகுதியில் புதிதாக பாரிய இராணுவ முகாமொன்று அமைக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## குண்டுத்தாக்குதலுக்கு அறிவித்தல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினரால் துண்டுப்பிரசுரமொன்று விநியோகிக்கப்பட்டுவருகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வவுணதீவுப் பகுதியில் உள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு அப்பிரசுரம் மூலமாக குண்டுத் தாக்குதல் முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அப்பிரசுரத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

"கன்னங்குடா, கொக்கட்டிச்சோலை, இலுப்படிச்சேனை, கொத்தியாபுல, காஞ் சிரங்குடா, பெரியகொலன்னமடு ஆகிய பிரதேச மக்களே!

எதிர்வரும் சில தினங்களில் பாதுகாப்புப் படையினரான நாங்கள் எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தினரின் முகாம்களுக்கு குண்டுத் தாக்குதல்களை மேற்கொள்ள இருக்கிறோம்.

எல்.ரி.ரி.ஈ.யினரின் முகாமுக்கு அருகாமையில் உள்ள பொதுமக்கள், முகாமில் இருந்து ஒரு மைல் தூரத்திற்கு அப்பால் செல்லுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

எல்.ரி.ரி.ஈ.யினரின் பயங்கரவாதச் செயல்களினால் நாம் இப்படியான நடவடிக்கை எடுக்க நேர்ந்துள்ளது.

சமாதானத்தை விரும்பும் தமிழ் மக்களே! இப்படியான செயல்களுக்காக எமது மன வேதனையைத் தெரிவித்துக் கொள்கிறோம்."

இவ்வாறு அப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இராணுவத்தில் பலியான முதல்பெண்

இலங்கையின் 13 வருட கால வடக்கு-கிழக்கு உள்நாட்டு போரில் இராணுவப் படைத்தரப்பில் கொல்லப்பட்ட முதலாவது பெண் படை வீரராக செல்வி H.M. ரூபாவதி பதியப்பட்டுள்ளார்.

இம்மாதம் 09ம் திகதி கீரிமலையில் இடம்பெற்ற சண்டையொன்றின் போதே இவர் கொல்லப்பட்டிருந்தார். 24 வயதுடைய செல்வி ரூபாவதி 1995 ஆம் ஆண்டு இராணுவப் படையில் இணைந்து கொண்டார்.

அனுராதபுரத்தைச் சேர்ந்த இவருக்கு 7 மூத்த சகோதரிகளும், பெற்றோருமுள்ளனர். கடைசியாக இவர் வீட்டுக்கு வந்திருந்த போது பெற்றோருக்கு ஒரு தொலைக்காட்சிப் பெட்டி வாங்கிக் கொடுத்து விட்டு, தான் அடுத்த முறை வரும்போது வீட்டிற்கு மின்சார இணைப்பு பெற்றிருக்க வேண்டுமென்று பெற்றோரிடம் கூறியிருந்தாராம்.



படிப்பகம்

www.padippakam.com

# அதிரடிப்படையினரின் சீருடைகள் அபகரிப்பு

கடந்த ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் பொத்துவில் பகுதியில் உள் தாண்டியடி விசேட அதிரடிப் படையினர் தங்களது இராணுவச் சீருடைகள் 49 ஐ சலவை செய்வதற்காக சலவைத் தொழிலாளியிடம் கொடுத்திருந்தனர்.

இவ்விடயம் அறிந்து அங்கே சென்ற தமிழீழ விடுதலைப் புலிகள் அந்த 49 இராணுவச் சீருடைகளையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

சீருடை எடுத்துச் செல்லப்பட்ட இரண்டு தினங்களுக்குப் பின்னர் திருக்கோவிலை அடுத்துள்ள வினாயகபுரம் எனும் கிராமத்தில் அமைந்திருந்த டிரான்ஸ்போமர் விசேட அதிரடிப் படை உடையணிந்தோரால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.

இக்காரியம் விசேட அதிரடிப் படையினரால் தான் செய்யப்பட்டது என்று இப்பகுதி மக்களால் கூறப்பட்டு வந்தது, ஆனால் விடயம் புலிகளால் தான் செய்யப்பட்டதென இப்போது தெரிய வந்துள்ளது.

இதையறிந்த மக்கள் இப்பகுதி புலிகளின் பொறுப்பாளரிடம் டிரான்ஸ்போமர் உடைக்கப்பட்ட காரணம் என்னவெனக் கேட்ட போது தவறுதலாக நடைபெற்ற விடயம் இதுவென்றும், இதற்குக் காரணமாகவிருந்தவருக்கு தண்டனை தங்களது இயக்கத்தினால் வழங்கப்பட்டுள்ளதெனவும், இனிமேல் இப்படியான சம்பவம் நடைபெறாதெனவும் ஊர்ப் பெரியார்கள் தலையிட்டு புதிய டிரான்ஸ்போமர் பெற நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளனர்.

இப்பகுதி மக்கள் புதிய டிரான்ஸ்போமர் பெறவும் அதனை இனிமேல் திருக்கோவில் விசேட அதிரடிப் படை முகாமில் வைத்துப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுத்திருப்பதாக அறிய முடிகின்றது, ஆனால் அரசினால் இதற்கு எதுவித பரிகாரமும் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# உத்தரவை மீறியதால் பஸ் எரிப்பு

**9.8.1996ம்** திகதியன்று அக்கரைப்பற்று மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சடைக்குச் சொந்தமான பஸ் வண்டியொன்று புலிகளால் தீ மூட்டி எரிக்கப்பட்டது.

பொத்துவில் வரைக்கும் சென்ற இரண்டு பஸ்வண்டி முன்னர் புலிகளால் தீமூட்டி எரிக்கப்பட்ட விடயம் தெரிந்ததொன்றே.

முன்னர் எரிக்கப்பட்ட இரண்டு பஸ் வண்டிகளும் விசேட அதிரடிப் படைக்கு உணவு மற்றும் இராணுவப் பொருட்களையும் கொண்டு செல்கின்றது எனக் காரணங்காட்டி எரிக்கப்பட்டது.

இச்சம்பவம் நடைபெற்று பலமாதங்களாக இப்பகுதிக்கு டிப்போவினால் எவ்வித பஸ் வண்டிகளும் சேவைக்கு விடப்படவில்லை.

இருந்தும் மக்களின் நலன்கருதி கடந்த மூன்று வாரங்களாக கோமாரி வரைக்கும் அக்கரைப்பற்று பஸ் டிப்போவினால் பஸ் சேவைக்கு விடப்பட்டது.

அவ்வேளையில் இப்பஸ் சேவையை பொத்துவில் வரைக்கும் நடாத்துமாறு தமிழீழ விடுதலைப் புலிகளால் அக்கரைப்பற்று மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்து சபைக்கு கடிதம் மூலம் அறிவித்தல் கொடுக்கப்பட்டது.

கடிதம் அக்கரைப்பற்று முகாமையாளர் வாலா என்பவருக்கே விடுக்கப்பட்டிருந்தும் அவர் நடவடிக்கையில் ஈடுபட்டதாகத் தெரியவில்லை.

இதனால் ஆத்திரம் கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் கோமாரி வரைக்கும் சென்ற பஸ் வண்டியை தாண்டியடி ரோட்டுப் பிள்ளையார் கோவிலடியில் பயணிகளை இறக்கிவிட்டு வண்டியைக் கொண்டு சென்று பின்னர் எரித்ததாகத் தெரியவருகின்றது.

# சாம்பல் தீவில் குடிக்க நீரில்லை

(திருமலை நிருபர்)

கடும் வரட்சி காரணமாக சாம்பல்தீவு, சல்லிக் கிராமங்களில் குடிநீருக்குக் கூடத் தட்டுப்பாடு நிலவுகிறது.

அலைந்து குடிநீர் பெற்றுக் கொள்வது இங்குள்ள மக்களுக்கு அன்றாடக் கடமைகளில் ஒன்றாகிவிட்டது.

அந்தப் பகுதிகளுக்கு நீர்விநியோகச் சபையோரால் குழாய் நீர் வசதிகள் செய்யப்பட்டிருக்கின்ற போதிலும் மக்கள் தேவைக்கு அவை போதாததாகவே இருக்கின்றது.

வீடுகளுக்கு குழாய் நீர் வசதி கேட்டுப் பலர் விண்ணப்பித்தும் அவர்களின் தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலையிலேயே நீர் விநியோகப் பகுதியார் இருக்கின்றார்கள்.

"வீடுகளுக்கு வழங்க முடியாவிட்டாலும், தெருக்களில் குழாய் நீர் பெறும் வசதியைக் கூட்டித் தந்தாலாவது தற்போது பெரிய பணியாகும்." என ஊர்ப்பிரமுகர் ஒருவர் முரசுக்குத் தெரிவித்தார்.

பிள்ளை குளப் பாலத்தில் குழாய் உடைந்து ஏராளமான நீர் ஆற்றில் கலக்கிறது. இங்கே நாங்கள் நாவரண்டு காய்கிறோம் என்றும் அவர் கவலையுடன் கூறினார்.

# தொடரும் அவலங்கள்



அழகசாமி குமாரசிங்கம் என்பவரை கடந்தவருடம் (1995) ஜூலை, 17ம் திகதியிலிருந்து காணவில்லை, பின்னர் இவரது உடல் கொழும்பு கடலேரியில் மிதந்தது.

மேலும் 62 பேர் (பெரும்பாலும் இளைஞர்கள்) ஏப்ரல், 1995 முதல் காணாமல் போய்விட்டார்கள். இத்தகவலை மனித உரிமைகளுக்கான சர்வதேசப்பணிமனை வெளியிட்ட 14 ஆகஸ்ட் 1996 இற்கான அறிக்கை, தெரிவித்துள்ளது.

இராணுவம், விசேட அதிரடிப்படை, இனங்காணப்படாத படையினர், ஊர்காவல் படை மற்றும் தமிழ் இயக்கங்கள் சில என்பவற்றால் இக்கைதுகள் இடம்பெற்றுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குண்டுப்புரளி மத்தியில் பக்த வெள்ளம்

மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயத் திருவிழா நடந்த வேளையில் 11.08.96 அன்று நடைபெற்ற குண்டு வெடிப்பில் ஆலயபொதுமக்களில் 33 பேரும் பொலிசார் 4 பேரும் காயங்களுக்குள்ளானார்கள். குண்டு வெடித்த பதற்றம் ஒரு புறம் இருந்தபோதிலும் மறுதினமான இறுதி நாளன்று ஆயிரக்கணக்கானோர் ஆலயத்திற் கூடியிருந்தனர். கூடுதலான அரச, தனியார் பஸ்சேவைகள் நடத்தப்பட்டன. குண்டுப்பீதி நிலவியபோதிலும் மக்கள் அங்கு ஆயிரக்கணக்கில் அலை திரண்டிருந்தது அனைவருக்கும் ஆச்சரியத்தைத் தந்தது.

குண்டு வெடித்த அதே தினம் மட்டக்களப்பு- திருப்பெருந்துறையில் தற்கொலைக் குண்டுத்தாரியான புலி உறுப்பினர் ந.குருகுலசிங்கம் என்பவர் பிடிப்பட்டார். பின்னர் அவர் தங்கியிருந்த வீட்டிலிருந்து ஆயுதங்களும் மீட்கப்பட்டதாகத் தெரிகிறது. இரகசிய தகவல் ஒன்றை அடுத்தே இச்சம்பவம் நடைப்பெற்றது.

09.08.96 அன்று இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான ஜீப் வண்டியொன்றைப் புலிகள் சித்தாண்டியில் வைத்துக் கடத்திச் சென்றுள்ளனர். கடந்த வாரம் காத்தான்குடியிலிருந்த இரு மாற்றிகளைப் புலிகள்தகர்த்து விட்டதாக மட்டக்களப்பு மின்சாரப் பொறியியலாளர் தெரிவித்தார். இதுவரை மட்டக்களப்பில் 70 இற்கு மேற்பட்ட மின்மாற்றிகளைப் புலிகள் தகர்த்திருப்பதாகவும், அவ்வாறு மின்மாற்றி தகர்க்கப்பட்ட பகுதிகளிலுள்ள மக்கள் மின்சார வசதியின்றி பெரும் சிரமத்தை அனுபவிப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# வேலி நடக்கும் அதிசயம்!

## நகரசபையே! நடவடிக்கை என்ன?

(திருமலை நிருபர்)

ஆடு நடக்கும்: மாடு நடக்கும். ஆனால் வேலி நடக்குமா? திருக்கோணமலை நகர எல்லைக்குள் கூட பல இடங்களில் குறிப்பாக தில்லை நகரில் வேலிகள் சுதந்திரமாக நடக்க ஆரம்பித்துள்ளன.

கிறவல் பாதை மணலாகிப்போன நிலையில் பல தெருவோரத்து வேலிகள் மெதுமெதுவாகப் பாதையை நோக்கி நடைபோடத் தொடங்கியுள்ளன. அரை அடி ஒரு அடி இரண்டடி என்றும் அதற்கு மேலும் இவை வேகமாக நகரத் தொடங்கியுள்ளன.

ஆரம்பத்தில் இரண்டொரு கம்புகள். பிறகு பழைய கிடுகுகள் என்று தொடங்கி இரண்டு அல்லது மூன்று வாரங்களில் இவ்வேலிகள் பாதையை அபகரித்துக் கொள்வதால் வாகனங்கள் கொண்டு செல்ல முடியாத அளவுக்குத் தில்லை நகர் வீதிகள் சுருங்கிப் போயுள்ளன.

இது போதாதென்று குடிநீர்க்குழாய் பதிக்கக் கொந்தராத்து எடுத்த தில்லை நகர் கிராமோதய சபையும் வெட்டிய பள்ளங்களை சரியாக மூடாமல் ஆங்காங்கே விட்டு வைத்திருப்பதால் பாதசாரிகள் இரவில் கால் கையை உடைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

வேலி நகர்வுகள் பற்றி நகராட்சி மன்றத் தலைவருக்குப் பலர் பலதடவைகள் முறையிட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஊரைச் சுருட்டி உலையில் போடும் குடியிருப்பாளர் விடயத்தில் நகரசபை நேரடியாகத் தலையிட்டு வேலியை பழைய இடங்களுக்கு நகர்த்தாவிட்டால் வீதிகள் தேய்ந்து ஒற்றையடிப் பாதைகளாகப் போய் விடக்கூடும்.

# புலிகளின் சிகிச்சை

திருக்கோவில் பகுதியில் உள்ள வினாயகபுரம் எனும்கிராமத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளை அடிக்கடி காணக்கூடியதாகவுள்ளது, விசேட அதிரடிப் படையினரும் சில வேளை இப்பகுதிக்குச் சென்று வருவதுண்டு புலிகளின் நடமாட்டமுள்ள பகுதிகளுக்கு விசேட அதிரடிப் படையினர் செல்வது குறைவாகவுள்ளது. நேரில் சந்திக்கும் சமயங்களில் மோதல்களும் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றது.

கடந்த வாரம் வினாயகபுரத்தில் உள்ள வீடொன்றில் புலிகள் தங்கியிருந்தவேளை தவறுதலாக தங்களது துப்பாக்கி வெடித்ததனால் அவ்வீட்டில் இருந்த பெண்ணொருவர் காயத்துக்குள்ளானார். இப்பெண்ணை உடனடியாக தங்களது காட்டில் உள்ள முகாமுக்கு அழைத்துச் சென்று சிகிச்சை செய்து காயத்தைக் குணப்படுத்தி வீட்டுக்கு கொண்டு வந்து விட்டுச் சென்றுள்ளனர்.

இதையறிந்து திருக்கோவில் விசேட அதிரடிப்படையினர் முதலில் (பெண் இல்லாத வேளை) வீட்டுக்காரரை அழைத்து விடயத்தைக் கேட்டனர். விசாரணையின் பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். பின்னர் காயமடைந்த பெண் வீட்டுக்கு வந்ததும் அவரையும் அழைத்து விசாரித்தனர் அதிரடிப்படையினர். பின்னர் அவரும் விடுதலை செய்யப்பட்டார்.

## பிறந்த நாள் வாழ்த்து

இந்திரகீத் பிரசன்னா சுந்தரம்



மடுல்களை, மாவுசா மேல்பிரிவில் வசிக்கும் சுந்தர் — தேவி தம்பதிகளின் செல்வப் புதல்வன் **இந்திரகீத் பிரசன்னா சுந்தரம்,** தனது முதலாவது பிறந்த நாளை **18.08.96** அன்று தனதில்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடினார். இவரை சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென அம்மா, அப்பா, அம்மம்மா, அம்மப்பா, அப்பம்மா, அப்பப்பா, மாமாமார், மாமிமார், சித்திமார், சித்தாமார், அக்காமார், ஆச்சிமார், மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் வாழ்த்துகின்றனர்.


**தேவை**

கீழ்வரும் இடங்களுக்கு தினமுரசு விற்பனை முகவர்கள் தேவைப்படுகின்றார்கள்.

விண்ணப்பிக்கவும்

Kahatagasdigiliya, Hemmathagama, Dambadeniya, Deraniyagala, Polgahawala, Welikanda, Hakmana, Hettipola, Hali-Ela, Kegalle, Ragama, Ampara, Welipanna, Akuressa, Nivitigala, Kalawana

விநியோக முகாமையாளர்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772, கொழும்பு.


## விளம்பரப் பகுதி


**என்றும் சந்திக்கலாம்**

எங்களது வாடிக்கையாளர்களின் வீண் சிரமத்தையும் அலைச்சலையும் கருத்தில் கொண்டு திரு. P.K சாமி அவர்களிடம் நுவரெலியாவிலும் கொழும்பிலும் வரும் வாடிக்கையாளர்கள் நேரடியாக அவரவர் பிரச்சனைகளைக் கூறி தீர்வுக்கான புதுமுறையாக செட்லைட் நெட்வேர்க், T.V. மூலம் திரு.P.K. சாமியுடன் கலந்துரையாடலாம்.


**20வது பிறந்தநாள் வாழ்த்து**

சவூதி அரேபியாவில் இருக்கும் C. சத்தியவாணி எதிர் வரும் 28.08.96 அன்று தனது பிறந்த தினத்தை கொண்டாடுகிறார். அவரை கிரேகிளி எஸ்டேட்டை சேர்ந்த சிவகுமார், மோகனதாஸ், முரளி, அருளான், வசந்தகுமார், உருத்திரா, இராஜரத்தினம் ஆகியோர் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.


**உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்**

எப்பேர்ப்பட்ட வியாதியாயினும் சரி, உடனே என்னை சந்தியுங்கள்



**K. சிவசுப்பிரமணியம்**
M.I.H. Ind. S.M.P.

எவ்வளவு நாள்பட்ட வியாதியானாலும் சரி, காலதாமதம் செய்யாமல் கீழ்கண்ட வியாதிகளுக்கு நேரில் கண்டு ஆலோசியுங்கள், நேரில் வர முடியாது போனால் கடிதம் மூலம் தெரிவித்துக் கொள்ளுங்கள்.

ஆஸ்மா, க்ஷயம், இளைப்பு, பீனிசம், தலைவலி, மலேரியா, கண்டமாலை, சொறி, சிரங்கு, பாண்டு, சோகை, காக்கை வலிப்பு, வாதம், நீரிழிவு, மூலரோகங்கள், இருதய நோய்கள், இடுப்புவலி, நெஞ்சு எரிவு, குடல் வாய்வு, நரம்புத் தளர்ச்சி, வீரியக் குறைவு, இரத்தமின்மை, சொப்பன ஸ்கலிதம், பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு, மாசம் முன், பின் காணுதல், சூதக வலி, பிள்ளை இல்லாமலிருத்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

வாரநாட்களில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் விடுமுறை தினங்களில் காலை 9 மணி முதல் பகல் 12 மணி வரை வைத்தியரை சந்திக்கலாம்.

**முருகானந்தா வைத்தியசாலை**
NO. G/02, கொழும்பு மத்திய சுப்பர் மார்க்கெட், (நிலமாடி) மீன்கடை மேல், கொழும்பு-11



**Brightன் தபால் மூலம் கல்வித்திட்டம்**

மூன்றே மாதங்களில் ஆங்கிலம்/ சிங்களம் பேச, எழுத, வாசிக்க கற்றுத் தரப்படும் விபரங்களுக்கு கீழ்க்காணும் விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க.

பெயர் ..........

விலாசம் ..........

BRIGHT BOOK CENTRE (PVT) LTD
S-27, FIRST FLOOR, P.O.BOX 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX
COLOMBO 11. TEL : 434770



**காண்டம்**

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

**ரிஷி. S.மணி**

மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

சந்திரன்
144 2/1 காலிவீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
T.P: 586218, 078-63611
Fax: 503030



**ரிஷி அஜமாமிச லேகியம்**
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 195/=,105/=
தங்க பஸ்பம் கலந்தது 990/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 890/=

**ஞான சுந்தர வைத்தியசாலை**
187, செட்டியார் தெரு, கொழும்பு 11, போன்: 421398



**மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHIATRIST)**

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி, உங்களை நீங்களே வெற்றி கொள்ள பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

இளம் சமுதாயத்தினர் மெலிந்து, சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்களை மனோதத்துவ சிகிச்சை மூலம் உடனே நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம்.

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா", ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு.

ஜூலை 19 முதல் 31 வரை **Dr.P. ARUMUGAM,** AHMED TOURIST INN. BANG BANG BULDING NO: 10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST..) COLOMBO 11. T.P. 436383, 436390 Fax:436439
ஒகஸ்ட் 4, 5 Dr. முகைதீன் டிஸ்பென்ஸரி, ஒட்டமாவடியிலும், ஒகஸ்ட் 11, 12, 13 தினங்களில் கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் **DR. P. ARUMUGAM** No: 50, TISSA WEERASINGAM SQ.. BOUNDRY ROAD. BATTICALOA விலும் சந்திக்கலாம்.




படிப்பகம்

www.padippakam.com

# இரகசியப் பயிற்சி காட்டுக்குள் இலக்கு

அமெரிக்காவின் சிறப்புப் படைப் பிரிவொன்று இலங்கை இராணுவத்தினருக்கு பயிற்சி கொடுத்துவருகிறது.

'கிறீன் பெரட்ஸ்' என்பது அந்தச் சிறப்புப் படையணியின் பெயர்.

காடுகளுக்குள் யுத்தம் செய்வது எப்படி? இனம்காணப்பட்ட இலக்குகளை தாக்குவது எப்படி? என்பவையும் பயிற்சியில் முக்கியமான அம்சங்கள்.

இவ்வாறான தகவல்கள் சமீபகாலமாக வெளியாகிக்கொண்டிருக்கின்றன.

வெளிநாட்டுப் பத்திரிகைகளிலும், தென்னிலங்கை ஆங்கிலப்பத்திரிகைகளிலும் அத் தகவல்கள் வெளியிடப்பட்டன.

புலிகளும் அமெரிக்காமீது குற்றம் சாட்டியுள்ளனர். புலிகளின் குற்றச்சாட்டுக்கு இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகத்திலுள்ள அரசியல் பிரிவு பதில் சொல்லியுமிருக்கிறது.

ஆயுதங்களும், பயிற்சியும் வழங்குவது உண்மை. எனினும் அதற்கும் இலங்கையில் நடைபெறும் யுத்தத்துக்கும் இடையில் ஒரு தொடர்புமில்லை என்று அமெரிக்க தூதரக வட்டாரங்கள் கூறியுள்ளன.

இந்த விளக்கம் ஒரே குழப்பமாக இருக்கிறது. யுத்தம் தவிர வேறெந்த காரணத்திற்காக இலங்கைப் பாதுகாப்பு படையினருக்கு அமெரிக்கா பயிற்சி வழங்கவேண்டும்.

அடுக்கிவைத்து அழகு பார்ப்பதற்காக இலங்கை அரசு ஆயுதம் வாங்கிக்கொண்டிருப்பதாக அமெரிக்கா நினைக்கிறதா என்ன?

அல்லது, ஏதாவது ஒரு அந்நிய நாட்டு படையெடுப்பு அச்சுறுத்தலுக்கு எதிராக இலங்கை தயாராக இருக்கவேண்டி இருக்கிறதா? அதுவுமில்லை.

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**
**நாரதர்**



அமெரிக்க விமானப்படை பந்தோம் வகை மக்டொனெல் டக்ளஸ் விமானமொன்றிலிருந்து ஏவப்படும் டி.வி-கைடெட் மிசைல் சீறிப் புறப்படுகின்றது. இதன் முகப்பில் டி.வி கமெரா பொருத்தப்பட்டுள்ளது.

இன்றைய யுத்தம் மட்டும் இல்லை என்றால், இலங்கைப் படைகளிடம் தற்போதுள்ள ஆயுதங்கள் கூட மிதமிஞ்சியவை தான் என்றாகிவிடும்.

ஆக, யுத்தமிருப்பதால்தான் ஆயுதங்கள் தேவைப்படுகின்றன. இந்த யுத்தத்தில் வெல்லத்தான் பயிற்சியும் உத்திகளும் தேவைப்படுகின்றன.

இந்நிலையில், அமெரிக்கத் தூதரக வட்டாரங்களின் மறுப்பு ஒரு ஜோக் மாதிரி இருக்கிறது. இராஜதந்திர காரணங்களுக்காகச் சொல்லப்பட்ட பொய் என்று வேண்டுமானால் எடுத்துக் கொள்ளலாம்.

அமெரிக்காமீது புலிகள் குற்றம் சாட்டியதற்கு பின்னணி இல்லாமல் இல்லை.

இந்தியாவையும் பகைத்துக்கொண்டதால் அமெரிக்காவையும் பகைத்துக்கொள்ள புலிகள் விரும்பியிருக்கவில்லை.

இந்தியாவை தாம் கடுமையாக எதிர்ப்பதால் அமெரிக்காவின் நல்லெண்ணம் தமக்குக் கிடைக்கலாம் என்றுகூட புலிகளிடம் ஒரு எதிர்பார்ப்பு இருந்தது.

பிரான்சில் உள்ள புலிகளின் பிரமுகர் திலகர், அமெரிக்காவில் உள்ள புலிகளின் பிரமுகர் ருத்திரகுமார் போன்றோர் உட்பட புலிகளது வெளிநாட்டுக் கிளைகளில் உள்ளோர் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தவும் பலத்த முயற்சிகளில் ஈடுபட்டனர்.

அதன் ஒரு கட்டமாக பிரான்சிலிருந்து சென்ற திலகர் அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியுமிருந்தார்.

இதனையெல்லாம் பார்த்துவிட்டு இலங்கையில் உள்ள சில விமர்சகர்கள்கூட புலிகளுக்கு அமெரிக்கா இரகசிய உதவி செய்வதாக ஒரு கற்பனை விமர்சனத்தை கட்டிவிட்டனர் என்பதும் பலருக்கு நினைவிருக்கலாம்.

அந்த நேரத்தில் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்டில்' மட்டும்தான் அமெரிக்கா புலிகளை முழுமையாக ஆதரிக்கப்போவதில்லை என்பதை தெளிவான காரணங்களுடன் விளக்கியிருந்தோம். இரட்டைத் தனமான ஒரு போக்கைத்தான் இலங்கை விவகாரத்தில் அமெரிக்கா கையாளும் என்பதையும் கூறியிருந்தோம்.

அமெரிக்க அதிகாரிகள் மற்றும் அமைச்சர்கள் சிலர் இலங்கை விவகாரம் தொடர்பாக கூறிய கருத்துக்களை மட்டும் வைத்து, அமெரிக்கா இலங்கை அரசுக்கு ஆதரவாக இல்லை என்று வியாக்கியானம் செய்தவர்களும் உண்டு.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்துடன் நடத்திய பேச்சுக்கள் மூலம் அமெரிக்கா தமக்கு உதவப்போவதில்லை என்பது புலிகளுக்கும் தெரிந்தே இருந்தது.

எனினும், அமெரிக்கா இலங்கை அரசுடன் ஒட்டி உறவாடுமளவுக்கு செல்லாமல் இருந்தால் போதுமானது என்றளவில்தான் அமெரிக்காவில் உள்ள புலிகளின் முக்கியஸ்தர்கள் தொடர்ந்தும் முயற்சிகள் செய்தனர். ஒரு நல்லுறவை ஏற்படுத்திக்கொள்ள முயன்றனர்.

ஆனால், அமெரிக்கா புலிகளை மிகச்சிறந்த கெரில்லா இயக்கமாக ஏற்றுக்கொண்டுள்ள போதிலும், இலங்கை அரசுக்கு உதவும் கொள்கையை மாற்றிக்கொள்ளவில்லை.

சர்வதேச அளவில் தன்னைப் பயங்கரவாதத்துக்கு எதிரான ஒரு நாடாக காட்டிக் கொள்ளும் அமெரிக்கா, புலிகள் இயக்கத்தின் குண்டுவெடிப்புக்களையும் பகிரங்கமாகவே சாடிக்கொண்டிருக்கிறது.

இலங்கை அரசை முற்று முழுதாக இந்தியாவை நோக்கிச் செல்லவிடாமல் பார்த்துக் கொள்வதும் அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கைகளில் ஒன்றாகும்.

தெற்காசிய பிராந்தியத்தில் இந்தியாவின் மேலாதிக்கத்தை தடுப்பது அமெரிக்காவின் நீண்டகால வெளியுறவுக் கொள்கையாகும்.

அதனால், இலங்கை அரசையும் தனது தெற்காசியப்பிராந்திய நண்பர்களில் ஒன்றாக வைத்துக்கொள்ளவே அமெரிக்கா விரும்புகிறது.

அதேவேளை, புலிகளுக்கு தமிழ் மக்களிடம் கணிசமான செல்வாக்கு இருப்பதையும் அமெரிக்கா கணிப்பிடத் தவறவில்லை. புலிகளின் யுத்தமானது இனப்பிரச்சனை சார்ந்த ஒரு விடயமாகவும் இருப்பதால், பகிரங்கமாக புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு உதவுதல் இலங்கையில் உள்ள ஒரு பகுதி மக்களிடம் தனக்கெதிரான அதிருப்தியை உருவாக்கும் என்பது அமெரிக்காவுக்குத் தெரியும்.

அதனால்தான் இலங்கை அரசுக்கு இராணுவ ரீதியாக தம்மால் செய்யப்படும் உதவிகள் யுத்தத்தோடு தொடர்பற்றவை என்று அமெரிக்கா சொல்லிக்கொண்டிருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்காலத்தில் இருந்தே இலங்கைக்கு அமெரிக்கா உதவிவருகிறது. அப்போதே இலங்கை இராணுவத்தினருக்கு அமெரிக்கா பயிற்சி வழங்கியது.

இப்போதும் அந்தப் பயிற்சி தொடர்கிறது என்பதை அமெரிக்கா ஒப்புக் கொள்கிறது.

அந்தப் பயிற்சிகளின் நோக்கம் பற்றி தமக்குக் கிடைத்த சில தகவல்களை வைத்து ஆராய்ந்த பின்னரே முதன் முதலாக அமெரிக்காவை புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அப்படியிருந்தும்கூட அமெரிக்காவை முழுதாக பகைக்கவும் புலிகள் விரும்பவில்லை. ஏனெனில் இன்றைய சர்வதேச அரசியல் சூழலில் அமெரிக்காவின் கைகள்தான் மேலோங்கி உள்ளன.

அதனால்தான், அமெரிக்கா இலங்கை அரசுக்கு இராணுவரீதியில் உதவி செய்வதை நிறுத்திக்கொண்டு, இனப்பிரச்சனை தீர்வுக்கு நடுநிலை நின்று உதவவேண்டும் என்று புலிகள் கோரியிருந்தனர்.

அதன்மூலம் புலிகள் 'தாம் ஒன்றும் அமெரிக்காவின் எதிரிகளல்ல. அமெரிக்காவின் நண்பர்களாக இருக்க விரும்புகிறோம், என்ற செய்தியையும் மறைபொருளாக உணர்த்தியுள்ளனர்.

எனினும், அமெரிக்காவின் கண்டனங்கள் தம்மை சர்வதேசரீதியாக பாதித்துவருவதால், அவற்றுக்கு பதில்சொல்லவேண்டிய கட்டாயமும் புலிகளுக்கு ஏற்பட்டது.

அதனால்தான், இலங்கை அரசுக்கு இராணுவ ரீதியாகவும் அமெரிக்கா உதவியபடி, எங்களை எப்படி கண்டிக்கலாம் என்ற கேள்வியையும் புலிகள் எழுப்பியுள்ளனர்.

அக்கேள்வியில் நியாயம் இருப்பதால்தான் அமெரிக்க தூதரகத்திலிருந்து மழுப்பலான ஒரு மறுப்பு வெளியாகியது.

இந்த மறுப்புகளுக்கு அப்பால் வெளியாகிக் கொண்டிருக்கும் தகவல்கள் பற்றி நாம் கவனிப்போம்.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை செயற்கைக்கோள் மூலமாக, அதாவது சற்றலைற் மூலமாக கண்காணிக்கும் கருவிகளை அமெரிக்காவிடம் இலங்கை கோரியிருந்தது.

அதனை வழங்க அமெரிக்கா மறுத்துவிட்டது. ஆனால் இஸ்ரேல் மூலமாக சற்றலைற் மூலம் புலிகளது நடமாட்டத்தை கண்காணிக்கும் கருவி ஒன்றை இலங்கைக்கு பெற்றுக்கொடுக்க அமெரிக்கா முயற்சி எடுத்திருக்கிறது.

இஸ்ரேலிடம் இருந்து ஏற்கெனவே இலங்கை யுத்த விமானங்களை வாங்கியிருக்கிறது. அந்த யுத்த விமானங்களில் இருந்து இயக்கக்கூடிய ஏவுகணைகளையும் இலங்கைக்கு இஸ்ரேல் வழங்கலாம்.

அது என்ன விதமான ஏவுகணை? விஷயமே அதில்தான் இருக்கிறது.

சற்றலைற் மூலமாக புலிகளின் நடமாட்டத்தை முதலில் கண்காணிக்க வேண்டும். புலிகளின் அணிகள் எங்கு தரித்து நிற்கின்றன. எங்கு முகாம்கள் உள்ளன போன்றவற்றை, அதாவது தரையில் உள்ள நடமாட்டங்கள், இலக்குகள் என்பவற்றை சற்றலைற் மூலம் வேவுபார்த்து அறிந்து கொள்வது முதற்கட்டம்.

அவ்வாறு அறிந்து கொண்ட இலக்குகளை கம்பியூட்டரில் பதிவு செய்து கொள்ளவேண்டும். அதன்பின்னர் யுத்தவிமானம் ஏவுகணையுடன் புறப்பட்டுச் செல்லும்.

ஏவுகணையின் முகப்பில் ஒரு வீடியோ கமரா இருக்கும். ஏவுகணையை குறிப்பிட்ட திசைக்கு விமானத்தில் இருந்து ஏவிவிடவேண்டும். ஏவுகணையின் முகப்பில் உள்ள வீடியோ கமரா தான் செல்லும் பாதையை படம்பிடித்தபடியே செல்லும். அந்தப் படக்காட்சி விமானத்தில் உள்ள தொலைக்காட்சி திரையில் விழுந்து கொண்டிருக்கும். குறிப்பிட்ட முகாமின் அருகே ஏவுகணை செல்லும்போது தொலைக் காட்சி திரையில் விமானிக்கு அது தெரிந்துவிடும். உடனே விமானத்தில் உள்ள ஏவுகணையை வழிநடத்தும் கருவிமூலம் உத்தரவு பறக்கும். அதனை கிரகித்துக் கொண்ட ஏவுகணை முகாமில் விழுந்து வெடிக்கும்.

வளைகுடா யுத்தத்தில் ஈராக்கில் நிலத்துக்கு கீழே இருந்த இராணுவத்தளங்கள் அவ்வாறுதான் ஏவுகணைத் தாக்குதல்களால் அழிக்கப்பட்டன.

இதனை 'டி.வி. கைடெட் மிசைல்' என்று அழைப்பார்கள். (ரி.வி. மூலம் வழிநடத்தப்படும் ஏவுகணை.) புறஊதா மற்றும் லேசர் கதிர்கள் மூலம் இவை இயக்கப்படுகின்றன. கம்பியூட்டர் தொழில்நுட்பம் இதற்கு உதவுகிறது.

இத்தகைய தாக்குதல் முறை மூலம் இஸ்ரேல் விமானங்கள் ஒரு முறை லெபனானில் தாக்குதல் நடத்தியிருந்தன.

ஒரு தொடர்மாடிக்கட்டிடத்தில் பாலஸ்தீன போராளிகளது கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. சரியாக எத்தனையாவது மாடியில், எந்தப் பக்கத்தில் உள்ள கட்டிடத்தில் கூட்டம் நடைபெறுகிறது என்ற தகவல்கள் பெறப்பட்டன.

விமானம் மூலமாக 'கைடெட் மிசைல்' ஏவப்பட்டது. தொடர்மாடிக் கட்டிடம் அப்படியே இருக்க, அதில் பாலஸ்தீன போராளிகள் கூடியிருந்த அலுவலகத்தை மட்டும் நோக்கிச் சென்றது ஏவுகணை. குறி தப்பவில்லை.

சாதாரண ஏவுகணை என்றால் தொடர்மாடிக் கட்டிடத்தை தாக்கியிருக்குமே தவிர, அந்த மாடிக் கட்டிடத்தில் உள்ள குறிப்பிட்ட ஒரு இலக்கை நோக்கி சென்று தாக்கியிருக்க முடியாது.

ஆனால், தொழில்நுட்பரீதியாக சரியான பயிற்சி இல்லாவிட்டால் தாக்குதல் தோல்வியில் முடியலாம்.

இலங்கை விமானப்படையினருக்கு 'கைடெட் மிசைல்' தாக்குதல் முறையில் அமெரிக்கா பயிற்சி வழங்குவதாக ஒரு சந்தேகம் எழுந்துள்ளது.

யால காட்டுக்கு தென்பகுதியில் இருப்பது வீரவில. அங்குதான் இலங்கை விமானப்படை முகாம் ஒன்று இருக்கிறது. அமெரிக்காவில் இருந்து வந்த 'கிறீன் பெரட்ஸ் கொமாண்டோஸ்' பிரிவினர் அங்குதான் தங்கியுள்ளனர். அங்கிருந்தே பயிற்சி கொடுக்கின்றனர் என்று புலிகள் கூறியுள்ளனர்.

விமானப்படையினருக்கு விமானம் செலுத்தக் கற்றுக்கொடுப்பது என்றால் அமெரிக்க வீரர்கள் இங்கு வரத்தேவையில்லை. அமெரிக்காவுக்கே விமானிகளை அழைத்து கற்றுக்கொடுத்திருக்கலாம்.

எனவே- விமானம் மூலமான தாக்குதலில் புதிய தொழில் நுட்பங்களை கற்றுக்கொடுக்கவும், இங்குள்ள சூழலுக்கு ஏற்ப செயற்படவேண்டிய யோசனைகளை வழங்கவும் அமெரிக்க படையினர் நேரில் வந்திருக்கலாம் என்று நம்ப இடமிருக்கிறது.

இலங்கைக்கு வந்துள்ள அமெரிக்க 'கிறீன் பெரட்ஸ் கொமாண்டோஸ்' பிரிவில் 12 பேர் உள்ளனர் என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

புலிகளின் பிரதான தளம் இப்போது வன்னியில் இருக்கிறது. வன்னிக்கு படையெடுத்துச் செல்வதில் உள்ள சாதக, பாதகங்களை ஆனையிறவில் இருந்து மேற்கொள்ளப்பட்ட 'சத்யஜெய' நடவடிக்கை மூலம் படைத்தரப்பு கணிப்பிட்டிருக்கும்.

புலிகளின் பலம் என்பது அதன் தலைமைப் பீடத்தின் வளைந்து கொடாத உறுதியில் பெரிதும் சார்ந்திருக்கிறது. எனவே- தலைமைப்பீடத்தை நோக்கிய தாக்குதல் ஒன்றுக்கு படைத்தரப்பு முக்கியத்துவம் கொடுக்க நினைக்கக் கூடும்.

'கைடெட் மிசைல்'கள் மூலம் புலிகளின் பிரதான முகாம்களை வன்னியில் அழித்துவிடலாம் என்றால் படைத்தரப்புக்கு இழப்பு இல்லாத லாபம்.

ஆனால்- சற்றலைற் மூலம் புலிகளை வேவு பார்த்தல், 'கைடெட் மிசைல்' மூலம் தாக்குதல் போன்றவை முழுப்பயன் தருமா என்பது சந்தேகம்தான்.

புலிகளின் வன்னித் தளம் அடர்ந்த காட்டுப் பகுதிகளை உள்ளடக்கியது. 'சற்றலைற்' மூலமாகத் துல்லியமான விபரங்களை கண்டறிவதில் கஷ்டம் இருக்கிறது.

வளைகுடா யுத்தத்தில் ஈராக்கிலுள்ள நிலத்துக்கு கீழான இராணுவத் தளம் தொடர்பான விபரங்கள் பூரணமாக இருந்தமையால்தான் அமெரிக்க விமானங்களால் 'கைடெட் மிசைல்'களை ஏவமுடிந்தது.

அப்படியிருந்தும் ஈராக்கில் உள்ள பல்வேறு இராணுவ தளங்களை கண்டறிய முடியவில்லை.

அதுதவிர, வளைகுடா யுத்தத்தில் பரந்த பாலைவனப் பகுதியில் நடந்த போரில்கூட நீண்ட நாட்களின் பின்னர்தான் ஈராக்கை கட்டுப்படுத்த முடிந்தது.

சற்றலைற் மூலமே எல்லாவற்றையும் சாதிக்கலாம் என்றால் ஈராக் போரில் அமெரிக்காவும், அதன் நேச நாடுகளும் தமது படைகளை இறக்கியிருக்கத் தேவையில்லை.

சற்றலைற் மூலமாக வாகன நடமாட்டங்களை கண்காணிக்க முடியும். மற்றும் தரைப் பகுதியில் உள்ள இராணுவம் தொடர்பான கருவிகள், தொலைத்தொடர்பு சாதன ஒலி பரப்பு சமிக்ஞைகளை வைத்து அங்கு முகாம்கள் இருப்பதற்கான அறிகுறியை அறிய முடியும். தரையில் பாரிய கட்டிடங்கள் இருந்தாலும் கண்டறிவது சுலபம்.

எனினும், துல்லியமான தகவல்களை திரட்டி எடுப்பது கடினமானது. அதி தொழில் நுட்ப ரீதியில் யுத்தம் புரிவதற்கான செலவீனங்களை இலங்கையும் தாங்க முடியாது.

எனவே- சற்றலைற் மூலமான வேவு பார்த்தல் என்பது வடக்கு-கிழக்கு யுத்தத்தில் பெருமளவுக்கு பயன்தராது.

சற்றலைற் மூலமாக முன்கூட்டியே வேவு பார்க்காமலும் 'கைடெட் மிசைல்' தாக்குதல்களை நடத்தமுடியும். கைடெட் மிசைல்களில் உள்ள வீடியோ கமரா மூலம் காட்டப்படும் காட்சிகளை வைத்து இலக்கை இனம்கண்டு தாக்கலாம்.

ஆனால், அதற்கும், போதிய தகவல்கள் தேவை. புலிகளின் முகாம் எங்கே இருக்கிறது. அதன் தோற்றம், சூழல் பற்றிய தகவல்கள் பூரணமாக இருந்தால்தான் ஏவுகணையை சரியான இலக்கை தாக்கச் செய்யலாம்.

காட்டுக்குள் அநேகமாக எல்லாச் சூழலும் ஒரே விதமாகவே தெரியும், குறிப்பிட்ட இடத்தை நேரில் சென்று அடையாளம் காண்பதே கடினம். ரி.வி.திரை மூலம் பார்த்துக்கொண்டிருக்கும் விமானிக்கு குறிப்பிட்ட இலக்கை அடையாளம் காண்பது மகா கஷ்டம்.

அதுதவிர, பிரபாவை இலக்காக வைத்து கைடெட் மிசைலை அனுப்பவேண்டுமானால் பிரபாவின் இருப்பிடத்தை அறிய வேண்டும்.

அமெரிக்காவால் கூட அதன்பிரதான எதிரிகளை அழித்தொழிக்க முடியவில்லை. லிபிய அதிபர் கேணல் கடாபி, கியூபா அதிபர் பிடல் காஸ்ரோ ஆகியோரை இலக்காக வைத்து அமெரிக்கா பல தாக்குதல்களை நடத்தியிருக்கிறது.

குறிப்பாக கேணல் கடாபியின் தலைமைச் செயலகம் கூட அமெரிக்காவின் குண்டு வீச்சுக்கு உள்ளானது. அதேநேரம் கடாபி வேறொரு இடத்தில் பத்திரமாக இருந்தார்.

தனது சற்றலைற் தொழில் நுட்பம், மற்றும் கைடெட் மிசைல்கள் மூலம் அமெரிக்காவால் தனது பிரதான எதிரிகளைக் கூட ஒழிக்க முடியவில்லை. இந்நிலையில் பிரபாவையோ, அல்லது புலிகளின் தலைமைப்பீடத்தையோ, இலக்காக வைத்து ஏவுகணைகளை ஏவமுடியும் என்பது சாத்தியமற்ற போர்முறையாகவே இருக்கும்.

இரண்டு நாடுகள், இரண்டு மரபு இராணுவங்கள் இடையே நடைபெறும் யுத்தங்களில் கம்பியூட்டர் தொழில் நுட்ப சாகசங்கள், சற்றலைற் படப்பிடிப்புக்கள் என்பவை உதவிகரமாக அமையமுடியும்.

ஏனெனில், ஒரு நாட்டில் உள்ள முக்கிய இரணுவநிலைகள், தலைமைச் செயலகங்கள் போன்றவை பகிரங்கமாக அறியப்பட்டிருக்கும். பாரிய கட்டிடங்களை கொண்டவையாகவும் இருக்கும். மற்றும் கனரக வாகன நடமாட்டங்கள் தெரியும். எனவே விண்ணில் உள்ள சற்றலைற் மூலம் படம் பிடித்து கொள்ளலாம். ரி.வி. கைடெட் மிசைல்களையும் சரியான இலக்கு நோக்கி அனுப்பலாம்.

ஆனால், புலிகளின் பிரதான தளம் இருப்பது வன்னியில். பிரதான முகாம்கள் இருப்பது காட்டுக்குள். பாரிய கட்டிடங்களும் கிடையாது. நடமாட்டங்களும் இரகசியமானவை.

ஒரே ஒரு சாத்தியம் உண்டு. புலிகளின் முகாம் ஒன்றைப்பற்றிய துல்லியமான விபரங்கள், வரைபடங்கள் என்பவற்றை புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் இருந்து யார் மூலமாவது பெற்றுக்கொண்டால், குறித்த இலக்கை 'கைடெட் மிசைல்' மூலம் தாக்கலாம். குறிப்பிட்ட முகாம் சுலபமாக இனம் காணப்படத்தக்க தன்மைகளையும் கொண்டிருக்குமானால் தாக்குதல் குறி தப்பாது.

எப்படியிருப்பினும் வடக்கு-கிழக்கு யுத்த வெற்றி தோல்வி என்பது அமெரிக்காவின் தொழில் நுட்பத்தால் தீர்மானிக்கப்படப்போவதில்லை.

---

# அதிரடி அப்பாத்துரை



யாழில் பென்சன் எடுத்த ஆசிரியர்கள் மற்றும் பென்சனிய உத்தியோகத்தர்கள் பலர் சம்பாத்தியத்திற்கு புதுவழி ஒன்று கண்டு பிடிச்சிருக்கினமாம். புனர்வாழ்வு உதவி விண்ணப்பப்பத்திரங்களை ஆங்கிலத்தில் பூர்த்தி செய்து கொடுப்பதுதான் அந்த புதுவழி மற்றும் புதுத்தொழில். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு முன்பாக தொழில் ஒஹோவென்று களை கட்டி நடந்துகொண்டிருக்குதாம். காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்வதில் நம்மவர்கள் பலர் கில்லாடிகளுங்கோ.

வன்னிப்பகுதியில் இருந்து வந்து தலைநகர் வர அனுமதி கேட்பவர்களிடம் ஒரு கேள்வி கேட்கப்படுகிறதாம். "ரெண்டு எழுத்தாரிடம் டாங்கி பார்த்தீர்களோ?" என்பதுதான் கேள்வி. "சத்தியமா நாங்கள் காணவில்லை" எண்டு பதில் சொன்னால், "சரி போய் பார்த்துப்போட்டு வாங்கோ, பின்னர் தலைநகரைப் போய் பார்க்கலாம்" எண்டு சொல்லப்படுகிறதாம். பகிடி வதை என்பது உதுதானாக்கும்.

பொன்னான தலைவரின் புத்திர குமாரரின் போக்கில் ரெண்டு எழுத்தாருக்கும் சந்தேகம் ஏற்பட்டிருக்காம். இலண்டனில் அவர் நடத்திய சந்திப்புக்களுக்கு செல்ல வேண்டாமென்று சில பிரமுகர்களுக்கு தொலைபேசி மூலமாக சொல்லப்பட்டதாம். ஒன்றே இயக்கம், ஒருவரே தலைவர் என்பதுதான் ரெண்டு எழுத்தாரின் கொள்கை. குமாரர் தன்னைத்தானே 'தலைவர்' என்று தம்பட்ட பிரசுரம் அடிச்சு வெளியிட்டதுதான் பிழையாய் போயிருக்காம்.

திம்பு மாநாடு பற்றி குமாரர் பேசிய ஒரு கூட்டத்தில் ஒருவர் எழுந்து கேட்டாராம். "திம்பு மாநாட்டு நேரத்தில் நீர் எங்கே இருந்தனீர்? கிண்டலடிச்சுத் திரிஞ்சுபோட்டு இப்போது திம்பு கோரிக்கைகளை வலியுறுத்த வந்திருக்கிறீரோ?" எண்டு கேட்டவராம். குமாரருக்கு முகத்தில் ஈயாடவில்லையாம். எல்லாம் குமாரரின் ராசி. 'காய்க்கிற மரத்துக்குத் தானே கல்லெறி விழும்.' அதுவும் சரிதான். அவர் விதம் விதமாக சோத்துவைத்திருக்கிற கார்களுக்கு படாமல் இருந்தால் சரிதான்.

கிழக்கில் சம்பத்தில் கரும் ரெண்டு எழுத்தார் மாட்டல் என்று சொல்லப்பட்ட செய்தி சர்ச்சைக்குரியதாகியுள்ளது. பாவம் ஓரிடம், பழி வேறிடம் என்ற கதையோ எண்டு கேள்வி கிளம்பியிருக்கு. நெருப்பில்லாமல் புகையுமோ. உலைவாய் சிறிது மூடலாம். ஊர்வாய் பெரிது மூடமுடியாது. அம்பலத்துக்கு வராத சங்கதிகளும், சனத்துக்குள் அந்தரங்கமாக அடிபடத்தான் செய்யுது.

சூரியக்கதிருக்குப் பின்னர் தொலைக்காட்சிகளில் தீர்வுப்பொதி விவாதம் காணாமலபோயிருந்தது. தொலைக்காட்சியில் முகம் காட்டிதான் கிளப்ப முடியாத வருத்தத்தில் இருந்த புத்திசீவிகளுக்கு மீண்டும் ஓர் அரிய வாய்ப்பு. மறுபடியும் விவாதங்கள் ஆரம்பிச்சிருக்கு. முல்லைக்குப் பின்னர்தான் அரசியல்தீர்வு அவசியமா என்ற விவாதத்தை தொலைக்காட்சி நிலையத்தாரும் தொடக்கியிருக்கினம். முகம் காட்டும் புத்திசீவிகள் யாருக்கு நன்றி சொல்வது. ரெண்டு எழுத்தாருக்கோ, தொலைக்காட்சி நிலையத்தாருக்கோ?

தமிழக 'சன்ரி.வி' நிகழ்ச்சிகள் நம்நாட்டு எம்.ரி.வியில் பரீட்சார்த்தமாக ஒளிபரப்பாகின்றன. நள்ளிரவு 12 முதல் அதிகாலை மூன்று மணிவரை பார்க்க முடிஞ்சுது. எல்லாம் சரி நடுச்சாமத்தில் காட்டினால் யார் பார்க்கிறது எண்டு கேட்கிறியளோ? தமிழ் பேசும் மக்களை விழிப்பாக வைத்திருக்க எம்.ரி.வி நினைக்கிறதாக்கும். நடுச்சாமத்தில் எழுக. எம்.ரி.வி காண்க. "ஹம்மா, ஹம்ம, ஹம்ம, ஹம்மா, அந்த அரபிக் கடலோரம்" என்ற துள்ளிசை கேட்டுத் துடிப்பு வருமல்லோ.

அமெரிக்கா பயிற்சி கொடுப்பது உண்மை. ஆனால் அது யுத்தத்துக்காகவல்ல. அமெரிக்கா ஆயுதம் கொடுப்பது உண்மையிலும் உண்மை. ஆனால் அது ஆபத்தான ஆயுதமல்ல என்று வெளியான அறிக்கையைப் படித்ததும் எனக்கு ஒன்றுமே விளங்கேல்லை. அப்படியென்றால் குண்டாந்தடியும், கள்ளரைப் பிடிக்கிறதுக்கு பயிற்சியுமோ கொடுக்கினம். அதுக்கேன் அமெரிக்கப் பயிற்சியாம்? உது நம்நாட்டுப் படைகளை கிண்டலடிக்கிற மாதிரியல்லே கிடக்கு.

யாழில் பச்சை உடையினருடன் பழக்கம் பிடிச்ச சிலர் அவர்களுக்கு செல்லும் ஆங்கிலப் பத்திரிகையையும் இரவல் வாங்கிப் படிச்சுக்கொண்டு, ஒரு சிகரெட்டும் வாங்கிப் புகைத்துக்கொண்டு ஒரு காரியமும் செய்கினமாம். 'உந்தா போகுது. உதுதான் டேஞ்சரான ஆள்' எண்டும் மெல்லக் கண்ணைக்காட்டிப்போட்டு கம்மென்று இருக்கினமாம். அடையாளம் காட்டப்படுகிறவர் கப்பென்று அமுக்கப்படுகிறாராம். எல்லாம் ஒரு பரஸ்பர உதவிதான்.

சுவாமி விவேகானந்தர் கூறிய பொன்மொழி ஒன்று இந்த வாரம்.

"உலகத்தின் இயக்கம்
ஒரே ஒரு சொல்லில்தான்
இருக்கிறது. அந்தச் சொல்
'வலிமை' என்பதுதான்!
'வலிமை' என்ற சொல்லின்
கருத்துத்தான்–இன்று
உலகை ஆள்கிறது!"



படிப்பகம்

www.padippakam.com

**அரசியல் தொடர்** **அற்புதன் எழுதுவது**

# வானில் தோன்றிய விமானங்கள்

## கண்விழித்தபோது

தொண்டமானாறு இராணுவமுகாமில் இருந்து புறப்பட்ட இராணுவத்தினருக்கு பாரிய எதிர்ப்பு எதுவும் இருக்கவில்லை.

கோயில்சந்தை என்ற இடத்திலுள்ள ஈரோஸ் அலுவலகத்துக்குள் எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்தனர். அந்தளவு தூரத்துக்கு இராணுவத்தினர் இரவோடு இரவாக வந்து சேருவார்கள் என்று அவர்கள் நினைத்தே பார்க்கவில்லை.

அதனால் சென்றியும் இருக்கவில்லை. அலுவலகத்தை சுற்றிவளைத்து இராணுவத்தினர் உள்ளே புகுந்து தட்டி எழுப்பிய போதுதான் உள்ளே தூங்கியவர்கள் வாரிச்சுருட்டியபடி எழுந்தனர்.

ஈரோஸின் பருத்தித்துறை பொறுப்



மில்லர்

பாளர் முரளி கண்களை துடைத்துக் கொண்டு, தலையை உதறிக்கொண்டு கூர்ந்துபார்த்தார். காண்பது கனவல்ல. வந்திருப்பது இராணுவத்தினரேதான் என்பது விளங்கியது. அவரும் கைது செய்யப்பட்டார்.

இராணுவத்தினர் முன்னேறிவரும் செய்தி வல்வெட்டித்துறையில் இருந்த பிரபாகரனுக்கு உடனடியாக தெரிவிக்கப் பட்டது.

ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் முன்னேறி வருகின்றனர். தடுத்து நிறுத்துவது லேசுப்பட்ட வேலையல்ல என்பதை புலிகள் இயக்கத்தினர் புரிந்து கொண்டனர்.

ஹெலிகொப்டரில் இருந்து உத்தரவுகள் கொடுக்கப்பட்டுக்கொண்டிருந்தன.

ஹெலிகொப்டரில் முக்கியமான மூன்று பேர் இருந்தனர்.

ஒருவர் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி. இன்னொருவர் முப்படைத்தளபதி ஜெனரல் சிறில்ரணதுங்க. மூன்றாமவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிக்கல.

இத்தகைய நடவடிக்கையால்தான் லலித் அத்துலத்முதலி ஒரு ஹீரோவாக மாறினார். களத்தில் நிற்கிறார் அத்துலத்முதலி என்று கொழும்பு ஆங்கில-சிங்கள பத்திரிகைகள் படத்தோடு செய்திகள் வெளியிட்டன.

மே 2ம் திகதியளவில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பகுதிகள் முழுவதும் படையினரின் கட்டுப்பாட்டில் வந்திருந்தன.

## பாரிய மோதல்

பருத்தித்துறை-வல்வெட்டித்துறை வீதியில் புலிகளின் அணிகள் கடும் எதிர்ப்பை காட்டின. பாரிய சண்டை நடந்தது. 20க்கு மேற்பட்ட புலிகள் அந்த சண்டையில் பலியானார்கள். படையினரின் பலம் அதிகமாக இருந்தது. புலிகளின் அணிகள் சண்டையை நிறுத்திக்கொண்டு பின்வாங்கிச் சென்றன.

உடுப்பிட்டியில் நவிண்டில் என்னுமிடத்தில் உள்ள புலிகளின் முகாம் சுற்றிவளைக்கப்பட்டது. அங்கிருந்த ஆயுதங்களை எடுத்துக்கொண்டு இராணுவத்தினரின் முற்றுகையை ஒரு புறத்தால் உடைத்துக்கொண்டு புலிகளின் அணியொன்று தப்பிச்சென்றது. அந்த சண்டையில் புலிகள் தரப்பில் ஏழுபேர் வரை பலியானார்கள். முகாமையும் இராணுவத்தினர் அழித்தனர்.

நெல்லியடி நோக்கி இராணுவத்தினர்

படையினருக்கு பலத்த அதிர்ச்சியையும், பாரிய இழப்பையும் ஏற்படுத்துவது மூலமே 'ஒப்பரேசன் லிபரேசன்' நடவடிக்கையின் வேகத்தை தடுக்கலாம் என்பதுதான் திட்டம்.

பாரிய சண்டை ஒன்றில் ஈடுபட்டு தமது உறுப்பினர்களை பெருமளவுக்கு இழக்கவும் புலிகள் விரும்பவில்லை.

திட்டமிட்டபடி வடமராட்சியை கைப்பற்றியதால் படையினரின் உற்சாகமும், உளவியல் பலமும் கூடியிருந்தது.

அதேநேரம் வடமராட்சியை படையினர் கைப்பற்றியவுடன், யாழ் குடாநாடு முழுவதும் படையினர்வசம் செல்வது உறுதி என்று மக்களும் நினைக்கத் தொடங்கினார்கள்.

வடமராட்சியில் புலிகளுக்கு பெருமளவு நிதியுதவி செய்த வர்த்தகர்கள் தப்பிஓடி வந்து கோப்பாய் பகுதியில் தங்கியிருந்தனர்.

"எவ்வளவு பணம் கொடுத்தோம். என்ன புண்ணியம். வடமராட்சியை விட்டுப்போட்டு வந்துவிட்டார்களே" என்று புலிகளைத் திட்டிக் கொண்டிருந்தனர்.

வல்வெட்டித்துறையில் பிரபாகரன் தங்கியிருந்ததாக படையினர் அறிந்து வைத்திருந்த இரு வீடுகள் இராணுவத்தினரால் தகர்க்கப்பட்டன. அதிலொன்று பிரபல வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமான வீடு.

பொருளாதாரத் தடை. பட்டினி அபாயம். ஷெல் வீச்சுக்கள். விமானத் தாக்குதல்கள். யாழ் குடாநாடே அல்லோல கல்லோலப் பட்டுக்கொண்டிருந்தது.

எனவே-எப்படியாவது ஒரு பலத்த அடியைக் கொடுத்தாக வேண்டும் என்று

## யுத்த ஹமுதாவ

'யுத்த ஹமுதாவ' என்று எழுதப்பட்டிருந்த மையால் தடை அரண்களில் லொறியை தடுக்காமல் உள்ளே விட்டனர்.

இராணுவத்தினரும் தமது தேவைகளுக்காக பல லொறிகளை அப்போது பயன்படுத்திக் கொண்டிருந்தனர். அதனால் மில்லர் சென்ற லொறியையும் தமது பாவனையில் உள்ள லொறிதான் என்று இராணுவத்தினர் நினைத்துவிட்டனர்.

சக்கைலொறி நெல்லியடி மகாவித்தியாலயத்தை நெருங்கிக்கொண்டிருந்தது.

அப்போதுதான் இராணுவத்தில் சிலருக்கு அந்த லொறிமீது சந்தேகம் ஏற்பட்டது.

லொறியை நிறுத்துமாறு சைகை செய்தனர். மில்லர் நிறுத்தவில்லை. இலக்கை நோக்கி லொறியை செலுத்தினான்.

தடுத்தும் லொறி நிறுத்தப்படவில்லை என்பதால் இராணுவத்தினர் லொறியை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்யத் தொடங்கிவிட்டனர்.

மில்லர் சக்கை லொறியை கொண்டு சென்று மத்தியகல்லூரியின் பிரதான கட்டிடத்தில் மோதுவதுதான் திட்டமாக இருந்தது.

இராணுவத்தினர் உஷாராகி சூழல் குழம்பியதால் தாமதிக்க நேரமில்லை. நெல்லியடி மகாவித்தியாலய முன்பக்கமாக குறித்த இலக்குக்கு முன்னரே சக்கைலொறி மோதி வெடித்தது.

அந்தப் பிரதேசமே அதிர்ந்தது. மகாவித்தியாலய முன்பக்கக் கட்டிடம் இடிந்து வீழ்ந்தது.

40க்கு மேற்பட்ட இராணுவத்தினர் பலியானார்கள் என்று கணிப்பிடப்பட்டது. 20 பேர்பலியானதாக அரசு அறிவித்தது.

குறித்த இலக்கில் மோதி வெடித்திருந்



பிரபா (1987)

அந்த மாணவனை தாக்கினார்கள். மாணவனின் பெற்றோர் தங்கள் மகனை விட்டுவிடுமாறு கெஞ்சினார்கள்.

அவர்கள் கண்முன்பாகவே அந்த மாணவனைச் சுட்டுக்கொன்றனர்.

## ஓடவிட்டுச் சுட்டனர்

மே 31ம் திகதி நடைபெற்ற ஒரு சம்பவம் மிகக் கொடுமையானது.

கணித விரிவுரையாளரான ரகுதீஸ்வரன் என்பவரும், வேறு சிலரும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர். நெல்லியடி முருகன் கோவிலில் அவர்கள் தங்கியிருந்தனர்.

கையில் விலங்கிட்டு அழைத்துச் செல்லப்பட்ட ரகுதீஸ்வரனையும், ஏனையோரையும் ஓடுமாறு கூறினார்கள்

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை



# நெல்லியடியில் கரும்புலித் தாக்குதல்

அப்போது வடமராட்சிக்கு புலிகள் இயக்கத்தில் பொறுப்பாக இருந்தவர் சூசை.

பிரபாகரனை பிடிப்பதும் படையினரின் நோக்கம் என்று புரிந்துகொண்ட புலிகள் இயக்கத்தினர், பிரபாகரனையும் அவரது மெய்ப்பாதுகாவலர்களையும் வல்வெட்டித்துறையிலிருந்து வெளியே கொண்டுசென்றனர்.

வடமராட்சி மக்களில் பலருக்கு காலையில் கண்விழித்தபோதுதான் இராணுவத்தினர் உள்ளே வந்துவிட்டனர் என்பதே தெரிந்தது.

மக்கள் அனைவரையும் கோவில்களுக்கும், பாடசாலைகளுக்கும் செல்லுமாறு இராணுவத்தினர் அறிவித்தனர்.

## வானிலிருந்து உத்தரவு

அதுவரை 'ஈழம் கம்யுனிஸ்ட் கட்சியின் வானொலி' என்று மக்களைக் குழப்பிக்கொண்டிருந்த வானொலிச் சேவை, ஒப்பரேசன் லிபரேசனுடன் யாழ் வானொலியாக தன் பெயரை மாற்றிக்கொண்டது.

அப்போதுதான் மக்கள் மத்தியில் அந்த வானொலி தொடர்பாக இருந்த சந்தேகம் நீங்கியது. மக்களை கோயில்களுக்கு செல்லுமாறு யாழ் வானொலி மூலமும் படையினர் அறிவித்தனர்.

இதேவேளை வடமராட்சியில் இருந்து மக்களை வெளியேறுமாறு புலிகள் இயக்கத்தினரும், ஈரோஸ் அமைப்பினரும் கோரினார்கள்.

வடமராட்சியில் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்ட பகுதிகளில் இருந்த மக்களால் வெளியேற முடியவில்லை.

வடமராட்சியில் உள்ள மக்களில் ஒருபகுதியினர் தென்மராட்சி நோக்கி இடம்பெயர்ந்தனர். எனினும் கணிசமானளவு மக்கள் வெளியேற விரும்பாமல் கோயில்களில் சென்று தஞ்சமடைந்தனர்.

வடமராட்சியில் படையினர் தமது நடவடிக்கையை மேற்கொண்டிருந்தபோது, யாழ் கோட்டை முகாமிலிருந்தும் இராணுவத்தினர் முன்னேறத் தொடங்கினார்கள்.

வடமராட்சியை நோக்கி புலிகள் இயக்க அணிகள் அனைத்தும் செல்வதை தடுக்கும் தந்திரோபாயமான நடவடிக்கை அதுவாகும்.

கோட்டை முகாமிலிருந்து வெளியேறி வந்த இராணுவத்தினர் மோட்டார்கள் மூலம் தாக்கப்பட்டனர்.

யாழ் கோட்டை இராணுவ முகாம், நாவற்குழி இராணுவ முகாம், பலாலி இராணுவமுகாம் என்று பல முனைகளில் இருந்து அகோரமான ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. யாழ் குடாநாடு அதிர்ந்து கொண்டிருந்தது.

வடமராட்சியில் படையினர் முன்னேறிக்கொண்டிருந்தபோது, ஒரு

முன்னேறியபோது புலிகள் இயக்கத்தினரும், ஈரோஸ் இயக்கத்தினரும் எதிர்த்தாக்குதலில் ஈடுபட்டனர். ஈரோஸ் இயக்க உறுப்பினர்கள் மூவர் பலியானார்கள்.

எதிர்ப்பை முறியடித்துக்கொண்டு படையினர் முன்னேறி நெல்லியடி மகாவித்தியாலயத்தில் முகாமிட்டனர்.

கோயில்களிலும், பாடசாலைகளிலும் மக்களை சென்று இருக்குமாறு படையினர் அறிவித்தார்கள் அல்லவா.

அவ்வாறு தங்கியிருந்த மக்கள் மத்தியில் புலிகளும் இருக்கலாம் என்று சந்தேகித்தனர்.



எப்படி இனம்காண்பது? என்று யோசித்தனர்.

இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தார்கள். கோயில்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சமடைந்த மக்கள் மத்தியில் இருந்த 16-17 வயதுக்கு மேற்பட்ட 30-35 வயதுக்குட்பட்ட அனைவரையும் பிடித்து கப்பலில் ஏற்றி பூசாவில் இருந்த தடுப்புக்காவல் முகாமுக்கு அனுப்பிவைத்தனர்.

## தாக்குதல் திட்டம்

நெல்லியடி மகாவித்தியாலயத்தில்தான் பிரிகேடியர் டென்சில் கொப்பக்கடுவ தனது அலுவலகத்தையும் வைத்துக்கொண்டார்.

நெல்லியடி மகாவித்தியாலயத்தில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர்மீது தாக்குதல் ஒன்றை நடத்தத் திட்டமிட்டனர் புலிகள்.

அப்போது புலிகள் இயக்கத்தின் உளவுப்பிரிவு வேலைகளுக்கு பொறுப்பாக இருந்தவர் விசு. (பின்னர் அமிர்தலிங்கத்தை சுட்டவர்களில் ஒருவர்)

நெல்லியடி மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த இராணுவமுகாம் தொடர்பான விபரங்களை விசுதான் திரட்டிக் கொடுத்தார்.

மாத்தையா தலைமையில் நெல்லியடி முகாம் தாக்குதலுக்கான திட்டம் ஒன்று தயாரானது.

பிரபாகரனும் நினைத்தார்.

## சக்கைலொறி

தற்கொலைத்தாக்குதல் ஒன்றை நடத்துவது மூலம்தான் முகாமுக்குள் பாரிய அழிவை ஏற்படுத்தலாம் என்று பிரபாகரன் திட்டமிட்டார்.

லொறி ஒன்றில் வெடிமருந்தை நிரப்பிக் கொண்டு சென்று நெல்லியடி முகாம்மீது மோதுவதுதான் திட்டம்.

வெடிமருந்தை நிரப்பிக்கொண்டு செல்லும் லொறிக்கு 'சக்கைலொறி' என்று பெயர்.

'சக்கைலொறியை செலுத்துவது யார் என்று தீர்மானிப்பதற்கு இடையில் 'நான் போகிறேன்' என்று முன்வந்தான் மில்லர்.

ஜூன் 5ம் திகதி சக்கைலொறித் தாக்குதல் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

தற்கொலைத் தாக்குதலுக்கு செல்வது என்று முடிவு செய்தபின்னர் தன் வீட்டுக்குச் சென்றான் மில்லர்.

மில்லரின் தாய்க்கு அதுதான் தன் மகனைக் காணும் கடைசிநாள் என்பது தெரியாது. பால் காய்ச்சிக் கொடுத்தாள் அம்மா.

விடைபெற்றுக்கொண்டு புறப்பட்ட மில்லர் சில கணம் தாமதித்தான். அம்மாவை வாஞ்சையோடு கட்டிப்பிடித்து கொஞ்சினான். அம்மாவுக்கு எதுவும் விளங்கவில்லை.

அதுதான் கடைசி முத்தம் என்று தெரியாமல் சந்தோசமாக விடைகொடுத்தாள்.

ஜூன் 5ம் திகதி சக்கை லொறி ஒன்றில் மில்லர் ஏறி சாரதி ஆசனத்தில் அமர்ந்து கொண்டான். லொறியின் முன்பக்கத்தில் யுத்த ஹமுதாவ (இராணுவம்) என்று சிங்களத்தில் எழுதப்பட்டிருந்தது.

சக்கைலொறி புறப்பட்டது

தன் சகாக்களை நோக்கி கையசைத்து புன்னகைத்தபடியே மில்லர் லொறியை செலுத்திக்கொண்டு போய்விட்டான்.

தால் அழிவுகள் மேலும் அதிகமாக இருந்திருக்கும்.

சக்கைலொறித் தாக்குதல் நடைபெற்ற போது பிரிகேடியர் டென்சில் கொப்பக்கடுவ அங்கு இருக்கவில்லை.

அவரது அதிஷ்டமோ என்னவோ அந்த நேரத்தில் வேறு ஒரு பகுதிக்கு நிலமைகளைப் பார்வையிடச் சென்றிருந்தார்.

புலிகள் நடத்திய முதலாவது கரும்புலித் தாக்குதல் அதுதான். புலிகள் இயக்கத்தின் முதலாவது கரும்புலி மில்லர்.

மில்லர் பிறந்தது 01.01.1966. சொந்தப் பெயர், வல்லிபுரம் வசந்தன். யாழ்ப்பாணத்தில் துன்னாலைதான் சொந்த இடம். புலிகள் இயக்கத்தில் கப்டன் தரத்தில் இருந்தவர். மில்லர் தாக்குதல் நடத்தியது 05.06.1987.

மில்லரின் தாக்குதல் படையினருக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. தற்கொலைத்தாக்குதலை இராணுவத்தினர் எதிர்பார்க்கவில்லை.

மில்லரின் தாக்குதல்தான் 'ஒப்பரேசன் லிபரேசன்' நடவடிக்கைக்கு எதிராக புலிகள் நடத்திய பதிலடியில் குறிப்பிடத்தக்க பாரிய நடவடிக்கையாகும்.

## அத்துமீறல்கள்

இதற்கிடையே நடைபெற்ற சில சம்பவங்கள் இராணுவத்தினர் தொடர்பான அச்சத்தை யாழ் குடாநாட்டு மக்களிடம் ஏற்படுத்தின.

ஆலயங்கள் பாதுகாப்பான இடமாக இருக்கும் என்று தஞ்சமடைந்த மக்களையும் அச்சமூட்டும் வகையில், அல்வாயிலுள்ள மாரியம்மன் கோவிலில் ஷெல் ஒன்று விழுந்தது.

கோயிலில் தஞ்சமடைந்திருந்த மக்களில் 35 பேர் பலியானார்கள்.

இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த பகுதிகளில் புலிகளின் சுவரொட்டிகள் காணப்பட்டன. சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்த பகுதிகளில் உள்ளவர்கள் புலிகளின் ஆதரவாளர்கள் என்று கருதப்பட்டு இராணுவத்தினரால் தாக்கப்பட்டனர்.

வீடுகளுக்குள் புகுந்து நகைகள் மற்றும் பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்பட்டன.

பருத்தித்துறையில் உள்ள புத்தளை பிள்ளையார் கோவிலில் மக்கள் தஞ்சமடைந்திருந்தனர்.

அங்கு வந்த இராணுவத்தினர் அடையாள அட்டைகளை வாங்கிப்பார்த்தனர். யாழ் பல்கலைக்கழக பொறியியல் மாணவர் ஒருவரும் இருந்தார்.

அவரது அடையாள அட்டையில் அவரது சொந்த இடம் வல்வெட்டித்துறை என்று இருந்தது.

வல்வெட்டித்துறை என்றாலே இராணுவத்தினருக்கு வெறுப்பு. பிரபாகரன் பிறந்த ஊர் என்பதுதான் காரணம்.

இராணுவத்தினர். அவர்கள் ஓடும்போது பின்புறமிருந்து சுட்டனர்.

ரகுதீஸ்வரன் மட்டும் செத்தவர்போல கிடந்து சிறுகாயத்துடன் தப்பினார்.

அவ்ரோ விமானங்களில் இருந்து திரவமும், இரப்பரும் கலந்து மக்கள்மீது வீசப்பட்டது. அதன் சிறு துணிக்கை உடலில் பட்டாலும்கூட பெரிய காயத்தை ஏற்படுத்தும்.

வல்வெட்டித்துறையில் மட்டும் 48 பீப்பாய்க் குண்டுகள் போடப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறை சிவன் கோவிலில் ஒரு பீப்பாய்க் குண்டு விழுந்தது. 17 பேர் பலியானார்கள்.

யாழ் குடாநாட்டில் நடைபெற்றுக் கொண்டிருந்த தாக்குதல்கள் தமிழ் நாட்டில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

தமிழ் மக்களை இனப்படுகொலை செய்யும் நடவடிக்கை ஆரம்பமாகிவிட்டது என்று தமிழ் நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் குரல் எழுப்பத் தொடங்கின.

இந்திய மத்திய அரசு தலையிட வேண்டும் என்ற குரல்களும் எழுந்தன.

யாழ்-குடாநாட்டில் படையினர் பாரிய நடவடிக்கையில் ஈடுபட்டதை இந்திய மத்திய அரசும் விரும்பவில்லை.

யாழ்-குடாநாட்டை இராணுவத்தினர் தமது முழுக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துவிட்டால் இலங்கை அரசை ஒரு தீர்வுக்கு நிர்ப்பந்தப்படுத்த முடியாமல் போய்விடும் என்பதும் இந்திய மத்திய அரசின் எண்ணமாக இருந்தது.

தமிழக முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர். பிரபாகரனுக்கு சார்பானவராக இருந்தார். எம்.ஜி.ஆரை திருப்தி செய்ய வேண்டியது அவசியம் என்று பிரதமர் ராஜீவ் காந்தி நினைத்தார்.

இறுதியாக இந்திய மத்திய அரசு ஒரு முடிவுக்கு வந்தது.

ஜூன் 5ம் திகதி நெல்லியடி மத்திய கல்லூரியில் கரும்புலித் தாக்குதல் நடைபெற்றதல்லவா.

அதற்கு முதல்நாள் ஜூன் 4ம் திகதி இலங்கையின் வரலாற்றில் ஒரு திருப்பமான சம்பவம் நடைபெற்றது.

இந்திய விமானப்படை விமானங்கள் யாழ் குடாநாட்டு வான்பரப்பில் திடீரென்று தோன்றின.

இலங்கை விமானப்படை விமானங்கள்தான் குண்டுவீச வந்துவிட்டன என்று பீதியுடன் ஓடிய மக்கள் பங்கர்களுக்குள் பதுங்கிக்கொண்டனர்.

முதலில் புலிகளுக்கும் அது யாருடைய விமானங்கள் என்று புரியவில்லை.

அதேசமயம் யாழ்குடாநாட்டு இராணுவ முகாம்களுக்குள்ளும் ஒரே குழப்பம்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

# மறுபடியும் கடல்தாண்டும் படலம்!

## அலசுவது- இராஜதந்திரி

இலங்கையிலிருந்து மீண்டும் தமிழகம் நோக்கித் தமிழ் அகதிகள் செல்ல ஆரம்பித்துள்ளனர்.

வடக்கே இடம்பெற்றுவரும் இராணுவ அழுத்தங்களுக்கு முகங்கொடுக்க முடியாதவர்களாகவே தமிழகம் நோக்கி தமிழ் அகதிகள் செல்லத் தொடங்கியுள்ளனர்.

தமிழகத்துக்கு இலங்கைத் தமிழ் அகதிகள் செல்வது இதுமுதல் தடவையல்ல.

1983ம் ஆண்டு இனக்கலவரம் ஆரம்பித்தது முதற்கொண்டு, கடந்த 13 வருடங்களாக தமிழகமே அப்பாவி இலங்கைத் தமிழர்களுக்குத் தஞ்சமளித்து வருகின்றது .

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலையுண்டதையடுத்து, இந்திய அரசு இலங்கைத் தமிழ் அகதிகளை சந்தேகக் கண் கொண்டு பார்த்தது.

இதன் காரணமாக தமிழகத்தில் இருந்த இலங்கைத் தமிழ் அகதிகள் அவஸ்த்தைக்குள்ளாகும் சூழ்நிலைகளும் உருவாகியிருந்தன.

அன்றிருந்த ஜெயலலிதா அரசு தனது நலன்களை முதன்மைப்படுத்தியதே தவிர, இலங்கைத் தமிழர்விடயத்தில் பாராமுகமாகவே நடந்துகொண்டது.

இலங்கைத் தமிழ் அகதிகளின் நலன்கள் இதனால் பெரிதும் புறக்கணிக்கப்பட்டன. தமிழகத்தில் இலங்கைத் தமிழ் மாணவர்கள் கல்வி பயிலும் வாய்ப்புகளும் நிராகரிக்கப்பட்டன.

இலங்கையில் போன்றே தமிழகத்திலும் இலங்கை தமிழர்கள் கைது செய்யப்பட்டும் தடுத்து வைக்கப்பட்டும் அசௌகரியங்களுக்குள்ளாக்கப்பட்டனர்.

ஆனால் தமிழகத்தில் தற்போது நிலைமை மாற்றமடைந்துள்ளது. ஜெயலலிதாவின் ஆட்சி கவிழ்ந்து கலைஞர் கருணாநிதியின் ஆட்சி மலர்ந்துள்ளது.

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக கலைஞர் கருணாநிதி மனத்தெம்பளிக்கும் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். அத்துடன், தற்போது தமிழகம் செல்லும் இலங்கைத்தமிழ் அகதிகளையும் அவரது அரசு அரவணைப்பதைக் காணமுடிகின்றது.

1983ம் ஆண்டு இனக்கலவரம் வெடித்த போதிலும், பின்னர் தொடர்ந்து வடக்கு-கிழக்குத் தமிழர்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டபோதிலும் அன்றைய முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரன் இன்றைய முதல்வர் கருணாநிதி ஆகியோர் இலங்கைத் தமிழர்களுக்கு தமது ஆதரவை அபரிமிதமாக வழங்கினர்.

பேரினவாத ஆட்சியாளர்களின் இராணுவ அணுகுமுறைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் இலங்கை தமிழர்கள் நின்றுபிடிக்கத் தளம் அமைத்துக் கொடுத்ததே தமிழகமாகும்.

அன்று தமிழ்த்தீவிரவாத இளைஞர்களுக்கு தமிழகம் தளம் அமைக்க அனுமதியளித்திராவிட்டால் இலங்கையின் வடக்கு-கிழக்கில் தமிழர்கள் வாழ்ந்த அடிச்சுவடிகூட இன்று தென்பட்டிருக்காது.

இலங்கையின் இனப்பிரச்சினை இராணுவரீதியாகவே தீர்க்கப்பட வேண்டுமென்பதில் காலத்துக்குக் காலம் ஆட்சிக்குவந்த இலங்கையின் ஆட்சியாளர்கள் ஆர்வங்காட்டுகின்றனர்.


இந்த ஆர்வத்தின் உச்சக்கட்டமாகவே 50 பில்லியன் ரூபாய்கள் வரை பாதுகாப்புச் செலவீனம் உயர்வடையவுள்ளது.

எல்.ரி.ரி.ஈ. என்ற தனி ஓர் அமைப்பை நசுக்குவதற்காக இலங்கை அரசு இவ்வளவு பெருந்தொகைப்பணத்தை செலவிட உத்தேசித்துள்ளது.

இவ்வளவு பெருந்தொகைப்பணமும் ஆட்பலம் ஆயுதபலம் என்பவற்றை அதிகரிப்பதாகவே இருக்கும்.

தனி ஓர் எல்.ரி.ரி.ஈ. அமைப்பை எதிர்கொள்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இப்பெருந்தொகைப்பணமும், அதன் விளைவுகளும், எல்.ரி.ரி.ஈ.யினர் இருந்துவருகின்ற வடக்கு-கிழக்கின் அப்பாவிப் பொதுமக்களையும் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகவே செய்யும்.

ஏற்கனவே இலங்கையில் இராணுவ நடவடிக்கைகளுக்காக கோடி



கோடியாகக் கொட்டித்தீர்க்கப்பட்ட பணம் படுத்திய பாடு உலகறிந்ததே.

சூரியக்கதிர், சத்யஜெய என்று வடக்கே இடம்பெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக அப்பாவிப் பொதுமக்கள் திக்குத்திசை தெரியாது அலைந்து அல்லற்பட்டு வருவதையே அவதானிக்க முடிகின்றது.

இந்த அலைச்சல்களும், அவலங்களும் ஒரு நீண்ட தொடர்கதையாக இருந்துவருகின்றனவே தவிர எவ்விதத்திலும் அவை முற்றுப்பெற்றதாக இல்லை.

கடந்த ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியில் அடிப்படை மனித உரிமைமீறல் நடவடிக்கைகள் எண்ணிலடங்காதிருந்தன.

ஆயிரக்கணக்கானோர் நாட்டின் அனைத்துப்புறங்களிலுமே காணாமல் போனார்கள். மேலும் பலர் சித்திரவதைகளுக்குள்ளானார்கள். அகதிகள், அநாதைகளின் தொகை அபரிமிதமாக அதிகரித்தது.

சந்திரிகா அரசு பதவிக்கு வந்ததும், ஐ.தே.க. ஆட்சியில் இடம்பெற்ற அட்டூழியங்களை வெளிச்சத்துக்குக் கொண்டுவரும் நடவடிக்கையில் குதித்தது.

விசேட ஆணைக்குழுக்களின் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டன. மனித உரிமைகள் செயலணி, ஆணைக்குழு என்றெல்லாம் நிறையவே பேசப்பட்டன.

ஆனால் சர்வதேச மன்னிப்புச்சபை அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கை சந்திரிகா ஆட்சியிலும் கடந்த இருவருடகாலத்தில் அடிப்படை மனித உரிமைகள் கணிசமானளவு மீறப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆட்கடத்தல், பாலியல் பலாத்காரம், வாகன டயரில் போடப்பட்டு எரிக்கப்பட்டுள்ளமை, நீர்நிலைகளில் சடலங்கள் மிதந்தமை போன்று பல்வேறு அடிப்படை மனித உரிமைகளுக்கு ஒவ்வாத சம்பவங்கள் கடந்த இரு வருடகாலத்தில் இடம்பெற்றுள்ளதை சர்வதேச மன்னிப்புச்சபை கோடிட்டுக் காட்டியுள்ளது.

எந்தவொரு தேசத்திலும் யுத்தமென்பது அரசியல் சமூக, பொருளாதார, கலாச்சார விழுமியங்களைப் பாழடித்து விடுகின்றது.

ஜனாதிபதி சந்திரிகா பதவிக்கு வருமுன்னரே கடந்த பத்துவருடங்களுக்குமேலாக வடக்கு-கிழக்கில் யுத்தம் காரசாரமாக சூடுபிடித்திருந்தது.

இந்த யுத்தம் காரணமாக உயிரிழப்புகள், பணவிரயம், உடமை விரயம் என்பன கடந்த 13 வருடங்களுக்குமேலாகவே இருந்துவருகின்றன.

இப்பேரழிவுகளை தடுத்து நிறுத்தி, சமாதானத்தை ஏற்படுத்துவதே தமது நோக்கம் என்று தெரிவித்தே ஜனாதிபதி சந்திரிகா பதவிக்கு வந்தார்.

ஆனால் கடந்த 13 வருடகாலயுத்தத்தில், சென்ற இரு வருடகாலயுத்தமே மிகமோசமானதாக இருக்கின்றது. இதனை ஜனாதிபதிகூட தாம் பங்குபற்றிய வைபவமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த உரை அவரது ஆட்சியின் அணுகுமுறைகளினாலும் யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவராதிருப்பதையே உணர்த்தியுள்ளது.

இந்த வருடத்தில் 50 பில்லியன் ரூபாக்கள் பாதுகாப்புச் செலவுக்காக ஒதுக்கப்படும் என்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறியுள்ளார்.

## சமாதானத்துக்கான கோஷத்தை மீண்டும் பலப்படுத்த வேண்டிய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு!

இந்த 50 பில்லியன் என்பது இலங்கையின் வரவு செலவுத்திட்டத்தில் இதுவரை காலமும் ஒதுக்கப்படாத பெருந்தொகையாக இருக்கின்றது.

இது தவிர இந்த 50 பில்லியன் ஒதுக்கீடு பற்றிக் குறிப்பிட்டுள்ள அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் பொறுப்பிலேயே அரசியல் தீர்வைத் தேடும் பணியும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நீதி, அரசியலமைப்புத்துறை அமைச்சராகவும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இருக்கின்றார்.

மறுபுறத்தே ஜனாதிபதி நிதி அமைச்சராக இருக்கின்றபோதிலும், வரவு செலவுத்திட்டத்தை தயாரிப்பதோடு நிதி ஒதுக்கீடுகள் பற்றி தீர்மானிக்கும் பொறுப்பையும் பேராசிரியர் பீரிஸே கொண்டுள்ளார்.

இந்நிலையில் அரசியல்தீர்வுத் திட்டத்துக்குப் பொறுப்பானவர் என்ற வகையிலும், மறுபுறம் நிதி அமைச்சைக் கையாளுபவர் என்ற விதத்திலும் பேராசிரியர் பீரிஸ் வகிக்கும் பங்கை எடுத்து நோக்கினால், தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளிவிடுதைப் போல இரண்டு நேர் எதிரான பொறுப்புக்களை அவர் சுமக்கிறார்.

சந்திரிகா அரசு பதவிக்குவந்து கடந்த இரு வருடகாலத்திலேயே யுத்தத்திற்கான ஒதுக்கீடு 50 பில்லியனாக உயர்ந்துள்ள நிலையில் இன்னும் இரு வருடகாலத்தில் இத்தொகை 100 பில்லியனாக உயர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

அத்தகைய ஒரு நிலை ஏற்படுமானால் உலகின் பல நாடுகள் ஜெட் வேகத்தில் 21ம் நூற்றாண்டினுள் பிரவேசிக்கும்போது இலங்கை ஒரு மாட்டு வண்டிலின் வேகத்திலேயே 21ம் நூற்றாண்டை அணுக முடியும்.

இராணுவ செலவுகளுக்காகப் பணத்தை வாரி இறைப்பதில் உள்ள ஆர்வம், அரசியல் தீர்வை எட்டுவதில் காட்டப்படவில்லை என்பதையே அரசாங்கத்தின் அணுகுமுறைகள் அணுகுமுறைகள் மூலம் காணமுடிகின்றது.

வரவு-செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையை ஈடு செய்ய இலங்கையின் தலைவர்கள் உலகம் முழுவதும் கையேந்திநிற்கிறார்கள்.

கடந்தவாரம்கூட ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தென்கொரியாவுக்குப் பயணமாகியிருந்தார்.

அங்கே இலங்கையின் வரவு-செலவுத்திட்டத்தை சரிசெய்வதற்கு தென்கொரிய ஜனாதிபதியிடம் உதவிகோரி 50 மில்லியன் அமெரிக்க டாலர்கள் பணத்தையும் கடனாக ஜனாதிபதி சந்திரிகா பெற்றுள்ளார்.

'யுத்தம் பொல்லாதது சமாதானமே அவசியம் தேவை, சமாதானமுயற்சிகள் தோல்வியுற்றால் மீளவும் சமாதானமுயற்சிகளையே ஆரம்பிப்போம்.'

இவ்வாறெல்லாம் பொது ஜன ஐக்கிய முன்னணியினர் கோஷங்கள் போட்டதையும், பதாகைகள் ஏந்திப் பேரணிகள் நடத்தியதையும் நாட்டு மக்கள் மறந்துவிடவில்லை.

இந்நிலையில் யுத்தம் தொடர்ந்து நீடிக்கும் அறிகுறிகளே பலமடையும் இத்தருணத்தில், மீண்டும் யுத்தத்துக்கெதிரான தனது நிலைப்பாட்டை பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு ஸ்திரப்படுத்தவேண்டியதே காலத்தின் தேவையாகவுள்ளது.

---

**இது 8.5.84ல் யாழ்ப்பாணம் ஈழநாடு பத்திரிகையில் அதன் ஆசிரியர் த.சபாரத்தினம் எழுதிய ஆசிரியர் தலையங்கம். இந்த எடுத்துரைத்தல்கள் எல்லாம் ஏற வேண்டியோர் செவியில் ஏறியிருந்தால் இன்று இந்நிலை வந்திருக்குமா? இன்றும் பொருந்தக்கூடியதாக இத்தலையங்கம் அமைவதற்கு என்ன காரணம்? இன்று வரை உரியவர்கள் இனப்பிரச்சனையைத் தீர்க்க உரிய வழிவகைகளை நாடவில்லை என்பதுதான் காரணம்.**

இன்று நாட்டை எதிர் நோக்கும் தேசியப் பிரச்சனை வேறு; தேசிய பந்தோபஸ்து வேறு.

வட்டமேசை கூட்டப்பட்ட வேகத்தை நாம் மறந்துவிட்டோம். தமிழ் மக்கள் பிரச்சனைக்கு ஒரு முடிவு காண சர்வகட்சிகள், மதத்தலைவர்கள் அவசரப்பட்டுக் கூடினர்.

இதொரு சீரியஸ் நோய் என்றும், நோயாளி அவசர பிரிவிற் சேர்க்கப்பட்டு ஒக்சிஜன் கொடுக்கப்பட்டு சேலைன் ஏற்றப் பட்டுக் குணப்படுத்த வேண்டுமென்ற தீவிரம் ஆரம்பத்தில் காணப்பட்டது.

நோய் குணப்படலாமென்ற அச்சங் கொண்டவர் இடைவழியில் மருத்துவத்தைக் குழப்பிவிட்டனர்.

இதனையடுத்து, இதற்குப் பொறுப்பான ஆளுங்கட்சியும் பல சுற்று மாற்றுப் பேச்சுக் களிலும் குழுக்கள் அமைப்பதிலும் காலம் தாழ்த்தியது. அடிக்கடி, குழப்பமான பேச்சுக் களும், பத்திரிகை விமர்சனங்களும், இவைக்கு உருக்கூட்டும் வன்செயல்களும் நீண்ட விடு முறைக்கு வழி தேடின.

பத்திரிகைகளின் பத்துவிதமான தீர்ப்புக் கள் பாரதூரமான நடவடிக்கைகளுக்கு வழி கோலின.

இந்தியா ருடே, எங்கள் நாட்டில் அண்மையில் நடந்த சம்பவங்களுக்கு எவ்வாறு உதவினதென்பதை எத்தனை பேர் அறிவார்கள்?

இதற்கு அடிகோலியவர் யார்? இவ்வித உத்திகள் யாருக்கு உதவுகின்றன? விடயத் துக்கு தீர்வுகாண யார் துடிக்கின்றனர்?

இந்த நிலையில் உருவானதே தேசிய பந்தோபஸ்து அமைச்சு. என்னென்ன சாதனைகளை இந்தக் குறுகிய காலத்தில் இந்த அமைச்சு நிலை நாட்டிவிட்டது.

இலங்கை இந்தியாவை ஆக்கிரமிக்கா தென்ற உறுதி மொழியை பந்தோபஸ்து அமைச்சர் புதுடில்லி சென்று நேரில் வழங்கியதோடு இந்தியாவும் அவ்வாறு இலங்கையை எவ்விதத்திலும் ஆக்கிரமிக்காது என்ற வாக்குறுதியையும் இந்தியப் பிரதமரிடம் பெற்றிருக்கிறார்.

### தீர்வு தேடிநிற்கும் தேசியப் பிரச்சனை

எனவே தேசிய பந்தோபஸ்து பற்றி ஏன் இந்தப் பரபரப்பு? காலந்தாழ்த்தவா?

வடபகுதி பயங்கரவாதம் தமிழ் மக்களின் அடிமை நிலையில் உருவாகி வளர்ந்திருக் கிறது.

இதனை ஒழிக்கவே வட்டமேசை ஆரம்ப மானது.

துடிதுடிப்புடன் ஆரம்பமான வட்ட மேசை மாநாடு வேகம் குன்றி, பலம் குறைந்து, நீண்ட காலம் ஒத்திவைக்கப்பட்டது. தேசியப் பிரச்சனையான தமிழர் பிரச்சனை குளிர்சாதனப் பெட்டிக்குள் அடங்கிவிட்டது.

பேசப்படுவதெல்லாம் வடபகுதிப் பயங் கரவாதம் பற்றியே. நாட்டில் பல்வேறு தொல்லைகளும் துயரங்களும் நிரம்பி வழிந்து கொண்டிருந்த போதும் தமிழர் பிரச்சனையே முதன்மையானதென்பதை மறந்து, அதற்குத் தீர்வு கண்டால் மற்றவை தாமாகவே மறைந்து விடுமென்பதை உணர மறுப்பதே இன்றைய இக்கட்டான நிலை.

எதிர்க் கட்சிகளின் கருத்தை நாம் முற்றாகத் தள்ளிவிட முடியாதிருக்கிறது. தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை அதிபாரமாகக் கொண்டதே தமிழ்ப் பிரதேசங் களின் சுயநிர்ணயம். இதனை மழுப்பி பல தாமதங்களும் தடைகளும் உருவாக்கப் படுவது மக்கள் கவனத்தை திசைதிருப்பவே என்பது எதிர்க்கட்சித் தலைவர்கள் பலரின் உறுதியான நம்பிக்கை.

நாம் அதனை முற்றும் ஆதரிப்பது தர்மம் அல்லவென்றாலும், சர்வகட்சி மாகா நாடு, சர்வ மத மாகாநாடு கூடிக் கூடிப் பேசிப் பேசி ஒரு நல்ல முடிவுக்குவர உற்சாகமும் பலமும் அளிப்பது அரசின் கடமை: அவசியப் பொறுப்பு.

அமைதி வாழ்வில் நம்பிக்கைகொண்ட தமிழ் மக்கள் பயங்கரவாதத்தை ஆதரிக்க வில்லை: அதே சமயம் கடந்த 36 வருடங்களில் தமிழ் மக்கள் அடுத்தடுத்து அடைந்துவரும் தோல்விகள் இந்தச் சூழ்நிலையை உருவாக்கி வந்ததை தெளிவாக உணர்கின்றனர்.

எரியும் நெருப்புக்குத் தண்ணீர் ஊற்ற மறுக்கும் ஞானம் என்ன விளைவை ஏற்படுத் தும்?

நாளை கூடும் சர்வ கட்சி மாகாநாடு, எமது மனதிற்படும் ஒரு திடமான உண் மையை கவனத்தில் கொள்ளவேண்டுமென விரும்புகின்றோம்.

சமாதான வாழ்வுக்கு, சுதந்திர வாழ் வுக்கு உரித்தான எங்களை எத்தனை நாட் களுக்குத் தான் வதைக்க முடியும்? இவ்வளவு கொடுமைகளை அனுபவித்த மக்களை, மரணத்தை நேரில் அடிக்கடி கண்ட மக்களை எப்படிக் கொல்ல முடியும்?

தம்மைத் தாமே ஆளும் உரிமையை எவ்வளவு காலம் மறுக்கமுடியும்?


படிப்பகம்

# கொள்ளை ராணி

## பூலான்தேவி


பூலான

பூலான் தேவியின் தந்தையின் **இதுவரை**
நிலத்தை, அவரது தம்பி
அபகரித்து விடுகிறான். அக்காணிக்கு
சென்ற பூலானும், அவளது சகோதரியும்
அடித்து துவைக்கப்பட்டனர்.
பூலானின் தாயும் தந்தையும்
மரத்தில் கட்டிவைக்கப்பட்டு தண்டிக்கப்பட்டனர்.
பூலானுக்கு பதினொருவயதில்
திருமணம் நடத்திவைக்கப்படுகிறது.
கணவன் புத்திலாலுக்கு 31 வயது
புத்திலாலை பூலான் வெறுக்கிறாள்.
தன்னை பலவந்தப்படுத்தி உறவு கொள்ள
முயலும் புத்திலாலை பூலான் தாக்குகிறாள்.
பூலானை கூட்டிச்செல்லுமாறு
அவளது தந்தைக்கு தகவல் அனுப்ப, **இனி**
அவர் வந்து அழைத்துச் செல்கிறார்.

**6**

நான் அப்பாவோடு வீடு திரும்பிய போது அம்மாவின் முகத்தில் வாட்டம் தெரிந்தது. நான் திரும்பி வருவேன் என்று அம்மா எதிர்பார்க்கவில்லை.

புத்திலாலை சமாதானப்படுத்தி விட்டு, எனக்கும் புத்தி சொல்லிவிட்டு வரத்தான் அப்பாவை அனுப்பிவைத்தாள் அம்மா.

கல்லானாலும், புல்லானாலும் கணவன் என்ற பண்பாட்டில் வளர்ந்தவள் அல்லவா. கல்லு என் தலையில் விழுந்து நான் செத்துப்போனால் அம்மா என்ன செய்வாள்?

ஒரு நாலு நாட்களுக்கு நினைத்து நினைத்து அழுவாள். பின்னர் மெல்ல, மெல்ல பூலான் என்றொருத்தி இருந்ததையே மறந்துவிடுவார்கள்.

பெண்ணுக்கு புத்திசொல்லமட்டும் யாருக்குமே வாய் புளிப்பதில்லை.

"அடங்கிப்போ.
அடங்கிப்போ
அடங்கிப்போ!"

எல்லோருமே அதைத்தான் சொல்கிறார்கள். பதினொருவயதில் என்னை தாரைவார்த்துவிட்டு, ஒரு மிருகத்தின் கையில் தூக்கிக்கொடுத்துவிட்டு இவர்களால் எப்படி இருக்கமுடிந்தது.

என்னைப்பற்றி யாரும் அக்கறைப் படாதபோது, நான் மட்டும் ஏன் இவர்கள் சொல்வதைக் கேட்க வேண்டும்?

என் உடம்பெல்லாம் அட்டை ஊர்வதுபோல அந்த புத்திலால் கைகளால் தடவினானே. நினைக்கவே பயமாக இருக்கிறது. என்மேலே நிர்வாணமாக புரண்டானே. என்ன செய்ய நினைத்தானோ?

சொல்லியழ யாரும் இல்லை. என் பயத்தை யாரிடம் சொல்வது? அம்மா என்னைப் பார்க்கும் பார்வையே சரியில்லை. ஏதோ நான்தான் குற்றம் செய்தவள்போல குத்திக்காட்டுகிறாள்.

ஓநாய் ஒன்று ஆட்டை அதுவும் குட்டி ஆட்டை அடித்துத்தின்னத் துரத்துகிறது. ஆடு தப்பி ஓட ஆசைப்படுகிறது.

தருவது—ரசிகன்

எல்லோரும் ஏன் ஆட்டைப்பிடித்து ஓநாயிடம் கொடுப்பதற்கு ஒற்றைக்காலில் நிற்கிறார்கள்?

எனக்குப் புரியவில்லை.

ஆனாலும் நான் பிடிவாதமாக இருந்தேன். புத்திலாலிடம் செல்லமாட்டேன் என்று அடம்பிடித்தேன்.

நான்கு வருடங்கள் என்பிடிவாதத்தோடு சேர்ந்து கழிந்து போயின.

என்னை தியோகா என்ற கிராமத்துக்கு அனுப்பிவைக்க முடிவுசெய்தாள் அம்மா.

அங்கு எங்கள் மாமி வீடு இருந்தது. மாமியின் மகளுக்கு குழந்தை பிறந்திருந்தது. அவர்களுக்கு உதவியாக இருப்பதற்காக அம்மா என்னை அனுப்பிவைத்தாள்.

மாமியும், அவள் மகளும் என்னுடன் அன்பாகப் பழகினார்கள். அதுவுமே எனக்கு ஒரு ஆறுதலாக இருந்தது.

மாமிக்கு ஒரு மகன் இருந்தான். அவன் பெயர் கைலாஸ். அவனுக்கு திருமணமாகியிருந்தது. அவன் மனைவிக்கு என்னைவிட இரண்டு மூன்று வயது அதிகமாக இருக்கலாம்.

பதினைந்து வயதில் நான் வயதுக்கு மீறிய வளர்த்தியில் இருந்தேன். கைலாஸின் மனைவியோ குச்சிபோல இருந்தாள். எப்போதும் சோம்பலுடன் தூங்கிக் கொண்டே இருப்பாள்.

கைலாஸ் என்மீது மிக்க அன்பாக இருந்தான். 'பூலான், பூலான்' என்று என்னையே சுற்றிவர ஆரம்பித்தான்.

எனக்கும் கைலாஸைப் பிடித்திருந்தது. இதற்கு முன்னர் யாருமே என்மீது அத்தனை அன்பைப் பொழிந்ததில்லை.

ஒருநாள் கைலாஸ் என்னிடம் தாழ்ந்த குரலில் கேட்டான்; "பூலான் உனக்கு என்ன பிடிக்கும்?"

நான் எப்படி சட்டென்று அப்படி ஒரு பதிலைச் சொன்னேன் என்று தெரியவில்லை; "உன்னைப் பிடிக்கும்" என்றேன்.

கைலாஸின் முகம் மலர்ந்துபோனதைக் கவனித்தேன். என்னை ஆசையோடு பார்த்தான். பின்னர் சுற்று முற்றும் பார்த்துவிட்டு என்னை நெருங்கிவந்தான்

நான் எதிர்பார்க்கவேயில்லை.

கிட்டவந்தவன் தன் கைகளை நீட்டி என் கழுத்தை வளைத்தபடி, என் முகத்தை நோக்கி குனிந்து, என் உதடுகளை தன் உதடுகளால் கவ்வினான்.

எனக்கு அது முதல் அனுபவம்.

திகைத்துப்போனேன்.

என் திகைப்பு அடங்குவதற்கிடையில் கைலாஸ் விலகிச் சென்றுவிட்டான்.

அவன் விட்டுச் சென்ற ஈரம் உதட்டில் ஒட்டியிருந்தது.

அன்று இரவு முழுக்க எனக்கு தூக்கம் வரவில்லை. முதலில் திகைப்பாக இருந்தது. பின்னர் மாமிக்கு தெரிந்தால் என்னாகுமோ என்று பயமாக இருந்தது. அதன் பின்னர் தனிமையில் இருந்து நினைத்துப்பார்க்க வேண்டும் போல இருந்தது.

நினைத்துப்பார்த்தபோது நெஞ்சுக்குள் சில்லிட்டது. மீண்டும் மீண்டும் அந்தக் காட்சி வந்து போனது.

அதிகாலையில்தான் தூங்கிப்போனேன்.

காலையில் எழுந்ததும் மாமி என்னை "பூலான் இங்கே வா" என்றாள்.

எனக்கு 'திக்' என்றிருந்தது.

மாமிக்கு தெரிந்துபோயிருக்குமோ?

"எ...என்ன மாமி?" என்றேன்.

"கைலாஸ்!" என்று உரத்த குரலில் கூப்பிட்டாள். எனக்கு கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை.

நன்றாக மாட்டிக்கொண்டோம். மாட்டிக் கொண்டதைப் பற்றிக்கூட கவலையில்லை. மீண்டும் என் கிராமத்துக்கு செல்ல வேண்டி வரும். அங்கே என்னை குற்றம் சாட்டுவது போல பார்ப்பதும், குத்திக்காட்டுவதுமாக இருக்கும் அம்மாவை சகித்துக்கொண்டிருக்க வேண்டுமே என்பதுதான் பெரும் கவலையாகவிருந்தது.



கைலாஸ் வந்துவிட்டான்.

"அம்மா கூப்பிட்டாயா?" கேட்டுக் கொண்டே என்னை ஓரக்கண்ணால் பார்த்தான்.

'படுபாவி எல்லாம் உன்னால்தானே' என்பதுபோல நானும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

"கைலாஸ் நீ கான்பூருக்குத்தானே போகிறாய்?"

"ஆமாம், ஏன் அம்மா?"

"பூலான் இங்கு வந்ததில் இருந்தே வெளியே எங்கேயும் போனதில்லை. கான்பூருக்கு அவளையும் அழைத்துப் போயேன்!" என்றாள் மாமி.

'அப்பாடா' அதுவரையும் இழுத்துப் பிடித்து வைத்திருந்த மூச்சு அப்போதுதான் வெளியேறியது.

நானும், கைலாசும் பஸ்ஸில்தான் கான்பூர் பட்டினத்திற்கு சென்றோம்.

கைலாஸ் எனக்கு கண்ணாடி வளையல்கள் வாங்கித்தந்தான். இருகைகளிலும் முழங்கைவரை கண்ணாடி வளையல்களை அவனே போட்டுவிட்டான்.

எனக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. அப்படியே கைலாஸைக் கட்டிப்பிடித்து அவன் எனக்குச் செய்ததுபோல, நானும் அவன் உதட்டைக் கவ்வவேண்டும் போல இருந்தது.

கைலாஸ் என்னை ஒரு கோவிலுக்கு அழைத்துச் சென்றான். கோவிலில் அப்போது ஆள் நடமாட்டமே இருக்கவில்லை.

கைலாஸ் நேராக மூலஸ்தானத்துக்குள் சென்று ஒரு பூமாலையை எடுத்துவந்தான். 'ஏன் பூமாலையை எடுத்துவருகிறான்?' என்று நான் நினைத்து முடிப்பதற்கு இடையில்,

கைலாஸ் என்னை நெருங்கி, அந்தப் பூமாலையை என் கழுத்தில் போட்டுவிட்டான்.

எல்லாமே ஒரு கனவுபோல, என்ன நடக்கிறது, என்ன செய்கிறான் என்று உணர்ந்து கொள்வதற்கிடையில் நடந்து முடிந்துவிட்டன.

நான் மலங்க மலங்க விழித்தபடி நிற்க, என் இரண்டு தோள்களிலும் கைகளை ஊன்றியபடி, என்னை நேராகப் பார்த்தபடி, "பூலான் நீ என் மனைவியாகிவிட்டாய்! என்ன புரிகிறதா, நீ இப்போது என் மனைவியாகிவிட்டாய்!"

சட்டென்று எனக்கு அழுகை வெடித்தது. அப்படியே அவன்மார்பில் முகத்தை சாய்த்துக்கொண்டு விம்மினேன். என் கண்ணீர் கைலாசின் சட்டையை நனைத்தது.

கைலாஸ் ஆதரவாக என் முதுகை தடவிக் கொடுத்தான். என் உச்சந்தலையில் முத்தமிட்டான். எனக்கு உடம்பு முழுக்க நெருப்பாய் கொதித்தது.

என் முகத்தை உயர்த்தி, "உனக்கு சந்தோசம்தானே?" என்றான்.

"பயமாக இருக்கிறது

"என்ன பயம்?" நெற்றியில் தனது உதட்டைக் குவித்து முத்தமிட்டான். சுட்டது.

"மாமிக்கு தெரிந்தால்..."

"அதையெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். நீ ஒன்றுக்கும் பயப்பிடாதே என்ன?"

"உங்கள் மனைவி?"

"அவள் ஒன்றும் சொல்லமாட்டாள். அப்படி ஏதாவது சொன்னாள் என்றால், ஒரே உதை, ஓடிப்போய் மூலையில் சுருண்டு விழுவாள். அவளுக்கு தூங்கமட்டும்தான் தெரியும். அவள் ஒரு குழந்தை பெற்றதே பெரிய அதிசயம்!"

"பாவம்தானே!" என்றேன். கைலாசுக்கு கோபம் வந்துவிட்டது.

"நான் பாவம் இல்லையா? ஒரு நாளாவது அவளும், நானும் அன்பாகப் பேசிப் பார்த்திருக்கிறாயா? நான் தூங்கமுன்னரே நன்றாக தூங்கிப்போய்விடுகிறாள். குழந்தை பிறந்தபின் ஒருநாள்கூட நான் அவளை தொட்டது கிடையாது. தெரியுமா? அவளுக்கு எதிலுமே இஷ்டமில்லை. உன்னை மட்டும் காணவில்லையென்றால், நான் எவளாவது ஒருத்தியுடன் கிராமத்தைவிட்டே எங்காவது ஓடிப்போயிருப்பேன்" கைலாஸின் கண்கள் கலங்கியிருந்தன. எனக்கு அவனைப் பார்க்கப் பாவமாக இருந்து.

கிராமத்துக்கு திரும்பிச் செல்லும்போது ஒரு மலையின் மறைவுக்கு என்னை அழைத்துச் சென்றான்.

"ஏன் இங்கே?" என்றேன்.

"இதற்குத்தான்" என்று என்னை கட்டிப் பிடித்துக்கொண்டான்.

என் உதடுகளை தன் உதடுகளால் கவ்வியபடி, பற்களால் என் கீழ் உதட்டைக் கடித்தான். என் கழுத்தை தன் இடதுகரத்தால் வருடிப்பார்த்துவிட்டு, கைகளை கீழே இறக்கி துழாவ ஆரம்பித்தான்.

எனக்கும் அவன் செய்கைகள் பிடித்திருந்தது. முதன்முதலாக ஒரு ஆணின் கரம் என் உடலில் அதுவரை படாத இடங்களில் எல்லாம் பட்டுக்கொண்டிருந்தது.

புத்திலால் தொட்டதற்கும், கைலாஸ் தொடுவதற்கும் இடையில்தான் எத்தனை வித்தியாசம்.

கைலாஸ் அப்படியே என் காலடியில் மடங்கி அமர்ந்தான். அங்கிருந்தே என் முகத்தை அண்ணாந்து பார்த்து, "நீதான் என் தேவதை!" என்றான். அப்படியே என் கால்களைக் கட்டிக்கொண்டு, என் அடிவயிற்றில் தன் முகத்தை வைத்துக் கொண்டான். கால்களை கட்டியிருந்த கைகளில் ஒன்று என் பின்புறமாக இடுப்புக்கு கீழே அலைந்து கொண்டிருந்தது. அவன் முகம் கீழே இறங்கிக் கொண்டிருக்க, நான் கண்களை இறுக மூடியபடியே, உணர்ச்சிக் கொந்தளிப்பை அடக்க முடியாமல், "கைலாஸ்..! கைலாஸ்..." என்று உச்சரித்துக் கொண்டிருந்தபோதுதான்..

'டுமீல்'

அந்த மலைப்பகுதியே அதிருவது போல அந்த வெடிச்சத்தம், எமக்கு மிக அருகில் கேட்டது. கூடவே காலடிச் சத்தங்களும் காதுக்கு அருகே கேட்டன.

கண்களை திறக்க பயமாகவிருந்தது.

கைலாஸ் தன் பிடியை விட்டிருந்தான்.

கண்களை திறக்காமலேயே

"கைலாஸ்!" அழைத்தேன்.

பதில் இல்லை!

கைலாசுக்கு என்னாயிற்று?

துணிந்து கண்களைத் திறந்து பார்க்க, எதிரே-அவர்கள்.. ராட்சதர்கள் போல் நின்றனர். கைகளில் துப்பாக்கிகள்.

உடனே புரிந்தது,-அது

'கொள்ளைக்காரக் கும்பல்.'

(தொடர்ந்து வரும்)

# சின்னத் திரையில்

## ஒரு தடை



இந்தியாவில் தனியார் தொலைக்காட்சிகள் பெருகிவிட்டன. சில்லறைக்கடை ஆரம்பிப்பதுபோல நாள் ஒரு தொலைக்காட்சி அலைவரிசை புதிதாக ஆரம்பமாகிக் கொண்டிருந்தது.

புதுடில்லி நீதிபதி ஒருவரின் தீர்ப்பினால் தனியார் தொலைக்காட்சி அலைவரிசைகள் திண்டாடிக்கொண்டிருக்கின்றன.

கிளு கிளுப்பான காட்சிகளுக்கு தடை போட்டுவிட்டார் நீதிபதி. இனிமேல் விளம்பரங்கள் உட்பட சகல படங்களையும் தணிக்கைக் குழுவிடம் போட்டுக் காண்பித்துவிட்டுத்தான் திரையிடலாம் என்று தீர்ப்புக் கூறிவிட்டார்.

ஆங்கிலத்திரைப்படங்களில் அடிக்கடி முத்தமிட்டுக் கொண்டிருக்கிறார்கள். முத்தத்தோடு மட்டும் நின்றால் பரவாயில்லை மேற்கொண்டும் பல்வேறு காரியங்களில் ஈடுபடுகிறார்கள். அதனால் இந்திய கலாச்சாரம் கெட்டுப்போகிறது என்று குரல்கள் எழுந்தன.

அந்தக் குரல்கள் அலட்சியம் செய்யப்பட்டன. இப்போது நீதிபதியே குரல் கொடுத்துவிட்டார். மீற முடியவில்லை.

"இந்திய படங்களில் வரும் பாடல்காட்சிகளில் மட்டும் என்ன இருக்கிறது. நடன அசைவுகளைப் பாருங்கள். காம சாஸ்திரத்தையே கற்றுக் கொடுக்கிறார்கள். ஆங்கிலப் படங்களை மட்டும் குற்றம் சொல்ல முடியாது. இதெல்லாம் சகஜம். கடற்கரைகளிலும், பூங்காக்களிலும் என்ன நடக்கிறது? சினிமாவை பார்க்காவிட்டால் மட்டும் இதெல்லாம் ஒழிந்துபோய்விடுமா? போலித்தனமான கலாச்சார கூச்சல்களின் மத்தியில் மாற்றங்கள் இயல்பாக நடந்துகொண்டிருக்கின்றன. அவற்றை தடுக்க முடியாது" என்று பதிலடி கொடுத்திருக்கிறார்கள் தனியார் தொலைக்காட்சிக்காரர்கள்.

"அரசாங்கத்திடமும், தணிக்கைக் குழுவிடமும் தெளிவான கொள்கை ஒன்று இருக்குமானால் தொலைக்காட்சிகளில் ஆபாசம் தலைதூக்குவதைத் தடுக்கலாம்" என்கிறார்கள் ஒரு சாரார்.

நம்நாட்டில் ஈ.ரி.வி.யில் ஒளிபரப்பாகும் 'பேவோட்ச்' போன்ற படங்களுக்கும் இந்தியாவில் தற்போது தடைவிதிக்கப்பட்டுள்ளது.

செழிப்பான அழகிகளைத் தேடிப் பிடித்து நடிக்கவைத்து தயாரான 'பேவோட்ச்' போன்ற படங்களை பார்க்க முடியவில்லையே என்று ஏராளமான ரசிகர்கள் ஏங்கிக் கொண்டிருப்பதும் சோகம்தான்.

தொலைக்காட்சிகளுக்கு ஏற்பட்டுள்ள இத் தடையால் இந்தியப் பட தயாரிப்பாளர்களுக்கு சின்ன ஆறுதல்.

கிளு கிளுப்பை சின்னத் திரையில் காண முடியாதவர்கள் திரையரங்குகளுக்குத்தானே வந்தாக வேண்டும் என்று நினைக்கிறார்கள் தயாரிப்பாளர்கள்.

# இம்ரான்கானின்

## இரண்டு சந்தோசங்கள்

இம்ரான்கான் சந்தோசத்தில் இருக்கிறார். சந்தோசத்துக்கு இரண்டு காரணங்கள்.

மனைவி ஜெமீமா ஐந்துமாத கர்ப்பிணியாக இருக்கிறார். அது ஒரு காரணம்.

இங்கிலாந்து முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் இயன் போத்தமும், ஆலன் லாம்ப்பும் இம்ரான்கானுக்கு எதிராக தொடர்ந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. அதுதான் இரண்டாவது காரணம்.

அந்த வழக்கு தொடுக்கப்பட்டது ஏன் என்பது பற்றி ஒரு சிறுவிளக்கம்.

பாகிஸ்தானின் முன்னாள் கப்டனும், பல்லாயிரம் பெண் ரசிகைகளின் கனவு நாயகனுமான இம்ரான்கான் வேகப்பந்து வீச்சிலும் சூரர்.



பந்துகள் அவர் கையில் பட்ட பாடு என்ன? அவர் பந்துகள்மீது செய்த தந்திர வித்தைகள் என்ன என்பதெல்லாம் ஒரு கட்டத்தில் அம்பலமாகியிருந்தன.

பந்தின் நூலைப் பிரிப்பது, நகத்தால் யாருக்கும் தெரியாமல் சுரண்டுவது, கொக்கோகோலா போத்தல் மூடியால் உரசுவது என்றெல்லாம் பந்தை பாடாய் படுத்தியிருக்கிறார் இம்ரான்கான்.

அந்தக் குற்றச் சாட்டுக்கள் எழுந்தபோது இம்ரான்கான் மறுக்கவில்லை. உண்மையை ஒப்புக்கொண்டார். ஒப்புக்கொண்ட சூட்டோடு சூடாக அவர் சொன்ன விஷயம் ஒன்றுதான் வழக்குவரை கொண்டுபோய் நிறுத்தியது.

அப்படி என்ன சொன்னார் இம்ரான்கான்?

இதோ, இப்படித்தான் சொன்னார்;

"கிரிக்கெட்டில் எல்லாப் பந்துவீச்சாளர்களுமே இப்படியான வேலைகளில் ஈடுபடுகின்றனர். ஆனால் அவர்களையெல்லாம் விட்டுவிட்டு என்னைக் குற்றம் சாட்டுகிறார்கள். காரணம், இனவெறி.

ஒக்ஸ்போர்ட்டில் படித்தவர்கள் யாரும் அப்படிப் பேசுவதில்லை. லாம்ப், போத்தம் போன்றோர்தான் பேசுகிறார்கள். இதனால் ஒருவருடைய பிறப்பு, வளர்ப்பு போன்றவற்றையும் கவனிக்க வேண்டி இருக்கிறது." என்று 1992ம் ஆண்டு 'இந்திய ருடே' சஞ்சிகைக்கு பேட்டியளித்திருந்தார் இம்ரான்கான்.

பேட்டியை பார்த்ததும் லாம்ப்புக்கும், போத்தமுக்கும் மூக்கின்மேல் கோபம் வந்துவிட்டது.

இம்ரான்கான்மீது அவதூறு வழக்குத் தொடுத்தனர்.

அந்த வழக்கின் விசாரணை சில வாரங்களுக்கு முன்னர் இலண்டனில் நடைபெற்றது.

தனது மனைவி சகிதம் ஆஜராகியிருந்தார் இம்ரான்கான். அவருக்காக உலகப் புகழ் வாய்ந்த சட்டத்தரணிகள் ஆஜராகியிருந்தனர்.

குறுக்கு விசாரணையில் இயன்போத்தம் திணறிப்போனார்.

"நியூஸிலாந்துக்கு நீங்கள் விளையாடச் சென்றபோது, அங்கு ஒரு இளம் பெண்ணுடன் ஜாலியாக சுற்றினீர்கள். நீங்கள் இருவரும் போட்ட ஆட்டத்தைப் பற்றி பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. உண்மையா இல்லையா?"

"ஆம் அறிவேன்" என்றார் இயன்போத்தம்.

அடுத்த கேள்வியை வீசினார் சட்டத்தரணி.

"அந்தப் பத்திரிகைகள்மீது நீங்கள் ஏன் வழக்குத் தொடுக்கவில்லை?"

"பிரச்சனையை பெரிதாக்குவானேன் என்று விட்டுவிட்டேன்!"

"ஏன், உண்மையை நிரூபித்துவிடுவார்கள் என்ற அச்சத்திலா?" என்று கேட்டார் சட்டத்தரணி. போத்தம் பதில் சொல்லவில்லை.

நியூசிலாந்துக்கு சென்றபோது போதைப்பொருள் கடத்தியதையும் போத்தம் வாயாலேயே ஒப்புக்கொள்ள வைத்தார் சட்டத்தரணி.

இம்ரான்கான் ஒரு பாகிஸ்தானியர் என்பதாலும், அவர்மீது தனிப்பட்ட பொறாமையாலுமே அவதூறு வழக்குத் தொடரப்பட்டது என்பதை தனது வாதத் திறமையால் நிரூபித்தார் இம்ரான்கானின் சட்டத்தரணி.

ஒருவாரம் வழக்கு விசாரணை சூடாக நடைபெற்றது.

இறுதியாக இம்ரான்கானுக்கு சாதகமாக வழக்கு முடிந்தது.

மனைவியோடு முகமெல்லாம் புன்னகையோடு நீதிமன்றத்தை விட்டு வெளியேறினார் இம்ரான்கான்.

வழக்கு முடிந்ததும் இயன் போத்தம் பத்திரிகையாளர்களுக்கு சொன்னது இது;

"நானும் இம்ரான்கானின் காதல் லீலைகளை புட்டுப்புட்டு வைத்திருப்பேன். ஆனால் ஜெமீமா பாவம். கர்ப்பமாகவும் இருக்கிறாள். இம்ரான்கானின் லீலைகளை அறிந்தால் அதிர்ச்சியடைந்துவிடுவாள். அதுதான் போகட்டும் என்று விட்டுவிட்டேன்"

தனது சட்டத்தரணிகளுக்காக நாள் ஒன்றுக்கு 50 ஆயிரம் ரூபாவரை சம்பளமாகக் கொட்டியிருக்கிறார் இம்ரான்கான்.

எப்படியோ வழக்கை வென்றதில் இம்ரான்கானுக்கு நிம்மதி.

சமீபத்தில் இம்ரான்கான் சொன்ன சர்ச்சைக்குரிய மற்றொரு கருத்து: "அசாருதீனுக்கு கப்டனாக இருக்கத் தகுதியில்லை" என்பதுதான். 'இம்ரான்கானுக்கு நாக்கு நீளம்தான். அதனை தேவையான இடங்களில் மட்டும் உபயோகிக்கலாமே' என்று அவரது எதிரிகள் சொல்வதிலும் உண்மை உண்டு. இனியாவது இம்ரான்கான் கவனிக்கவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com



## ஆமைகளின் வெளிநாட்டு விஜயம்

என்ன இது கொட்டிக்கிடக்கு என்று வியப்பாக இருக்கிறதல்லவா. எல்லாமே ஆமைகள். இவற்றுக்கு நட்சத்திர ஆமைகள் என்று பெயர். ஆமைகளில் உயர் தரமானவை.

அழகும் ஆபத்து. அழகாய் இருப்பதும் ஆபத்து என்பதுபோல இந்த ஆமைகள் அழகாகவும், தரமாகவும் இருந்ததுதான் ஆபத்தாகி விட்டது.


இந்தவகை ஆமைகளுக்கு சிங்கப்பூரில் மவுசு. மருத்துவ தேவைக்காக, உணவுக்காக, வீட்டில் அழகுக்கு வளர்க்க என்று பல காரணங்களுக்காக நல்ல விலை கொடுத்து வாங்குகிறார்கள். ஒரு ஆமையின் விலை 200 சிங்கப்பூர் டொலர்.

தமிழ்நாட்டில் உள்ள வர்த்தகர் சிங்கப்பூருக்கு இந்த ஆமைகளைக் கடத்த கொண்டு சென்ற போது வனத்துறை அதிகாரிகளிடம் வசமாக மாட்டிக்கொண்டார். வெங்காய மூடைகள் என்ற பெயரில் உள்ளே உயிருள்ள ஆமைகளை வைத்து கடத்துவதுதான் தந்திரமாம்.

மீட்கப்பட்ட இந்த ஆமைகளை தற்போது சென்னையில் உள்ள பூங்கா ஒன்றில் வைத்து பராமரித்து வருகின்றனர். மீட்கப்பட்ட ஆமைகளின் எண்ணிக்கை ஆயிரத்தி பதினாறு. மாட்டியவை இவை. மாட்டாமல் சிங்கப்பூருக்கு விமானத்தில் சென்றவை எத்தனை ஆமைகளோ?

## குழந்தை ஒன்று தலை இரண்டு

மெக்சிக்கோ நகரில் உள்ள ஒரு மருத்துவமனையில் நிகழ்ந்த அதிசயம் இது. இரண்டு தலையுடன் ஒரு பெண் குழந்தை பிறந்தது. எப்பாடுபட்டாவது அந்த அதிசயக் குழந்தையை பாதுகாக்க டாக்டர்கள் தீவிரமாகப் போராடிவருகின்றனர். உயிர்பிழைக்க நாமும் பிரார்த்திப்போமாக.



**தகவல் பெட்டி**

சாதாரண பாம்பைக் கண்டாலே பயம் வரும். இரட்டைத்தலைப் பாம்பைக் கண்டால் எப்படியிருக்கும்.

தென் ஆபிரிக்காவில் டர்பன் நகரில் உள்ள பாம்புப் பண்ணையில் இரட்டைத் தலையுடன் பிறந்துள்ளது இந்தப் பாம்பு. இது 'பைரான்' என்னும் பாம்பு இனத்தைச் சேர்ந்தது.

இந்தப் பாம்பை மிக ஜாக்கிரதையாகப் பராமரித்து வருகிறார்கள். தினமும் தவளைக் குஞ்சுகளை உணவாகக் கொடுக்க, இரண்டு தலைகளாலும் உள்ளே வாங்கிக்கொள்கிறதாம். தவளைக் குஞ்சொன்றை உணவாகக் கொடுப்பதையும், உணவைக் கவ்வத் தயாராக பாம்புக் குட்டி தலைகளை நீட்டுவதையுமே படத்தில் காண்கிறோம்.

## பாம்புக்கும் இரண்டு தலை



பிரெஞ்சுச் சக்கரவர்த்தி மாவீரன் நெப்போலியன் நாடு பல வென்றவன். நெப்போலியனின் பொழுதுபோக்கும் போர்தான். நெப்போலியன் பெரிதும் நேசித்தவற்றில் முதன்மையானது அவனது குதிரை.

களத்தில் அவனை சுமந்து சென்று எதிரிகளின் வியூகங்களை பிளந்து பறந்து பறந்து நெப்போலியனின் அன்புக்கு பாத்திரமான குதிரை அது.

வாட்டர்லூ போர் முனையில் நெப்போலியன் தோற்றுப் போனபின்னர் அவனது குதிரை தனித்துநின்று தவித்தது. அதனைக் கப்பல் மூலமாக இங்கிலாந்துக்கு கொண்டு சென்றனர். அந்த அபிமானக் குதிரையின் எலும்புக்கூடுதான் படத்தில் காணப்படுகிறது.

இலண்டனில் உள்ள தேசிய இராணுவ அருங்காட்சியகத்தில் இந்த எலும்புக்கூடு பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டுவருகிறது. ஆண்டுதோறும் அதனைச் சுத்தப்படுத்தி வருகின்றனர். பெண் ஊழியர் ஒருவர் எலும்புக்கூட்டை வெகு அக்கறையாக சுத்தப்படுத்தும்போது 'கிளிக்' செய்யப்பட்ட படம் இது. ஒரு மாவீரனின் மிச்சம் இதுதான்.

## ஒரு மாவீரரின் வாகனம்



## புறாவுக்கு புகலிடம்

முல்லைக்கொடிக்கு தேர் கொடுத்தான் பாரி மன்னன். ஆனால் இவரோ ஒரு புறாவுக்காக தன் முடியை கொடுத்திருக்கிறார்.

பிரான்சில் தைப்வால் என்னுமிடத்தில் நடைபெற்ற 80 வது ஆண்டு போர் நினைவு விழாவில்தான் இப்படி முடியில் புறா சகிதம் தோன்றினார் இந்த குறும்புக்காரர். இவர் 'பாண்ட்' இசைக்குழுவொன்றைச் சேர்ந்தவர். முடியிலிருந்து புறா பறக்காமலிக்க பழக்கி எடுத்தார் பாருங்கள் அதுதான் சாதனை.





படிப்பகம்

www.padippakam.com

## 'கண்ணாளனே'

அருண்குமார் நடிக்கும் புதிய படம் ஒன்றுக்கு 'கண்ணாளனே' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. கதாநாயகி தெரிவு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. படத்தை இயக்கப்போவது பாலசவுந்தர். இவர் இயக்குநர் ஏ.ஜெகநாதனிடம் இயக்குநராக இருந்தவர். இசை; இளையராஜா.

## காதோடு சொல்லுகிறோம்

'ரம்ப' நடிகைக்கு இந்தி நடிகர் ஒருவருடன் காதல். உயரமான அந்த நடிகர்தான் தனக்கு ஏற்ற ஜோடி என்று முடிவு செய்துவிட்டாராம் நடிகை. ஆனால் அந்த நடிகரோ எனக்கு பல நண்பிகள் இருக்கிறார்கள் அவர்கள்மாதிரித்தான் 'ரம்ப' நடிகையும் என்று தனது நண்பர்களிடம் கூறியிருக்கிறாராம். ஆரியக்கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிருக்கிறார் நடிகர்.

'பூவுக்கு அரசன்' படத்தில் 'கா' நடிகருடன் கரிசனையுடன் நடந்துகொண்டதால், அவரது புதிய படம் ஒன்றிலும் வாய்ப்புக் கிடைத்துவிட்டது. 'மிஸ் கல்கத்தா'வாக மூன்று முறை தெரிவான 'ரக்சன' நடிகை சந்தோசத்தில் இருக்கிறார். கட்டான உடலால் கிடைத்த வாய்ப்பு.

நடிகத் தம்பதிகளின் மகளான 'வனித' நடிகை தற்போது மீசைக்கார 'ராஜ' நடிகரோடு ராசியாகிவிட்டாராம். ஏற்கனவே இளம் நடிகர் ஒருவரோடு நகமும் சதையாக இருந்தவர்தான் 'வனித' நடிகை. இப்போது 'ராஜ' நடிகரைச் சுற்றிப் படரும் கொடியாகிவிட்டார். அவர் ஒரு 'மாணிக்கம்' என்று புகழ்கிறாராம் 'வனித' நடிகை.

'வினித' நடிகையும், 'ரா'வில் ஆரம்பித்து 'கி'யில் முடியும் மூன்றெழுத்து நடிகரும் சென்னையில் உள்ள பிரபல கடற்கரை ஒன்றில் காரில் இருந்து ஜோடியாக காற்று வாங்கினார்களாம். தற்செயலாக நிருபர் ஒருவரின் பார்வையில் பட்டுவிட விஷயம் அம்பலமாகிவிட்டது. இந்த பத்திரிகைக்காரர்களுக்கு வேறு வேலையே கிடையாது என்று திட்டித் தீர்த்துக்கொண்டிருக்கிறார் 'ராம்' நடிகர்.


ராஜ்கிரன்
படம்- மாணிக்கம்

## 'ஆனந்தம்' படத்தில் மலைக் கள்ளன்

தமிழ்நாட்டில் திராவிட இயக்க வரலாற்றின் சில பகுதிகளை 'ஆனந்தம்' படத்தின் கதையாக்கியிருக்கிறார் மணிரத்னம்.

சம்பவங்களையும், கதாபாத்திரங்களையும் அப்படியே காட்டினால் சுவையிருக்காது என்பதால் தனது பாணியில் கதையைக் கொண்டுபோகிறார் மணிரத்னம்.

பெரியாரும், அண்ணாவும் இணைந்த ஒரு பாத்திரத்தில் நாசர் நடிக்கிறார். எம்.ஜி.ஆராக மோகன்லால் நடிக்கிறார். கருணாநிதியாக பிரகாஷ்ராஜ் நடிக்கிறார். மு.க.ஸ்டாலினாக கவுதம் நடிக்கிறார்.

எம்.ஜி.ஆரின் முதல் இரு மனைவிகளையும் ஒரே கதாபாத்திரமாக்கி ஐஸ்வர்யாராயை நடிக்க வைத்திருக்கிறார். ஜெயலலிதாவாகவும் ஐஸ்வர்யாராய் நடிக்கிறார். ஐஸ்வர்யா ராய்க்கு இரண்டு வேடம்.

வி.என்.ஜானகியாக கவுதமி நடிக்கிறார். எம்.ஜி.ஆர் நடித்த 'மலைக்கள்ளன்' படப்பிடிப்புக் காட்சியொன்றும் படத்தில் வருகிறது.

'நாடோடி மன்னன்' படத்திற்காக மதுரையில் எம்.ஜி.ஆருக்கு தங்கவாள் பரிசு கொடுத்தவர் அன்றைய மதுரை மேஜர் முத்து. அதனையும் படத்தில் இணைத்துள்ளனர்.

ஒரு கூட்டத்தில் பிரகாஷ்ராஜ் (கருணாநிதி) பேசிக்கொண்டிருக்கிறார். மோகன்லால் (எம்.ஜி.ஆர்) வருகிறார். கூட்டத்தினர் அவர் பக்கம் திரும்பியதால் பிரகாஷ்ராஜ் பேச்சை நிறுத்திவிடுகிறார். இப்படியொரு காட்சியும் படமாக்கப்பட்டது. இக்காட்சிக்காக ஆயிரக்கணக்கான துணை நடிகர்கள் பங்குகொண்டனர்.

வேகமாக வளர்ந்து வருகிறது 'ஆனந்தம்'

## 'மேக்கப்' போட்டது

'இந்தியன்' படத்தில் 'தாத்தா' கமலுக்கு தத்ருபமா...
மைக்கல் ஜோன். ஹொலிவூட் படவுலகின் பிரப...
மைக்கேல் வெஸ்ட்மோர் என்பவரின் சீடர்தான்...

இந்த விபரங்கள் யாவும் கமலே சொல்லி தமிழக...
சினிவிசிட்டிலும் பல தடவைகள் வெளியாகியிரு...

திடீரென்று ஒரு புரளி. நம்நாட்டைச் சே...
நான்தான் கமலுக்கு மேக்கப் போட்டேன் என்...
பத்திரிகைக்கு புலுடா விட்டிருந்தார்.

குறிப்பிட்ட தகவலை வெளியிட்ட நிருபருக்கு பி...
'இந்தியன்' பட செய்திகூட தெரிந்திருக்கவில்லை...
ஆசாமியை படத்தோடு அறிமுகப்படுத்தியிருந்தா...

சக பத்திரிகைச் செய்திகளைப் பற்றி நாம் விமர்சி...
ஆனால், 'முரசு' வெளியிடும் 'சினிவிசிட்' செ...
அறிந்தே தரப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட பெ...
சுட்டிக்காட்டாவிட்டால் 'சினிவிசிட்' செய்தி தவ...
வாசகர்கள் சிலவேளை நினைத்துவிடலாம். ஆ...
சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐ...

'அ...
வாசலி...
ராமர...
மீண்டு...
படம்;
க...
சங்கீத...
வருவ...
குறைந்...
ஐந்து...
நடிப்...
தனை...
வேயி...

# சினிவிசிட்


ராம்கி-...
படம்- எனக்கொரு...


ஊர்மிளா
படம்- அன்று ஒரு நாள்

"மழைக்காத்து வீசுதே
மார்போரம் கூசுதே
ஏதேதோ பேசுதே
இருந்தும் இதமாகுதே.
இவள் தேகம்
நடுங்கும்
கட்டிப்போடு
அடங்கும்
தினம் தோறும்
மார்கழிமாசம்"
-கவிஞர் வைரமுத்து-

## ஐஸ்வர்யாவின் சோகம்

லட்சுமியின் மகளும், நடிகையுமான ஐஸ்வர்யா தன் கணவர் தன்வீரை விவாகரத்துச் செய்ய முடிவு செய்துவிட்டார்.

அம்மாவின் கவனிப்பில் போதை மருந்து பாதிப்பை விரட்ட தீவிர சிகிச்சை நடக்கிறது. தன்வீர் ஐஸ்வர்யாவை பிரபல தொழிலதிபர்களுக்கு சந்தோசம் கொடுக்குமாறு நிர்ப்பந்தித்தாராம். அதனால்தான் போதை மருந்துக்கு ஐஸ்வர்யாவை அடிமையாக்கினாராம்.

'ராசுக்குட்டி', 'மீரா', 'எஜமான்' போன்ற படங்கள் மூலம் கைநிறையச் சம்பாதித்தவர் ஐஸ்வர்யா. இப்போது வாடிப்போய் இருக்கிறார் "அம்மா சொன்னால்தான் மீண்டும் படங்களில் நடிப்பேன்" என்கிறார் ஐஸ்வர்யா.

## ஆமையும் நடிக்கும் படம்

'உல்லாசம்' படத்தில் ஆமை ஒன்றும் நடிக்கிறது. அதற்கு இமயவரம்பன் என்ற பெயர் வைத்துள்ளனர்.

படத்தில் ஒரு கதாநாயகன் அஜித்குமார். இன்னொரு கதாநாயகன் விக்ரம். ஆமை விக்ரமின் தோழனாக நடிக்கிறது. தனது காதல் சோகங்களை விக்ரம் ஆமையிடம் பகிர்ந்து கொள்வார். ஓட்டின் மேல் கோடுகள் உள்ள ஆமையாம். இமயவரம்பன் என்று பெயர் வைத்தாலும் சுருக்கமாக 'இமயா' என்று செல்லமாகக் கூப்பிடுகிறார்கள்.

## ஊர்மிளா 'கட்'

நடிகை ஊர்மிளாவும் ஜாக்கிஷெராப்பும் இப்போது பேசிக்கொள்வதில்லையாம். பிரபல இயக்குநர் ராம் கோபால்வர்மாவின் மனம் கவர்ந்தவர் ஊர்மிளா.

'ரங்கீலா' பட வெற்றிக்காக ஜாக்கிஷெராப்புடன் ஊர்மிளா நெருங்கிப்பழக அனுமதித்தார் ராம்கோபால் வர்மா. நெருக்கம் பட வெற்றிக்கு உதவியது.

அத்தோடு ஜாக்கிஷெராப் உறவை 'கட்' பண்ணச் சொல்லிவிட்டார் ராம்கோபால் வர்மா.

ஆனால் ஜாக்கி ஷெராப் ருசி கண்டபூனை. ஊர்மிளாவை விடுவதாக இல்லை. ஊர்மிளாவுக்கும் ஜாக்கிஷெராப்மீது பிடிப்பு இருந்தது. அதனால் இரகசிய சந்திப்புக்கள் தொடர்ந்தன.

இப்போது ஊர்மிளாவுக்கு புதிய அறிமுகங்கள் கிடைத்துள்ளன. அதனால் ஜாக்கி ஷெராப்பை ஊர்மிளாவே 'கட்' பண்ணி விட்டாராம்.

## வரு...

கமலுடன் ந...
என்று வருந்...
பாசவலை ப...
சுபசங்கல்பம்) ந...
அப்போது பிலிம்...
முடியவில்லையா...

## முக...

கமல்...
படம்- இந்...
சென்றவார மு...
பிடாமல் விடப்...

## திருட்டு

முன்னாள் அழகியும், இந்நாள் நடிகையுமான சுஷ்மிதா சென் சமீபத்தில் ஒரு விருந்து நடத்தினார். விருந்தில் கலந்துகொண்ட அவரது தோழி ஒருவர் சுஷ்மிதாவின் நகைகளை சுருட்டிப்போய்விட்டார். பெறுமதி 30 இலட்சம். பின்னர் பொலிஸார் மீட்டுக் கொடுத்திருக்கிறார்கள்.

## மூன்று கோடி

அமிதாப்பச்சனின் மவுசு இன்னமும் குறையவில்லை. எட்டுப் படங்களில் நடிக்கப்போகிறார். ஒரு படத்தில் நடிக்க மட்டும் சம்பளம் மூன்று கோடி ரூபாய்.

## திடீர்மாற்றம்

ரமேஷ் அரவிந்த், சுபலட்சுமி இருவரும் நடிக்க 'பெரிய இடத்து மாப்பிள்ளை' என்ற படத்தை இயக்க விருந்தார் குருதனபால்.

படப்பிடிப்புக்கு சகல ஏற்பாடுகளும் தயாரான நிலையில் நட்சத்திரங்களை மாற்றப்பட்டுள்ளனர்.

இப்போது ஜெயராம், கவுதமி இருவரும் ஜோடியாக நடிக்கின்றனர்.


சரத்குமா...
படம்- அ...

## உயிர் தோழிகள்

நடிகை வினிதாவும், நடிகை ... உயிர்த்தோழிகள். இருவரும் ஒன்றாகத் ... மதுவகைகளை ஒரு பிடிபிடிப்பார்களா...

அதே உற்சாகத்தோடு காரில் சென்... உள்ள வீதிக்கடைகளில் இட்லியும், கு... வார்களாம்.

போதையேறிவிட்டால் வினிதாவீட்டிலே... வினோதினி. காலம், கலி காலம். -



படிப்பகம்

# "எனக்கு ஒரு துணை வேணும் (ஹீராவை எனக்குப் பிடிச்சிருக்கு)

நடிகர் அஜித்குமார் ஹீரா காதல் விவகாரம் பற்றி சினிவிசிட்டில் பல செய்திகள் வெளிவந்தன.

அஜித்குமாரும், ஹீராவும் தமக்குள் அப்படி ஒரு உறவும் கிடையாது. எல்லாம் வதந்தி என்று மறுத்துக் கொண்டிருந்தாலும், சந்திப்புக்கள் தொடர்ந்தன.

அஜித்குமாருக்கு பல இளம் நடிகைகளோடு தொடர்பு இருந்தாலும், ஹீராவுடனான உறவையும் தொடர்கிறார்.

தமிழக சஞ்சிகையான ஜூனியர் விகடனில் அஜித் முதன் முதலாக தன் கைப்பட எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் உண்மையை ஒளிக்காமல் ஒத்துக்கொண்டிருக்கிறார்.

அஜித் கொடுத்துள்ள வாக்குமூலத்தைக் கேளுங்கள்.

"காதல் கோட்டை படம் பார்த்தீங்களா? இதுவரை சந்திக்காத தேவயாணிக்காக நான் காதல் வளர்க்க, ஹீரா என்னைக் காதலோடு துரத்திக் கொண்டிருப்பார். 'காதல் கோட்டை'படம் எனக்கு வேறு மாதிரியான அனுபவம். படப்பிடிப்பு நேரத்தில் சினிமாவும், நிஜமும் என்னை மாறி மாறித் துரத்தும். உண்மையில் எனக்கு தேவயாணியைவிட ஹீரா பிடிக்கும்.

ஐ லைக் ஹீரா. எனக்கு ஹீராவைப் பிடிச்சிருக்கு. ஐ லைக் ஹெர். இத்தனை காலமும் நான்காத்திருந்தது இப்படி ஒரு பெண்ணுக்காகத்தானா என்பது மாதிரியிருக்கு.

எனக்கு வேண்டியது ஒரு பாட்னர். என்னோட அத்தனை சந்தோசங்களையும், பகிர்ந்துகொள்ள ஒரு பாட்னர்.

அது ஹீராவா இருக்கக்கூடாதா என்று எனக்குள்ளே ஒரு ஆசை. நான்முகம் பார்த்துப் பழகுகிறவன். எல்லோரோடும் கைகோர்த்துக் கொள்ள நினைக்கிறவன். சட்னு கட் பண்ணத் தெரியாமல் பல விஷயங்களைப் பொலிஸ்டா செய்யலாமென்றே விட்டுவிடுபவன்.

ஹீரா அப்படி இல்லை. பிடிச்சா பிடிக்குது. பிடிக்கலையா..... பிடிக்கலைதான். எதையும் முகத்துக்கு நேரா ரியாக்ட் பண்றவங்க. எனக்குப் பிடிச்சிருக்கு.

நானும் அவங்களும் சந்தித்தபோதே, சண்டையிலதான் அறிமுகமானோம். இன்னும் சண்டை போட்டுக்கறது நிக்கலை. எனக்குப் பிடிச்சிருக்கு.

"உனக்கு ஏதாவது ஒண்ணுன்னா வந்து நிக்கிற முதல் ஆளா நானிருக்கணும். எனக்கு ஒரு கஷ்டம்னா நீ வருவேணு காத்திருப்பேன்"-எனக்குப் பிடிச்சிருக்கு.

இப்போதைக்கு அஜித் ஒரு ஹீரோ. இரண்டு ஹிட் வந்திருக்கு. நிறையக் கவனிக்கிறாங்க. ரோட்ல சத்தம் போட்டு வன்.... போர்.... திரீன்னு கத்தறாங்க. போன்ல பேசறாங்க. லெட்டர் எழுதறாங்க. இதெல்லாம் ஃப்ரெஷ்ஷா இன்னொரு ஹீரோ வர்றவரைக்கும்தான்னு எனக்கு நல்லாத் தெரியுது.

இரண்டு வருஷமோ, நாலு வருஷமோ.....அப்புறமா நான் மட்டும் தனியா இருக்கிறப்போ என்னைப் பார்த்துக்க எனக்கு ஒரு துணை வேணும். பேசிக்கிறதுக்கு. பழகறதுக்கு பகிர்ந்துகிறதுக்கு. என்னோட வாழறதுக்கு வேணும்.

'அஜித்-ஹீரான்னு ஒவ்வொரு நாளும் கிசு கிசு எழுதறாங்க. இதுவரைக்கும் ஒருத்தர்கூட என்னை என்ன விஷயம்? னு கேட்டு எழுதினதில்ல.

இப்போ சொல்றேன். எனக்கு ஹீராவைப் பிடிச்சிருக்கு. ஐ லைக் ஹெர். இது நாளைக்கு காதலாகி கல்யாணம் வரைக்கும் போகலாம். இல்லே இப்படியே மெள்ளக் கலைஞ்சு போயிடலாம்.' இரண்டுக்குமே நான் தயாராயிருக்கேன்.

*அதுவரைக்கும்*
*எங்கே என் தேவதையே*
*காணாமல் போகலாம் வா!"*

இதுதான் அஜித்குமாரின் வாக்குமூலம். உங்களுக்கு பிடிச்சிருக்கா?

# இருமொழிகளில் சிவாஜி படம்!

சிவாஜி, மோகன்லால் இணைந்து நடித்த 'யாத்ரா மொழி' மலையாளப்படம் தமிழிலும் வெளியாகிறது.

ஜீவா, வெற்றிவிழா போன்ற படங்களை இயக்கிய பிரதாப்போத்தன் இயக்கியுள்ளார். இசை: இளையராஜா.

நாகேஷ், பிரகாஷ்ராஜ், திலகன், கிருஷ்ணபிரசாத், ரஞ்சிதா, வத்சலா ஆகியோரும் நடிக்கின்றனர்.

தமிழிலும், மலையாளத்திலும் ஒரே நேரத்தில் வெளியாகிறது.



கமல்
படம்:- அவ்வை சண்முகி



ராமராஜன்-சங்கீதா
படம்:-அம்மன் கோவில் வாசலிலே

# கமலின் பெண் வேடம்

'அவ்வை சண்முகி' படத்தில் பெண்ணாக நடிக்கிறார் அல்லவா கமல். காலை 7 மணிக்கே படப்பிடிப்புக்கு சென்றுவிடுகிறார்.

தலையில் பெண்களைப்போல முடிவைப்பதற்கு வசதியாக தனது தலைமுடியை நெருக்கமாக வெட்டி இருக்கிறார் கமல். மீசையையும் எடுத்துவிட்டு மொழுமொழுவென்று காட்சியளிக்கிறார்.

படப்பிடிப்புக்கள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. தனது குழந்தைகளை பராமரிக்க ஆயாவாக செல்லும் கமலஹாசன் அங்கு செய்யும் வேடிக்கைகள் படமாக்கப்பட்டுள்ளன. மீனா-கமல் நடித்த பாடல் காட்சிகளும் படமாக்கப்பட்டுவிட்டன.

# 'ரோஜாமலரே'

முரளி, அருண்பாண்டியன் இருவரும் கதாநாயகர்களாக நடிக்கும் படத்தின் பெயர்: 'ரோஜா மலரே'.

கதாநாயகியாக ரிவா நடிக்கிறார். செந்தில், ராஜன் பி தேவ், மதன்பாப், சவுகார் ஜானகி ஆகியோரும் நடிக்கின்றனர்

கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள் எழுதுவதுடன் படத்தையும் இயக்குகிறார் டி.எம்.ஜெயமுருகன். இவர் இயக்கும் முதல் படம் இதுதான்.

# மினி சினி

* 'உல்லாசம்' படத்தில் கார்த்திக்ராஜா இசையமைப்பில் அஜித்குமாருக்காகப் பாடல் ஒன்றைப் பாடிய கமல், இப்படத்தின் சென்னை நகர விநியோக உரிமையை வாங்கியுள்ளார்.

* 'காதல் கோட்டை' படத்தை இயக்கிய அகத்தியன் அடுத்து கார்த்திக் கதாநாயகனாக நடிக்கும் புதிய படமொன்றை இயக்கவுள்ளார். இதில் கார்த்திக்கிற்கு ஜோடியாக தேவயாணி நடிக்கவுள்ளார்.

* 'சேனாதிபதி', 'பாஞ்சாலங்குறிச்சி' ஆகிய படங்களைத் தயாரித்து வரும் கே. பாலு, அடுத்து சரத்குமார் நடிக்க, சி.சுந்தர் இயக்கும் படமொன்றைத் தயாரிக்கிறார். இப்படத்திற்கு 'ஜானகிராமன்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

* அடிதடி வேடங்களில் நடித்து வரும் விஜயசாந்தி ஒரு மாறுதலுக்காகக் குடும்பப்பாங்கான வேடமொன்றில் 'சாந்தி' என்ற தெலுங்குப் படத்தில் நடித்து வருகிறார். இதே பெயரில் தமிழிலும் இப்படம் வெளியிடப்படவுள்ளது.

* 'தளபதி' படத்திற்குப் பின் மணிரத்னத்தின் 'ஆனந்தம்' படத்தில் நடித்து வரும் நாகேஷ், மலையாளத்திலும், கன்னடத்திலும் பல படங்களில் நடித்து வருகிறார்.

* கராட்டி வீரர் ஷிஹான் ஹுஸைனி-சுவாதி நடிக்கும் 'மை இந்தியா' படத்தின் பெயரை 'எல்லாமே என் ரஜினிதான்' என்று மாற்றினார்கள். இப்போது மீண்டும் 'மை இந்தியா' என்று பழைய பெயரையே வைத்து விட்டார்கள்.

* 'சிறை','வரம்' போன்ற படங்களை இயக்கிய ஆர்.சி.சக்தி நீண்ட இடைவெளிக்குப் பின் புதிய படமொன்றை இயக்கவுள்ளார். இப்படத்தில் பாபுகணேஷ்- 'ஆசை' சுவலட்சுமி இணைந்து நடிக்கின்றனர்.

* கேயார் இயக்கிய 'இரட்டை ரோஜா' படம் இந்தியில் அனில்கபூர்-ஸ்ரீதேவி நடிக்க உருவாகும் அதே நேரத்தில், கேயார் தற்போது இயக்கி வரும் 'எனக்கொரு மகன் பிறப்பான்' படமும் இந்தியில் தயாராகவிருக்கிறது.

* 'ஆணழகன்' படத்தைத் தயாரித்த வேலூர் பாலாஜி, அடுத்து பார்த்திபன் நடிக்கும் படமொன்றைத் தயாரிக்கிறார். 'நட்சத்திர இயக்குநர்' பி.வாசு இயக்கும் இந்தப் படத்திற்கு 'பதவி உயர்வு' என்று பெயரிடப்பட்டுள்ளது.

* 'தேடிவந்த ராசா' படம் மூலம் மறுவாழ்வு பெற்ற ராமராஜன் தற்போது 'நம்ம ஊரு ராசா' என்ற படத்தில் நடித்து வருகிறார். அடுத்து இவர் 'பல்லவன் பாண்டியன்' என்ற படத்தில் நடிக்கவுள்ளார். இதில் ராமராஜனுக்கு இரட்டை வேடம்.





சரவணன்-மோகினி
படம்:- விஸ்வநாத்

# குஷ்பு ராசி

குஷ்புவுடன் நெருக்கம் வைத்துக் கொள்பவர்களுக்கு யோகம் தான்.

பிரபுவோடு குஷ்பு நெருக்கமாக இருந்தார். பிரபுவின் படங்கள் வெற்றிகரமாக ஓடின.

பின்னர் ஜெயராமுடன் நெருங்கினார் குஷ்பு. ஜெயராமுக்கும் வெற்றிப்படங்கள் குவிந்தன.

இப்போது இயக்குநர் சி.சுந்தருடன் குஷ்பு நெருக்கமாக இருக்கிறார். 'உள்ளத்தை அள்ளித்தா' படம் சூப்பர்ஹிட்.

குஷ்புவை 'குஷ்' என்று அழைக்கிறாராம் சுந்தர். அவரை 'மாமா' என்றழைக்கிறார் குஷ்பு.

# அஜித்குமாருக்கு ஜோடி ரம்பா

அஜித்குமாருக்கு ஜோடியாக நடிக்கிறார் ரம்பா. இருவரும் இணையும் முதல் படத்தின் பெயர்: 'ராசி'.

முக்கியமான பாத்திரத்தில் பிரகாஷ்ராஜ் நடிக்கிறார். நாகேஷ், ராஜேஷ், வடிவேலு ஆகியோரும் நடிக்கின்றனர்.

மணிரத்னத்தின் உதவியாளராகப் பல படங்களில் பணியாற்றியவர் முரளி அப்பாஸ். ராசி படத்தின் கதை, வசனம் எழுதி அவரே இயக்குகிறார். இசை, சிற்பி. பாடல்கள், பழனிபாரதி. நடனம், பிரபுதேவாவின் அண்ணன் ராஜூ சுந்தரம். சண்டைப் பயிற்சி சூப்பர் சுப்பராஜன்.

ஆறு பாடல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இம்மாதம் படப்பிடிப்பு ஆரம்பமாகிறது.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# உங்கள் எண் எது?
## குணத்தைக் கண்டறியலாம்!

ஒருவருடைய பிறந்த நாள் எண்ணைக் கொண்டு அவருடைய குணத்தைக் கணிக்க முடியும். இதில் இரண்டு முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. பிறந்த திகதிக்குரிய எண்ணை மட்டும் எடுத்துக்கொள்வதுண்டு. பிறந்ததிகதி, மாதம், வருடம், ஆகிய மூன்றையும் கூட்டி வரும் எண்களை எடுத்துக்கொள்வதும் உண்டு. இதில் இரண்டாவது முறையையே எடுத்துக் கொள்ள வேண்டும். ஒருவர் பிறந்த திகதி 04.10.1950 என்று வைத்துக்கொள்வோம். இதிலுள்ள எண்களின் மொத்தக் கூட்டுத் தொகை 20 ஆகிறது. அதை ஒற்றைப்படை எண்ணாக்கினால்- 2. இவ்வாறு கணக்கிடும் போது எல்லோருடையதுமே 1 முதல் 9 வரை உள்ள எண்களில் ஏதாவது ஒரு எண்ணாகவே இருக்கும். இனி அந்த எண்களுக்குரிய பலனைப் பார்ப்போம்.

### எண்—01



ஆதிக்கத் தன்மை கொண்டவரைக் குறிப்பது இது. வெட்கப்படாமல் எதிலும் தம்மை முந்திக் கொண்டு செல்பவர்கள். சுதந்திர உணர்வும், தன்னம்பிக்கையும் இதற்குத் துணை செய்வதாக இருக்கும். ஒரு முடிவு எடுத்தால், அதில் உறுதியாக இருப்பார்கள். ஆசை வார்த்தைகளால் அவர் மனதை மாற்ற முடியாது. எல்லோரும் தம்மைப்போல் பலம் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று எண்ணுகின்ற இவர், பலம் இல்லாதவர்களைக் கண்டால் கேலி செய்வார்.

அவருடைய விருப்பத்திற்கு மாறாக யாரும் தமது செல்வாக்கை உபயோகிக்க முடியாது. அவர் ஒன்றை இல்லை என்று சொன்னால், உறுதியாகச் சொல்கிறார் என்று அர்த்தம். பின்னர் அதிலிருந்து ஒரு அங்குலம் கூட விலகமாட்டார். தகவல்களை இவர் தேடிப் போக மாட்டார். தானாகத் தம்மைத் தேடி வருவதை விரும்புவார். பிறருடன் நடந்து கொள்ளும் விதத்தில் பாரபட்சம் காட்ட மாட்டார். பெருந்தன்மையுடன் நடந்து கொள்வார். குறுகிய புத்தியை இவரிடம் காணவே முடியாது.

கோபம் கொண்டிருக்கும்போது கண்டதைத் தூக்கி எறியலாம். சற்று நேரத்தில் அடங்கி அமைதியாகிவிடுவார். ஆத்திரக்காரர் என்று சொல்ல முடியாது. பிறர் செய்த குற்றங்களை எளிதில் மறந்து விடமாட்டார். மனதிற்குள் அவர்களிடம் கோபம் இருந்தாலும், விருந்து போன்ற நிகழ்ச்சிகளுக்கு அழைத்தால் போய்க் கலந்து கொள்வார்கள். ஒருவரிடம் அன்பு காட்ட வேண்டியிருந்தால், அதற்காக இவர் செய்வது வேண்டாவெறுப்பான ஒன்று போலவே இருக்கும்.

சொந்த சௌகரியங்களும் சிறிய இன்பங்களும் வேறு எதையும் விட இவர்களுக்கு முக்கியமானவை. இவர் மட்டுமே தனித்துச் சாப்பிடுவார். பணம் செலவாகும் கூடாத காரியங்கள் எதிலும் ஈடுபடமாட்டார்.

### எண்—02



இந்த எண்ணுக்குரியவர்கள் மிகுந்த சகிப்புத் தன்மை கொண்டவர்கள். அன்பும், பொறுமையும் இனிய சுபாவமும் இவர்களிடம் காணப்படும். இவர்களைக் கோழைகள் என்று சிலர் கருதுவதுண்டு. வாய்ப்பு ஏற்படும் பொழுது அவ்வாறு அல்ல என்று இவர்களால் நிரூபிக்க முடியும். இளகிய மனமும் தாராள சிந்தையும் கொண்டவர். இவருடைய தாராளம் ஓரளவு கூடுதலாக இருக்கும் என்றுகூடச் சொல்லலாம். உறுதியாக இருக்க வேண்டும் என்று நினைத்தாலும் இவர்களால் முடியாது. இந்த இயல்பின் காரணமாக நண்பர்கள் நிறைய இருப்பார்களே தவிர அவரை இவர்கள் தாழ்ந்தவராகவே கருதுவார்கள். வியாபாரத் துறையிலும் கூட இவர் கூறுவதற்கு மதிப்பு இராது. சம்பாதிப்பதை எளிதில் செலவழித்து விடுவார்கள். அதன் காரணமாக இவர்களால் அதிகம் சேமிக்க முடியாது. தலைமை வகிக்கக் கூடிய தகுதி இவர்களிடம் கிடையாது.

தம்முடைய வேலையைத் தாம் செய்யும்படி பேசாமல் விட்டுவிட்டால், அதில் பெரிதும் மகிழ்ச்சி அடைவார்கள். இன்னொருவருக்கு அனுதாப வார்த்தைகளோ அல்லது ஆறுதலோ தேவைப்படும்போது இவரை விடச் சிறந்தவர் இருக்கவே மாட்டார்கள்.



### எண்—03

அமைதியாகவும், எளிதாகவும் வாழ்க்கையை நடத்தும் இயல்பு கொண்டவர்கள் இந்த எண்ணுக்கு உரியவர்கள். இவர்கள் எப்போதும் உற்சாகமாகவும், மகிழ்ச்சியாகவும் இருப்பார்கள். கவலைப்படுவது அவசியமே இல்லாத ஒன்று என்று கருதுபவர்.

நிமிர்ந்த தலையுடன் புன்னகை தவழ நம்பிக்கையுடன் பவனி வருவார்கள். கவலையைக் கூட்டி அழுது கொண்டிருப்பவர்களுக்கு இவரைப் பார்த்தால் பொறுப்பு இல்லாதவர்கள் போல் தோன்றும். "சோம்பேறி, எதுவும் வேலை செய்ய இயலாதவர், எப்படியோ காலத்தைக் கழிக்கிறார்" என்றெல்லாம் இவரைப் பற்றிக் குறை கூறுவார்கள். அதைப்பற்றி எல்லாம் கவலைப்படாமல், நல்லது கெட்டது ஆகிய இரண்டையும் சமமாகப் பாவித்தவாறு இவர்கள் காலத்தைக் கழிப்பார்கள்.

நாம் குறுக்கிட்டுக் குளறுபடி செய்யாமல் இருந்தால், காலப்போக்கில் எல்லாமே நல்ல விதமாக முடியும் என்ற நம்பிக்கை கொண்டவர்கள். அமைதியுடன் காலத்தை கழிப்பார்கள்.

ஒரு பிரச்சனையின் இரு பக்கத்தையுமே நன்றாகக் காணக் கூடியவர்களாக இருப்பதால் இருவரிடையே சமரசம் செய்து வைப்பதற்கு ஏற்ற நபர்களாக இவர்கள் இருப்பார்கள். இருவருடைய வாதத்தையும் பொறுமையாகக் கேட்டு, நியாயமான தீர்ப்பைக் கூறி, விரும்பத்தகாத பல நிலைமைகளை இவர் சமாளித்து விடுவார். இவரது மறையாத புன்னகையும், கவலையற்ற தன்மையும் பிறரிடம் எளிதில் தோன்றச் செய்யக்கூடியவர்.

**எண்-4,5,6,7,8,9 ஆகிய எண்களின் பொதுப்பலன்கள் அடுத்தவாரம் தரப்படும்.**

# முகம் எப்படி பொட்டும் அப்படி!



அழகுக் கலையை இரசிப்பவர்கள் பெண்கள். மென்மையான உள்ளம் படைத்தவர்கள். தங்களை அழகுபடுத்திக் கொள்வதில் சிறிது நேரம் செலவிடுவதில் மகிழ்ச்சியே கொள்வர்.

திலகம் இட்டுக் கொள்வது முகத்திற்குப் பொலிவையும் மங்கலமான தோற்றத்தையும் கொடுக்க வல்லது.

பெண்களின் முகத்தை வர்ணித்துப் பாடாத புலவர்களும் இல்லை. கவிஞர்களும் இல்லை. எல்லாப் பெண்களும் ஒன்றுபோல திலகம் இட்டுக் கொள்ளலாமா?

இட்டுக் கொள்ளலாம். ஆனால் எடுப்பாக இருக்குமா? கேள்விதான்! எல்லாருடைய முகங்களும் ஒன்றுபோல இருப்பதில்லை. ஆகவே அவரவர் முகத்திற்கேற்ப திலகம் இட்டுக்கொள்வது சிறப்பாக இருக்கும்.

வட்டமான முகமும் லேசான உப்பிய கன்னங்களும் முகவாயும் பிறை போன்ற சிறிய நெற்றியும் கொண்டவர்கள் சிறிய வட்டப்பொட்டை இரு புருவங்களுக்கு மத்தியில் வைத்துக்கொண்டால் எடுப்பாகத் தெரியும்.

சதுர வடிவான நாடியமைப்பும், அகன்ற நெற்றியும், அகலமான பெரிய கண்களும் உடையவர்களுக்குப் பெரிய வட்டப் பொட்டு நன்றாக இருக்கும். நீளமான முகமுடையவர்கள் வகிடு எடுத்துக் கூந்தலை இருப்க்கமும் தளர்வாக விட்டால் முகம் கவர்ச்சிகரமாக இருக்கும். நடுவில் பெரிய வட்டப்பொட்டு வைத்தால் எடுப்பாக இருக்கும்.

கோழி முட்டை போன்ற முக அமைப்புடையவர்கள் வகிடு இல்லாமல் தலையை வாரிக் கொண்டு நடுத்தர அளவு வட்டப் பொட்டு வைத்துக் கொள்வது சிறப்புத் தரும்.

தற்சமயம் ஸ்டிக்கர் பொட்டுகள் பல வண்ணங்களில்- பல வடிவங்களில் கிடைப்பதால் நேரம் மிச்சமாகிறது.

# கறிவேப்பிலையா?
## பேஷ், பேஷ்!

"காரியம் முடிஞ்சதும் என்னைக் கறிவேப்பிலையைப் போல் தூக்கி எறிஞ்சிட்டாயில்ல?" என்று சிலர் கோபத்தில் சொல்வார்கள். ஆனால் உண்மையில் கறிவேப்பிலை அப்படி ஒன்றும் தூக்கி எறிந்து விடும் சாதாரணமான பொருளல்ல. இதன் மருத்துவ குணநலன்களைத் தெரிந்து கொண்டால் இதைச் சிறிதும் வீணாக்க மனமே வராது.



* தினமும் தவறாமல் உணவுடன் கறிவேப்பிலையைப் பயன்படுத்தி வந்தால் பழுப்பு நிற முடி மறைந்து கருமையாக வளரும்.
* காலையில் எழுந்ததும் நான்கைந்து கறிவேப்பிலை இலைகளை வெறும் வயிற்றிலேயே மென்று விழுங்கி அத்துடன் சிறிது குடிநீர் அருந்தி வந்தால் இளம் வயதில் நரை விழாமல் தடுக்கலாம்.
* கறிவேப்பிலைச் சாற்றுடன் சம அளவு எலுமிச்சம்பழச்சாறு கலந்து விஷப்பூச்சிகள் கடித்த இடத்தில் பூசினால் உடனே வலி குறைந்துவிடும்.
* சமிபாடு சம்பந்தமான கோளாறுகள் மட்டுமல்லாமல், கடுமையான வயிற்று வலி, வாந்தி மற்றும் தூங்கி எழுந்ததும் ஏற்படும் களைப்பு, வயிற்றுப் புரட்டல், தலைச்சுற்றல் போன்றவற்றிற்கு இரண்டு தேக்கரண்டி கறிவேப்பிலைச் சாற்றுடன் ஒரு தேக்கரண்டி எலுமிச்சம் பழச்சாற்றைக் கலந்து காலையில் அருந்தி வந்தால் நிவாரணம் கிடைக்கும்.
* சிறு தீ விபத்துக்களால் ஏற்பட்ட கொப்புளங்கள், சூட்டினால் ஏற்படும் பருக்கள் போன்றவற்றைப் போக்க கறிவேப்பிலைகளை அரைத்து அதை இலேசாகச் சூடாக்கி அக்கலவையைக் கொப்புளங்கள் மற்றும் பருக்கள் மீது பூசி சுத்தமான துணியால் சுற்றிக் கட்ட வேண்டும். இரண்டு, மூன்று நாட்களுக்குள் நல்ல பலன் கிட்டும்.
* தேங்காய் எண்ணெயுடன் பத்துப் பதினைந்து கறிவேப்பிலை இலைகளைப் போட்டுச் இளஞ்சூட்டுடன் கொதிக்க வைத்து, ஆற வைத்துப் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த எண்ணெயைத் தினமும் தலைக்குப் பயன்படுத்தி வந்தால் தலைமுடி மிருதுவாகவும், கருகருவென்றும் வளரும்.

இவ்வளவு அற்புத குணங்களைக் கொண்ட கருவேப்பிலையை யாராவது இகழ்ந்து பேசினால் அவர்களுக்கு 'விஷய ஞானம்' இல்லை என்றுதான் அர்த்தம்.

# திரைப்படங்களும் பெண்களும்

கல்லூரியில் படிக்கும் பெண் என்பது தமிழ்ப் படங்கள்வரை ஒரு விபரீதமான சிருஷ்டி.

வீட்டில் தனியாக ஓரிடம் இருக்காது. ஓயாது அலறும் ரேடியோ, அல்லது அண்டை வீட்டார், போதாமை, இணக்கமின்மை போன்ற காரணங்களால் தாய்-தந்தையர் வீட்டில் ஏற்படுத்தும் இறுக்கம், வீட்டுவேலை, மின்தடை, இவ்வளவு சிரமங்களுக்கு இடையில் நம் பெண்கள் படித்துப் பட்டம் பெறுகிறார்கள். ஒவ்வொரு தேர்விலும் அவர்கள்தான் பெரும்பான்மையாக வெற்றி பெறுகிறார்கள்.

இந்த யதார்த்தத்துக்கும், தமிழ்ப்பட கல்லூரி மாணவி பாத்திரத்துக்கும் எவ்வளவு பெரிய இடைவெளி!

இன்னொரு விபரீதமான போக்கு, ஒருவன் ஒரு பெண்ணைத் திட்டமிட்டுப் பாலியல் வன்முறைக்கு உட்படுத்திவிட்டால் உடனே அந்தப் பெண், அவனே என்றும் என் கணவன் என்று துரத்திப் போவது.

புதிய பாதை (1989) படத்தில் வரும் கதாநாயகன், அவன் செய்கைக்காக இன்றைய உலகில் பல நாடுகளில் மரண தண்டனை பெறுவான். சிறைவாசம் நிச்சயம்.

ஆனால் 'புதிய பாதை' படத்தில் அவனால் சிதைக்கப்பட்ட பெண் அவனைத் திரும்ப அடையத் தவமே புரிகிறாள்.

இன்னொரு போக்கு, எடுத்ததற்கெல்லாம் கதாநாயகியை பளார் என்று அடிப்பது. இது யார் அறைவது என்று பேதமில்லை. காதலன் அறைவான். தந்தை, தனயன், தாய், தாத்தா, பாட்டி, வளர்ப்புத் தாய், சித்தி என யாருக்கும், எதற்கும் அப்பெண்ணை அடிக்க தமிழ் படத்தில் உரிமையுண்டு.

பெண்களை அமானுஷ்ய உயரத்துக்குத் தூக்கி வந்தனை புரியவேண்டும். அல்லது பேதைகள், அபலைகள் என நிந்தனை புரியவேண்டும். சிந்திக்கத் தெரிந்த மனிதராக மட்டும் பிரதிபலிக்கக்கூடாது. இது திரைப்படத் தயாரிப்பாளரின் பூடகமான நியதியாக இருக்கிறது.

### கதாநாயகியை யார் வேண்டுமானாலும் பளார் என்று அறையலாம்

ஆனால், இதைமீறிய விதிவிலக்குகள் நேராமல் போவதில்லை. தர்மயுத்தம் (1979) கதாநாயகி காதல் வயப்படும்வரை முறையாகச் சிந்திக்கப் பழகிய நவீன பெண்ணாக அறிமுகப்படுத்தப்படுகிறாள். பொதுவாக இயக்குநர் ஆர்.சி.சக்தி பாத்திரவார்ப்பு விஷயத்தில் கவனம் செலுத்துபவர். இரண்டாண்டுகளுக்கு முன்பு அவர் இயக்கிய பத்தினிப் பெண் படத்தில் பெண் பாத்திரத்துக்கு ஒரு தெளிவான வார்ப்பு இருந்தது.

தமிழ் திரைப்பட இயக்குநர்களில் பெண் பாத்திரங்களை தனித்துவம் மிக்கதாக உருவாக்க வேண்டும் என்று முயற்சி செய்வதில் கே.பாலச்சந்தர் முதலிடம் வகிப்பவர் என்று கூறவேண்டும். பல குறைபாடுகள் உள்ள முயற்சிதான். ஆனால் தண்ணீர் தண்ணீர் (1991), அக்னி சாட்சி(1982), ஒரு வீடு இருவாசல் (1990) குறிப்பிடத்தக்க பாத்திரவார்ப்பு சாதிக்க முடிந்தது. பாலு மகேந்திராவின் 'வீடு' (1988) தமிழ்ப்பட பெண் பாத்திரங்களில் ஒரு புதுப் பரிமாணம் தந்தது.

நடைமுறை வாழ்க்கையில் பெண்கள் இந்த ஐம்பது ஆண்டுகளில் எவ்வளவோ மாறியிருக்கிறார்கள். சுய பிரக்ஞை, தம் உரிமைகள், பொறுப்புக்கள் பற்றிய அறிவுபூர்வமான உணர்வு, அநேக துறைகளில் ஆற்றலோடும், தன்னம்பிக்கையோடும் ஈடுபடுதல்- இதெல்லாம் உள்ள கம்பீரமிக்க பெண்ணைத்தான் இன்றைய கலை வெளிப்பாட்டுத் துறையான சினிமாவில் சாத்தியமாக்க வேண்டும்.



இன்றைய திரைப்படங்களைப் பார்ப்போரில் பாதிப்பேர் பெண்களே. இங்கு கூறியிருப்பவை அவர்கள் அறியாததல்ல. அவர்கள் இன்னமும் தமிழ் திரைப்படங்கள் பலவற்றை ஏராளமான கட்டணம் செலுத்தி விரும்பிப்பார்ப்பதற்கு இந்த ஆண், பெண் பிரதிபலிப்பை மீறிய காரணம் இருக்க வேண்டும். ஏனெனில் நடைமுறை வாழ்க்கையில் இவர்கள் காரிய காரணமாகவே செயல்படுகிறவர்கள். ஆதலால் பொழுதுபோக்கு என்பதைத் தவிர வேறு எந்த விதத்திலும் இத் திரைப்படங்களை அவர்கள் அர்த்தப்படுத்திக் கொள்வதில்லை என்றுதான் நாம் எடுத்துக் கொள்ளவேண்டும்.

—'இந்தியாருடே' பெண்கள் மலரில் பிரபல எழுத்தாளர் அசோகமித்திரன்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் | மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** AE

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

கையொப்பம்:..............................

**உண்மை—நேர்மை—வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி:31-08-1996**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## அவிசாவளை வாசகிக்கு அதிஷ்டம்

**இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.**

**எம். சாரதாதேவி.**
பென்றித் தோட்டம், கீ.பிரிவு, அவிசாவளை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது **சுகந்தினி**

## சேமியா பக்கோடா

தேவையான பொருட்கள்:-

- சேமியா- 100 கிராம்
- வெங்காயம்- 75 கிராம்
- அரிசி மாவு- 50 கிராம்
- கோதுமை மாவு- 1 மேசைக்கரண்டி
- உருளைக்கிழங்கு- 100 கிராம்
- பேக்கிங் பவுடர்- 1/4 தேக்கரண்டி
- எண்ணெய்- தேவையான அளவு
- பச்சை மிளகாய்- 5
- கறிவேப்பிலை- சிறிது
- உப்பு- தேவையான அளவு.

செய்முறை:

சேமியாவை வேக வைத்து, நீரை வடித்து எடுத்துக் கொள்ளவும். உருளைக்கிழங்கை வேகவைத்து மசித்துக் கொள்ளவும். வெங்காயம், பச்சை மிளகாய், கறிவேப்பிலையை நறுக்கி, சேமியாவை உருளைக்கிழங்குடன் கலந்து பின், அரிசிமாவு, கோதுமை மாவு, பேக்கிங் பவுடர், உப்பு கலந்து எல்லாவற்றையும் சேர்க்கவும். பின் சிறு சிறு உருண்டைகளாக உருட்டி, எண்ணெய் கொதித்த பின் பொன்னிறமாகப் பொரித்து எடுக்கவும். இதை சோஸ் அல்லது சட்னியுடன் சூடாகப் பரிமாறவும்.



படிப்பகம்

www.padippakam.com

## சாக்கா(ட்)டுத் தேசம்

நிம்மதியுடன் சேர்ந்து
தூக்கமும் தொலைந்துபோன
அந்த இரவில்
கொசு விரட்டிக் கொண்டிருந்தேன்!
▫▫
நெஞ்சு முழுக்க பயத்தை அப்பும்
பொல்லாத அமைதி-
எங்கும்...!
▫▫
அது-
புயலுக்கு முந்திய அமைதி!
▫▫
தெருவில்....
சேவலின் குரலில்
நாய் ஊளையிடும் சப்தம்;
உம்மோய்...!
அது 'பேய்'தான்!
▫▫
நானும் கேள்விப்பட்டிருக்கிறேன்-
'அவனின்'ஆவி
அடிக்கடி வந்து-போவதாக;
▫▫
அது- அந்த ஆவியின்
அலறலாய்த்தான் இருக்கும்;
ரத்தத்தை உறைய வைக்கும்
பொல்லாத குரல்...!
▫▫
இப்படி ஒரு இரவில்தான்
அவனும்-
'ரவை' துளைத்து
துடிதுடித்துச் செத்துப் போனான்!
▫▫
ஆயிரம் கனாக்களுடன்
உறங்கியபோதுதான்-
அவன் வாழ்க்கைக்கும்
'கதவடைப்பு' நிகழ்ந்திருக்கும்!
▫▫
உடம்பைத்தான்
ரவை துளைக்கும் என்பதால்
உயிர் மட்டும்-
உலாவ வந்திருக்குதோ?
▫▫
தொடர்ந்தும் அலறியது பேய்!
பார்த்துவிட நினைத்து
யன்னலைத் திறந்தேன்;
எதுவும் இல்லை-
இருளைத் தவிர!
அப்படியானால்-
அந்தச் சப்தம்....?
▫▫
உறங்க நினைத்து
பாயில் அமர்ந்தேன்;
யன்னல் அறைந்து மூடப்பட்டது.
▫▫
இது- காற்றுத்தான்;
இல்லை பேய்....
அடிமனம் சொன்னது.
▫▫
இதயம் நின்றுபோய்
சப்திப்பதற்கிடையில்-
தூரத்தில் எங்கோ
துப்பாக்கி வேட்டுச் சப்தம்!
அதைத் தொடர்ந்ததாய்
இறுதி மூச்சுக்களின்
ஈனக் குரல்கள்...!
▫▫
நிச்சயமாய்....
ஊரில் 'பேய்'
கூடிவிடத்தான் போகிறது....!
▫▫
அடுத்த நாள்....
அயலவர் பேசிக்கொண்டனர்-
'சாமத்தில் வெளிய வராதீங்கோ;
கவுசிப் பேய் அடிச்சுப்போடும்....'
நானும் பயந்து போனேன்!
▫▫
உம்மாவிடம் கேட்டேன்-
"இந்தப் பேய்களும்
எங்களைத்தான் கொல்லுமா?"

**சிந்தனைப் பித்தன்.**

---

வாழ்க்கை நடக்கவில்லை-
நொண்டுகிறது!
வாழ்க்கை ஓடவில்லை-
தவழ்கிறது!
**
விலைவாசி உயரும் போது
நகரவாசி நாம்
காணாமல் போகிறோம்!
வேளை வந்துவிட்டது
இனி எங்கள் குழந்தைகள்
பாலை மறந்துவிடும்!
**
யாரங்கே?
மருத்துவக் கலாநிதிகளா?
உயிர்ச்சத்துக்கள்
எனும் வார்த்தைகளை அழித்துவிடுங்கள்!
உண்ணா விரதங்கள்
இனி
தேசியமயமாகும்!
**
வாழ்க்கை நடக்கவில்லை-
நொண்டுகிறது!
வாழ்க்கை ஓடவில்லை-
தவழ்கிறது!

**அக்குறனை- எம்.என்.எம். நவ்ரஜி.**

---

## எங்கேயோ இருப்பவளுக்கு!

வந்து போகும் ஒவ்வொரு
வருடத்திலும்
அழுத நாட்களும்
விழித்த இரவுகளுமே
மிச்சமாகும்!
**
தேவியே!
தேடிக்கொண்டேதான்
இருக்கிறேன்
உன்னை-நீ
தொலைந்த இடத்தை
தவிர்த்து,
மற்றெல்லா இடங்களிலும்
தேடிக்கொண்டேதான்
இருக்கிறேன்-உன்னை!
**
காலத்தின் ஓட்டத்தில்
காணாமல் போனவளே:
உன்னைச்
சந்திக்கும் அந்த
சந்தோஷ நிமிடத்தில்
சட்டென்று
நின்றாலும் பரவாயில்லை
என் சுவாசம்!
**
என்னவளே!
என்மனது
கேட்டுக்கொண்டே இருக்கும்
'நீ எங்கிருக்கிறாய்?'
என்று!
**
சூரியனின் நெற்றியிலும்
என்
சுந்தர நாமத்தை
எழுதி வைத்தவளே!
இந்தக் கல்-உன்
கைபட்டுத்தானே
சிற்பமானது!
**
ஏணியாய் இருந்தென்னை
எங்கெங்கோ
ஏற்றிவிட்டு,
எங்கே நீ
இறங்கிப் போனாய்?
**
என்னவளே!
என் மனது
கேட்டுக்கொண்டே இருக்கும்
'நீ எங்கிருக்கிறாய்?'
என்று!
**
எனக்குள்
ஒவ்வொரு நரம்புகளும்
அடித்துச் சொல்லும்
இந்தப் பூமியில்
எங்கோ
ஒரு மூலையில் நீ
வாழ்ந்து கொண்டிருப்பதாய்!

**எம். ஸர்ஜூனா- கொச்சிக்கடை.**

---

## தேன் கிண்ணம்

### காத்துக் கிடப்பது நியதி

பெண்ணாக நீ பிறக்கும் போது
மனம் புண்ணாலே ஆக்கப்படும்!
காதலிக்கும் போது கவலைகள்
உன்னைக் கட்டிக் கொள்ளும்!
▫*▫
வேதனைகள் வேணுகானம் பாடும்;
விழிகள் சந்தோசத்தை விலக்கிப் போடும்;
எந்நாளும் வாழ்வில் எதிர் நீச்சலில்
மனம் இளைத்துப் போகும்!
▫*▫
வாழ்க்கை போராட்டம்;
கல்யாணம் கால் கட்டு,
கை கோர்த்து நடந்தாலும் காலகத்தில்
நீ கை விடப்படலாம்....!
மோதிரம் தொலைக்காவிடினும்
மோகம் தீர மறக்கப்படலாம்!
▫*▫
சிதையாய் இருந்தாலும்,
வார்த்தை நெருப்பில் இறக்கப்படலாம்!
அழகாய் பிறந்தாலும் ஆபத்து அழிக்கப்படலாம்!
மலராய் பிறந்தாலும் ஆபத்து பறிக்கப்படலாம்!
▫*▫
தவறு செய்யாமலே தண்டிக்கப்படலாம்!
கல்லாய் சபிக்கப்படலாம்!
ஏக்கம் இது என்றும் தீராத ஏக்கம்!
▫*▫
பூமித்தாய் ஏங்குவதும் சாந்திகாண
பெண்ணே நீயும் ஏங்குவது மனச் சாந்திகாண
வரலாம் சாந்தி, சமாதானம்;
பெறலாம் நீயும் என்றோ ஓர் நாள்!
▫*▫

**ஜெயந்தி ஜெய்சங்கர், கொழும்பு-13.**

---

## உன் விழிகளால்... நான் அழுகிறேன்...!

இலக்கணம் மீறிய-
கவிதையாய்...
நம்-
காதல்!
**
ஊருக்கென்ன-
விமர்சனம் செய்யும்;
ஒதுங்கிப் போகாதே-
கண்மணி!
**
இருதயமேயில்லை-
என்றான பிறகு,
இரக்கம் என்பது
எப்படிக் கிடைக்கும்-
அவர்களிடம்...?
**
நம்புகிறாயா...
நாம் சேர்வோமென்று?
மழை பெய்யும் என்கிற
ஒரு-
வானிலை
அறிக்கை போலாவது?
**
அழாதே!
பிறகு
நீ-என்னை
தேற்ற வேண்டியிருக்கும்.
**
காதல்-வேதம்
இரண்டும்
சமூக நிந்தனைக்குட்படாமல்
நிறைவு பெற்றதாய்-
சரித்திரமேயில்லை;
அறிவாயா...?
**
அவர்கள்-
எதிர்த்துக் கொண்டே
இருக்கட்டும்!
**
எதிர்ப்பில்லாத காதல்-
ஜொலிப்பதில்லை
கண்மணி!
**

**அட்டாளைச்சேனை- யூயெல் மப்றூக்.**

---


## 'தாத்தா' கமல் யார் சாயல்?

### அந்தநாள் ஞாபகம்

'இந்தியன்' படத்தில் கமலின் 'தாத்தா' வேஷம் யாருடைய பாதிப்பு? தனது தந்தையாரான சீனிவாசனின் பாதிப்புத்தான் அது என்கிறார் கமல். தலைமுடி மட்டும் எழுத்தாளர் சுஜாதாவின் பாதிப்பு.



சீனிவாசன் (கமலின் தந்தை)





'இந்தியன்' பட விளம்பரத்தில் வெளியானது இது.

கமலுக்கு மேக்-அப் போட்டுக் கொண்டிருப்பவர் ஹொலிவூட் பட உலக ஒப்பனைக் கலைஞர் மைக்கேல் ஜோன். கமலுக்கு நாமே மேக்கப் போட்டேன் என்று தம்நாட்டில் ஒருவர் கூறிவருகிறார். ஒருவேளை அவர் உதவியாளர்களில் ஒருவராக இருந்திருக்கலாம்.




---

## இந்த வாரம் உங்கள் பலன்

( 25.08.96 தொடர்ச்சி 31.08.96 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| சிம்மம் | - சூரியன், புதன். |
| கன்னி | - இராகு. |
| தனு | - வியாழன். |
| மீனம் | - சனி, கேது. |
| மிதுனம் | - வெள்ளி, செவ்வாய். |

★ சந்திரன்- தனு, மகரம், கும்பம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் 12 | மணி |
| திங்கள்- மன மகிழ்ச்சி, உயர்ந்த நிலை. | பி.ப. 2 | மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, கௌரவம். | காலை 8 | மணி |
| புதன்- மனக் கலக்கம், பண விரயம். | பி.ப. 1 | மணி |
| வியாழன்- வீண் தொல்லை, இனசன நன்மை. | காலை 7 | மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், தொழில் விருத்தி. | பி.ப. 2 | மணி |
| சனி- மன மகிழ்ச்சி, அந்நியர் உதவி. | பி.ப. 1 | மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், முயற்சி பலிதம். | பி.ப. 2 | மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, மனக்குறை நீங்கும். | காலை 7 | மணி |
| செவ்வாய்- வீண்துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் 12 | மணி |
| புதன்- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 6 | மணி |
| வியாழன்- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, உயர்ச்சி தடை. | காலை 6 | மணி |
| சனி- பெரியோர் பகை, பணவிரயம் | பி.ப. 2 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 | மணி |
| திங்கள்- பணக் கஷ்டம், மனப்பயம். | காலை 6 | மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. 2 | மணி |
| புதன்- தொழில் மந்தம், பணக்கஷ்டம். | காலை 7 | மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | பகல் 12 | மணி |
| வெள்ளி- உறவினர் உதவி, கௌரவம். | காலை 6 | மணி |
| சனி- மன மகிழ்ச்சி, பொருள் வரவு. | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, இனசன நன்மை. | பி.ப. 1 | மணி |
| திங்கள்- மன மகிழ்ச்சி, உயர்ந்த நிலை. | காலை 6 | மணி |
| செவ்வாய்- பண விரயம், காரிய சித்தி | பகல் 12 | மணி |
| புதன்- பொருள் வரவு, மனக்கலக்கம். | பி.ப. 3 | மணி |
| வியாழன்- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | காலை 7 | மணி |
| சனி- செய்தொழில் விருத்தி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-3

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 | மணி |
| திங்கள்- பணக் கஷ்டம், அந்நியர் உதவி. | காலை 7 | மணி |
| செவ்வாய்- மறைமுக எதிர்ப்பு, வீண் முயற்சி. | பகல் 12 | மணி |
| புதன்- உறவினர் பகை, கடன் தொல்லை. | பி.ப. 1 | மணி |
| வியாழன்- முயற்சி பலிதம், தொழில் சிறப்பு. | பகல் 12 | மணி |
| வெள்ளி- மன மகிழ்ச்சி, காரியசித்தி. | காலை 6 | மணி |
| சனி- தொழில் மந்தம், செலவு மிகுதி. | பி.ப. 1 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, உயர்ந்த நிலை. | பி.ப. 2 | மணி |
| திங்கள்- மனக் கலக்கம், அந்நியர் சகவாசம். | காலை 7 | மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், கௌரவம். | பி.ப. 1 | மணி |
| புதன்- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 | மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, தொழில் சிறப்பு. | காலை 6 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, இனசன நன்மை. | பி.ப. 2 | மணி |
| சனி- மனக்கிலேசம், செலவு மிகுதி. | காலை 7 | மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரிய சித்தி. | பி.ப. 2 | மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், கௌரவம். | காலை 6 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 | மணி |
| புதன் - மனக்குறை நீங்கும், தொழில் விருத்தி. | காலை 6 | மணி |
| வியாழன்- பிரயாண கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- பெரியோர் பகை, மனக்கலக்கம். | காலை 7 | மணி |
| சனி- முயற்சி பலிதம், மனக்கிலேசம். | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, முயற்சி பலிதம். | பி.ப. 2 | மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, கௌரவம். | காலை 6 | மணி |
| செவ்வாய்- தொழில் மந்தம், பணச் செலவு. | காலை 9 | மணி |
| புதன்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 3 | மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | காலை 8 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 | மணி |
| சனி- முயற்சி பலிதம், உறவினர் உதவி. | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, காரியானுகூலம். | பகல் 12 | மணி |
| திங்கள்- வீண் முயற்சி, பணச் செலவு. | காலை 6 | மணி |
| செவ்வாய்- தொழில் கஷ்டம், அந்நியர் உதவி. | பகல் 12 | மணி |
| புதன்- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | காலை 7 | மணி |
| வியாழன்- வீண் கலக்கம், பண விரயம். | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- வெளியிடப் பிரயாணம், செலவு மிகுதி. | காலை 7 | மணி |
| சனி- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 7 | மணி |
| திங்கள்- பயனுள்ள செயல், உயர்ந்த நிலை. | பி.ப. 1 | மணி |
| செவ்வாய்- தொழில் கஷ்டம், பணவிரயம். | காலை 6 | மணி |
| புதன்- வீண் முயற்சி, வெளியிடப் பயணம். | பி.ப. 2 | மணி |
| வியாழன்- பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 7 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பகல் 12 | மணி |
| சனி- பிரயாண மிகுதி, கௌரவம். | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பி.ப. 2 | மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், இனசன நன்மை. | பி.ப. 1 | மணி |
| செவ்வாய்- காரியசித்தி, பொருள் வரவு. | பகல் 12 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, மனக்கிலேசம். | பி.ப. 3 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | காலை 7 | மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, பணவரவு. | பி.ப. 1 | மணி |
| சனி- அந்நியர் உதவி, மனக்குறை நீங்கும். | காலை 6 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)


| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், பண விரயம். | காலை 7 | மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, மனக்குறை நீங்கும். | பகல் 12 | மணி |
| செவ்வாய்- தொழில் விருத்தி, கடன் சுமை. | காலை 6 | மணி |
| புதன்- பெரியோர் உதவி, தொழில் பேறு. | பி.ப. 2 | மணி |
| வியாழன்- உறவினரால் கஷ்டம், மனக் கலக்கம். | பி.ப. 3 | மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பகல் 12 | மணி |
| சனி- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. 1 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6


படிப்பகம்

www.padippakam.com





## தேயிலை

எங்கள் இனிய தீவினிலே
எழிலாய் விளங்கும் மலைகளிலே
எங்கு பார்க்கினும் தேயிலையே!
எழிலாம் பச்சைத் தேயிலையே!

உழைக்கும் எமது பெற்றோரின்
உயிராய் விளங்கும் தேயிலையே- எம்
தேசம் காக்க வருமானம்
தேடித் தருமாம் தேயிலையே!

உலகம் எங்கும் உவப்புடனே
உறிஞ்சிச் சுவைக்கும் தேயிலையே!
உள்ளம் கவரும் வாசத்தால்
ஊறும் நாவும் உண்மையே!

இலங்கை என்றால் தேயிலையே
இன்றும் நினைவில் நிற்கிறதே!
இன்றும் அன்றும் என்றுமே!
இல்லை நிகரெம் தேயிலைக்கே!

கே.எம்.சீ. பிரபாகரன்-நாவலவத்தை ஸ்பிரிங்வெலி.

வடக்கில் இமயமலை பாப்பா
- தெற்கில்
வாழும் குமரிமுனை பாப்பா!
கிடக்கும் பெரிய கடல் கண்டாய்
-இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா!
—சுப்பிரமணிய பாரதியார்.

**பாப்பா முரசு சிறுகதை**

# கந்தனின் கருமித்தனம்



ஓர் ஊரில் கந்தன் என்பவன் வசித்து வந்தான். அவன் ஒரு வடிகட்டிய கருமியாக இருந்தான்.

அவனிடம் ஒரு செம்மறி ஆடு இருந்தது. அந்த ஆடு அடர்ந்த ரோமத்துடன், அழகாக இருந்தது.

அதைத் தினமும் புல்வெளியில் மேய்ச்சலுக்கு அழைத்துச் செல்வதால் அங்குள்ள பசுமையான புற்களைத் தின்று இன்னமும் கொழுத்திருந்தது.

ஆட்டின் உடம்பில் அழகிய ரோமம் கருகருவென்று வளர்ந்திருந்தது.

ஒரு நாள்—

கந்தனின் நண்பன் பொன்னன் என்பவன் கந்தனை சந்தித்தான்.

"கந்தா! ஆட்டிற்கு ரோமம் அடர்த்தியாக வளர்ந்து விட்டதே. இதை அப்படியே விடாமல் வெட்டிவிட வேண்டும். அப்போது தான் ஆடும், ரோமமும் நன்கு வளரும். ரோமத்தை நல்ல விலைக்கு விற்க முடியும். கம்பளி நெய்பவர்கள் வாங்குவார்கள். நல்ல பணமும் கிடைக்கும்," என்று சொன்னான்.

"அப்படியா? ஆட்டின் ரோமத்தை எப்படி வெட்டுவது?" என்று கேட்டான் கந்தன்.

"ஆட்டின் ரோமத்தை வெட்டுபவன் ஒருவனை எனக்குத் தெரியும். அவனை அனுப்பி வைக்கிறேன்," என்று சொல்லி விட்டுப் போனான் பொன்னன்.

மறுநாள் ஆட்டு ரோமத்தை வெட்டும் ஒருவன் வந்து கந்தனிடம் கூலி பற்றிப் பேசினான். அவன் கேட்ட கூலி அதிகமாக உள்ளது என்று அனுப்பி விட்டான் கந்தன்.

'அநியாயக்காரர்கள். ஒரு ஆட்டின் ரோமத்தை வெட்ட இவ்வளவு கூலி கொடுப்பதா? பேசாமல் நானே வெட்டி விட்டால் வெட்டுக்கூலி மிச்சமாகும்,' என்று முடிவெடுத்தான் கந்தன்.

ஒரு கத்திரிக்கோலை எடுத்து ஆட்டின் ரோமத்தை வெட்டத் தொடங்கினான் கந்தன்.

ஆடோ ஒரு இடத்தில் நிற்காமல் அங்குமிங்கும் துள்ளியது. கந்தனுக்கோ இதற்கு முன் ஆட்டு ரோமத்தை வெட்டிப் பழக்கமில்லாததால் தாறுமாறாக வெட்டினான். அப்படி வெட்டும்போது கத்தரிக்கோலின் நுனிப்பகுதி ஆட்டின் வயிற்றில் சற்று ஆழமாகக் குத்தி விட்டது.

வலி பொறுக்க முடியாமல் ஆடுகத்தியது.

'காயம் பட்ட ஆட்டை மிருக வைத்தியரிடம் அழைத்துச் சென்றால் பணம் செலவாகுமே' என்று நினைத்த கந்தன் சில இலை தழைகளை அரைத்து காயம்பட்ட இடத்தில் கட்டினான்.

காயம் குணமாகவில்லை. அதே சமயம் காயம் பெரிதாகி வலியும் அதிகமாகியது.

கந்தன் செலவையே பெரிதாக நினைத்து, தானே ஒரு வாரம் அதற்கு வைத்தியம் செய்தான்.

ஆட்டின் காயம் பெரிதாகி சீழ் பிடித்து இரண்டொரு நாளில் அது இறந்தே விட்டது.

அதன் பிறகே கந்தனுக்குத் தனது கருமித்தனத்தால் ஏற்பட்ட விளைவு என்னவென்று விளங்கியது.

"ஐயோ! எனது கருமித்தனத்தால் பெறுமதியான எனது ஆட்டை இழந்து விட்டேனே. இப்போதுநான் என்ன செய்வேன்?" என்று அழுதான்.

# வாரம் ஒரு நாடு

## பாகிஸ்தான்



தலைநகர்- இஸ்லாமாபாத்.
பரப்பு- 7,96,095 சதுர கிலோமீட்டர்
மக்கள் தொகை- 12.81 கோடி
மொழி- உருது, பஞ்சாபி, சிந்தி, புஷ்து, பலுச்சி
எழுத்தறிவு- 35%
சமயம்-இஸ்லாம்
நாணயம்- ரூபாய்.

**அமைவிடம்:-** வடமேற்கில் ஆப்கானிஸ்தானும்; வடக்கில் முன்னாள் சோவியத் யூனியன் மற்றும் சீனாவும்; கிழக்கில் இந்தியாவும்; தெற்கில் அரபிக்கடலும் இதன் எல்லைகள்.


**வரலாறு:-** இந்தியப் பிரிவினையைத் தொடர்ந்து 1947 ஆகஸ்ட் 14ல் பாகிஸ்தான் உருவானது.

பாகிஸ்தான் நாடு உருவாக பாடுபட்டவர் முகம்மது அலி ஜின்னா. 1958ல் அதிபர் இஸ்கந்தர் மிர்சா இராணுவ ஆட்சியை ஏற்படுத்தினார். சீஃப் மார்ஷல் அயூப் கான் சட்ட ஒழுங்கு நிர்வாகியானார். 1969ல் யாஹ்யாகானிடம் அயூப்கான் ஆட்சியுரிமையைக் கொடுத்தார். 1970ல் தேர்தல். இதைத் தொடர்ந்து நடைபெற்ற உள்நாட்டுக் கலவரங்களை அடுத்து 1971ல் கிழக்கு பாகிஸ்தான் பகுதி பங்களாதேசம் எனும் பெயரில் தனிநாடாயிற்று. யாஹ்யா கான் ராஜினாமா செய்தார். பின்னர் சுல்பிகார் அலிபூட்டோ அதிகாரம் ஏற்றார். 1977ல் ஸியா-உல்-ஹக் ஆட்சியைக் கைப்பற்றினார். பூட்டோவை 1979ல் தூக்கிலிட்டார். ஸியா-உல்-ஹக் 1988ல் நடைபெற்ற ஒரு விமான விபத்தில் கொல்லப்பட்டார்.

தொடர்ந்து 1988ல் தற்காலிக அதிபராக இருந்த குலாம் இஷாக்கான் பொதுத் தேர்தலை நடத்தினார். இதில் சுல்பிகார் அலி பூட்டோவின் மகளான பெனாசிர் பூட்டோ தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சி பெரும் வெற்றி பெற்று அதிகாரம் ஏற்றது. தொடர்ந்து குலாம் இஷாக்கானே அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1990ல் அதிபர், பெனாசிர் பூட்டோவின் அரசைக் கலைத்தார். பின்னர் நடந்த தேர்தலில் இஸ்லாமிய ஜம்காரி கட்சியைச் சார்ந்த நவாஸ் ஷெரிப் வெற்றி பெற்று பாகிஸ்தானின் 11வது பிரதமரானார். ஆனால் அதிபருக்கும், பிரதமருக்கும் இடையே ஏற்பட்ட அதிகாரப் போட்டியைத் தொடர்ந்து அதிபர் 1993ல் நவாஸ் ஷெரிப்பின் அரசையும் கலைத்தார். அடுத்து நடைபெற்ற பொதுத் தேர்தலில் மீண்டும் பெனாசிர் பூட்டோ பிரதமாராகி அரசு நடத்துகிறார்.

**பொருளாதாரம்:-** நாட்டின் பொருளாதாரத்தின் முக்கிய ஆதாரம் விவசாயம். நாட்டின் மொத்த வருமானத்தில் விவசாயத்தின் பங்களிப்பு 24% ஆகும். நெல், கோதுமை, சீனி, துணிவகைகள் போன்றவை முக்கிய உற்பத்திப் பொருட்கள். நிலக்கரி, ஜிப்சம் போன்ற தாதுக்களும் கிடைக்கின்றன. அரிசி, சீனி, கோதுமை உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுள்ளது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 31.08.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 155
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 153

பரிசுக்குரியவர்:
எச்.ஆர். ஹஸலா பானு,
மன்னார் வீதி, புத்தளம்.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| எம்.ரி.எம். சரீக்,<br>மட்/அல்-அமீன் வித்தியாலயம், காத்தான்குடி.06. | முஹம்மட் றுஷ்தி,<br>கொட்டா வீதி, பொரல்லை, கொழும்பு-08. |
| எஸ். கோபிநாத்,<br>றை தமிழ் மகா வித்தியாலயம், பலாங்கொடை. | ஜே.எம். றிஸ்வான்,<br>உடதலவின்ன மாஜி, கட்டுகஸ்தோட்ட. |
| ஏ.சி. முஹம்மது றிஸ்வான்,<br>சாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம். | டி.எல். கிஷாந்த்,<br>கார்மெல் பாத்திமா கல்லூரி, கல்முனை. |
| ஏ. சபீக்,<br>அல் சிறாஜ் வித்தியாலயம், பாலமுனை-04. | செல்வி ரா. நிரோஷா,<br>ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் வித்தியாலயம், திருகோணமலை. |
| எம். ..பஹாட்,<br>ஹமீட் அல் ஹுஸைனி கல்லூரி, கொழும்பு-14. | ச. ஹரிகிரிஷாந்,<br>புனித மிக்கேல் ஆரம்ப பாடசாலை, மட்டக்களப்பு. |

# மான்



தலையில் கிளைகள் போன்ற கொம்புகளை உடைய மிருகம் எது என்று கேட்டால் உடனே மான் என்று பதில் வரும். உண்மையில் அவை கொம்புகள் அல்ல எலும்புகள். மான்களின் மண்டையோட்டில் இருந்துதான் அவை வளர்கின்றன. அதன் முனை மிகக் கூர்மையானதாக இருக்கும். சண்டை போடும்போது இவற்றை மான்கள்



தற்காப்புக்காகப் பயன்படுத்தும். ஒவ்வொரு ஆண்டும் மான்களின் கொம்புகள் விழுந்து முளைக்கும். நீர்மான் மற்றும் மஸ்க் எனப்படும் கஸ்தூரிமான்களுக்கு மட்டும் கொம்பு முளைக்காது.

மான்களுக்கு நீண்டகால்கள் உண்டு. நீண்ட தூரத்திற்குத் தாவிக் குதித்து வேகமாக ஓட இந்தக் கால்கள் உதவுகின்றன. சில மான்கள் மணிக்கு 64 கிலோ மீட்டர் வேகத்தில் ஓடும். ஓட்டத்தில் கரடி, ஓநாய், மனிதர்களை மிஞ்சி விடும்.

உலகம் முழுவதும் 60 வகையான மான்கள் உள்ளன. இவற்றில் முன்ட் ஜாக் எனப்படும் ஒரு வகை மான்கள் ஆபத்து வரும்போது குரைப்பது போல் கத்தும். மான் வகைகளில் சீதல் மான்கள்தான் மிக அழகாக இருக்கும். புள்ளிமான்கள் என அழைக்கப்படும் இந்த மான்களின் உடலில் பட்டுப் போன்ற மிருதுவான தோல் உண்டு. சிவப்பு கலந்த கபிலநிறத்துடன் கூடிய அந்தத் தோலில் வெள்ளை நிறப்புள்ளிகள் உள்ளன. அதன் கொம்புகள் மூன்று அடி உயரம் வரை வளரும். அந்தக் கொம்பு பார்க்க மிக அழகாக இருக்கும். கஸ்தூரி மான் என அழைக்கப்படும் மஸ்க் மான் வயிற்றில் இருந்து கபில நிற மெழுகு போன்ற திரவம் சுரக்கும். இதுதான் கஸ்தூரி.

சிலவகை வாசனை செண்ட், சோப் தயாரிக்க இந்தத் திரவம் பயன்படுத்தப் படுகிறது.

மான்களின் வாழ்நாள் 10 ஆண்டுகள் முதல் 20 ஆண்டுகள். விவசாயம் மற்றும் குடியிருப்பு வசதிகளுக்காகக் காடுகளை அழிப்பதால் மான்களின் எண்ணிக்கை வேகமாகக் குறைந்து வருகிறது. சில வகைமான் இனங்கள் அழியும் நிலைக்கு வந்துவிட்டன.

# நிறம் தெரியாத நோய்



***நிறம் தெரியா நோய் எப்படி ஏற்படுகின்றது?**

விழித்திரையில் கோன்கள் என்று சொல்லப்படும் செல்கள் உள்ளன. இவைதான் பார்வையின் மூலம் நிறங்களைப் பிரித்து அறிகின்றன. சாதாரண பார்வைத் திறன் உள்ளவர்களுக்கு விழித்திரையில் மூன்று வகையான கோன்கள் இருக்கும். இவற்றில் ஒன்று, இரண்டு அல்லது மூன்று வகையான கோன்களும் இல்லாதவர்களுக்குத் தான் நிறம் தெரியா நோய் (கலர் பிளைண்ட்னெஸ்) ஏற்படும். காளைச் சண்டையில் பங்கு பற்றும் காளைகள் உட்பட பல மிருகங்களுக்கு இந்நோய் உண்டு.

**★ இந்த நோய் உள்ளவர்கள் கறுப்பு, வெள்ளையில் மட்டும் தான் பார்ப்பார்களா?**

இந்த நோய் உள்ள மிகச்சிலர் மட்டுமே கறுப்பு, வெள்ளை, சாம்பல் நிறங்களைப் பார்ப்பார்கள். இவர்களது பார்வை 'அக்ரேமெட்டிக் பார்வை' எனப்படும். இந்தநோய் உள்ளவர்களில் பெரும்பாலோர் மட்டுமே பார்ப்பார்கள். அவர்கள் சிவப்பு நிறத்தைப் பச்சையாகவும், பச்சை நிறத்தை மஞ்சளாகவும் பார்க்கக் கூடியவர்கள். இவர்களது பார்வை 'டைகுரோமெட்டிக் பார்வை' எனப்படும்.

**★ இது பரம்பரைநோயா?**

ஆமாம். சில சமயம் கண்ணில் அடிபட்டாலோ, வேறுவித கண்நோய் ஏற்பட்டாலோ இந்த நோய் ஏற்படும்.

**★ இதைப் போக்க முடியுமா?**

முடியாது.

**★ இந்நோய் உள்ளவர்கள் தங்கள் பார்வையில் கோளாறு இருப்பதை அறிவார்களா?**

பலருக்குத்தெரியாது. அதுவும் டைகுரோமெட்டிக் கோளாறு உள்ளவர்கள் தங்கள் பார்வையில் குறை இருப்பதை அறிய மாட்டார்கள்.

# தனிமைப்படுத்தப் பட்டவர்கள்




தென் அமெரிக்கா-ஆபிரிக்கா கண்டங்களுக்கு இடையே தெற்கு அட்லாண்டிக் கடலில் உள்ள சிறு தீவு டிரிஸ்டன்டா கன்ஹா. இங்குள்ள மக்கள் தான் உலகிலேயே மிகவும் தனிமைப்படுத்தப்பட்டவர்கள். அவர்களுக்கு அருகாமையில் நிலப்பரப்போ, மக்களோ இல்லை. இந்தத் தீவிலிருந்து 2 ஆயிரத்து 120 கிலோமீட்டர் தூரத்தில் செண்ட் ஹெரினா என்ற குட்டித்தீவு மட்டும் உள்ளது.


படிப்பகம்

www.padippakam.com




**இதுவரை** மதன், கீதா இருவரும் காதலர்கள். கடற்கரையில் மாலை நேரத்தில் சந்திக்கின்றனர். இருட்டாகி விட்டதால் இருவரும் புறப்படுகின்றனர். மதனின் பர்ஸ் தொலைந்து விடுகிறது. கடற்கரையில் ஒரு பெண்ணின் உடல் கிடக்கிறது. அந்தப் பெண்ணின் பெயரும் கீதா. மரிய கீதா. பொலிசார் விசாரணைக்கு வருகின்றனர். மதனின் பர்ஸ் கிடைக்கிறது. மதனைத் தேடி வருகின்றனர். மதனின் காற்சட்டையில் இரத்தக் கறை இருக்கிறது. மதன் கைது செய்யப்படுகிறான். காற்சட்டையில் எப்படி இரத்தம் வந்தது என்பதை அவனால் விளக்க முடியவில்லை. மதனின் காதலி கீதாவுக்கு பொலிசார் போன் செய்கின்றனர். மதன் என்று யாரையும் தனக்குத் தெரியாது என்கிறாள் கீதா. கோர்ட்டில் விசாரணை தொடர்கிறது.

**இனி...**




"யுவர் ஆனர், ஆக, நான் கொடுத்த விளக்கங்களின்படி, மதன் தன் காதலி மரியகீதாவுடன் நெருங்கிப் பழகியதில் அவள் கருவுற்றாள். அதைக் கலைக்கச் சொல்லி வற்புறுத்தியிருக்கிறார் மதன். மரியகீதா அதற்குச் சம்மதிக்காமல் தன்னை விரைவில் திருமணம் செய்து கொள்ளச் சொல்லி வற்புறுத்தியிருக்கிறார். மதனுக்கு மரிய கீதாவை திருமணம் செய்து கொள்ளும் நோக்கமில்லை. சம்பவ தினத்தன்று மாலை தனிமையான, கடற்கரைப் பகுதியில் இருவரும் பேசிக் கொண்டிருந்த போது, வாக்கு வாதம் முற்றிப் போய் ஆத்திரப்பட்ட மதன் கத்தியால் மரியகீதாவைக் குத்திவிட்டு ஓடிவிட்டார். இதை தக்க ஆதாரங்களோடும், தக்க சாட்சி விசாரணைகளோடும் பிராசிகியூஷன் தரப்பு நிரூபிக்க இருக்கிறது"

"வெரிகுட். டிஃபன்ஸ் யாரு?"

"மை செல்ஃப் சார்."

"என்ன சொல்றீங்க?"

"என்னோட கிளையண்ட் மதன் துரதிருஷ்டக்காரர். அவர் குற்றமற்றவர். இந்த கொலையில் அவர் வலுக்கட்டாயமாக திணிக்கப்பட்டிருக்கிறார். சம்பவ தினத்தில் மதன் கோவிலுக்கு வந்தவர் சற்று காற்று வாங்கி கடற்கரையில் நடந்தார், தனியாக. இருட்டான சூழ்நிலை காரணமாக கொலை செய்யப்பட்ட பிரேதத்தின் அருகில, விபரம் அறியாமல் அமர்ந்தார். அங்கே மணலில் சிந்தியிருந்த ரத்தக்கறை அப்படித்தான் அவர் பாண்ட்டில் பட்டது. யதேச்சையாக மணலை அலசிய மதனின் கை கொலை ஆயுதத்தின் மேல் பட்டிருக்கிறது. இருட்டில் அது ஏதோ ஒரு எலும்புத் துண்டு என்று கருதி வீசியெறிந்து விட்டு வந்து விட்டார்."

"என்ன மிஸ்டர் கோபாலகிருஷ்ணன், உங்க ஆர்குயுமெண்ட் ரொம்ப வீக்கா இருக்கே?"

"யுவர் ஆனர், விதி ரொம்ப ஸ்ட்ராங்கா இருக்கே, என்ன செய்றது?"

"ஷல் வீப்ரொஸீட் வித் திஸ் கேஸ்?"

"ஆரம்பிக்கலாம்."

"அக்யூஸ்டை ஸ்டாண்டுக்குக் கூப்பிடுங்க."

"மதன்! மதன்! மதன்!"

"சொல்லுங்க. நான் சொல்லுவதெல்லாம் உண்மை."

"நான் சொல்வதெல்லாம் உண்மை"

"பிராசிகியூட்டர், எக்ஸாமின் ஹிம்."

"உங்க பேரென்ன?"

"எஸ். மதன்."

"என்ன பண்றீங்க?"

"வேலை தேடிக்கிட்டிருக்கேன்."

"எங்க தங்கியிருக்கீங்க?"

"என் ஃபிரெண்டு ரூமிலே."

"யாரையாச்சும் காதலிச்சிருக்கிங்களா?"

"இல்லை."

"மரியகீதாவை உங்களுக்கு தெரியாது?"

"தெரியாது."

"அவளை நீங்க காதலிக்கலை?"

"இல்லை."

"சம்பவம் நடந்த அன்னைக்கு மரியகீதாவோட உங்களை அஷ்டலக்ஷ்மி கோயில்ல பார்த்ததுக்கு சாட்சிகள் இருக்கே?"

"எனக்கு எதுவும் தெரியாது."

"போலிஸ் ஸ்டேஷன்ல முதல்ல கீதாவை காதலிக்கிறேன், அவளை சந்திக்க கோயிலுக்கு வந்தேன், சந்திச்சோம், பேசினோம்னு சொன்னதா இன்ஸ்பெக்டர் சொன்னாரே."

"அப்ஜக்ஷன் யுவர் ஆனர்! திஸ் ஈஸ் ப்யூர்லி ஏ ஹியர் ஸே. என் கட்சிக்காரர் அப்படி எழுத்து மூலமாவோ, ஓரலாவோ ஸ்டேட்மெண்ட் எதுவும் கொடுக்கலை."

"அப்ஜக்ஷன் சஸ்டெய்ன்ட். இந்த மாதிரி கேள்விகளை தவிர்த்திடுங்க மிஸ்டர் பிராசிகியூட்டர்.

"யெஸ் யுவர் ஆனர். மதன், சம்பவத்தன்னைக்கு நீங்க மட்டும் தான் கோயிலுக்குப் போனதா சொல்றிங்களா?"

"ஆமாம்."

"எதுக்கு போனிங்க?"

"என்ன சார் இது. சாமி கும்பிட."

"அப்புறம் என்ன செஞ்சீங்க?"

"கடற்கரையோரமா நடந்தேன்."

"எதிரே என்ன பார்த்திங்க?"

"கடல் தான். வேற என்ன? சில தோணிங்க கரையில கிடந்திச்சி. வேற எதை பார்க்க முடியும் கடற்கரையில?"

"எதிர்க் கேள்வி வேணாம். தனியா போய் ஒரு பொணத்துக்கு பக்கத்திலே உக்காந்துட்டிங்க, அப்படித்தானே?"

"இல்லை சார். நான் உக்காந்த இடத்துக்குப் பக்கத்திலே ஒரு பொணம் இருந்ததே தெரியாது சார்."

"அதெப்படிங்க? ஒரு பொணத்தோட கெட்ட நாத்தம் கூட உங்களால உணர முடியலையா?"

"அப்ஜக்ஷன் யுவர் ஆனர். உறைந்து போன ரத்தமாய் இருந்தால் ஆடையில் ஒட்டாது. பிராசிகியூஷன் தரப்பில் தரப்பட்டிருக்கும் எக்ஸிபிட் நம்பர் சிக்ஸ்- என் கட்சிக்காரரின் பேண்ட். அதில் உள்ள ரத்தக்கறை பேண்ட்டின் பின்பக்கத்தில் அமரும் இடத்தில் இருக்கிறது. ரத்தம் ஒட்டக் கூடிய நிலையில் மணலில் இருந்திக்கிறது. என்றால், இறப்பு, கட்சிக்காரர் அமர்ந்த சில நிமிடங்களுக்கு முன்னர்தான் நிகழ்ந்திருக்க வேண்டும். இறந்து சில நிமிடங்களே ஆன ஒரு பிணத்திடமிருந்து துர்நாற்றம் வருவதில்லை."

"ரத்தத்திற்கென்று ஒரு கவுச்சிவாடை உண்டே. அதைக் கூட உணரவில்லையா?"

"மன்னிக்க வேண்டும் யுவர் ஆனர். சாத்தப்பட்ட ஒரு அறையில் இது நிகழ்ந்திருந்தால் இது சாத்தியம். கடற்கரை ஓரத்தில், உப்புக் காற்றின் தீவிரத்தில் மற்ற வாசனைகளை உணர்தல் சிரமம்."

"பிராசிகியூட்டர், ப்ரொசீட்."

"தாங்க் யு யுவர் ஆனர். சரி. உக்காந்திருந்திங்க, அப்புறம் என்ன செஞ்சிங்க?"

"கொஞ்ச நேரத்திலே புறப்பட்டேன். புறப்பட எந்திரிக்கிறப்போ கழட்டிப் போட்ட ரெண்டு செருப்பிலே ஒண்ணுத்தான். கிடைச்சுது. இன்னொன்னைத் தேடினேன். கையால. மணலைத் துளாவினப்போ கத்தி மாதிரி எதுவோ தட்டுப்பட்டிச்சி."

"பிசுபிசுப்பா உணர்ந்திங்களா?"

"இல்லை."

"உங்க கை பட்டது கூர்மையான கத்திப் பகுதியிலா? கைப்பிடிப் பகுதியிலையா?"

"கைப்பிடி பகுதியிலே"

"அது கத்திதான்னு உணர்ந்திங்க. அப்படித்தானே?"

"இல்லை. கத்தி மாதிரி பட்டுச்சி. என்னவோ எலும்போ, தகரமோன்னு நினைச்சி தூக்கி எறிஞ்சிட்டேன்."

"அப்புறம்?"

"புறப்பட்டு ரூமுக்குப் போயிட்டேன்"

"மணிபர்சை எங்கே தவற விட்டிங்க?"

"எங்கேன்னு தெரிஞ்சிருந்தா அப்பவே நான் எடுத்துட்டுப் போயிருப்பேனே... எங்கேன்னு தெரியாம கோவில் அர்ச்சகர் கிட்டே டார்ச் வாங்கிட்டுப் போய் தேடிப்பார்த்து கிடைக்காம திரும்பிட்டேன்."

"ரூமுக்கு வந்ததும் பாண்ட்லே இருந்த ரத்தக் கறையை கழுவப் பார்த்திங்களா?"

"அது ரத்தக்கறைன்னு எனக்குத் தெரியாது. ஹோட்டல்ல தக்காளி சாஸ் சிந்தின நாற்காலி மேல உக்காந்துட்டோம்னு நினைச்சிதான் கழுவினேன்."

"யுவர் ஆனர், மதன் மிக சாமர்த்தியமாக பொய் சொல்கிறார். அல்லது பொய் சொல்ல தயாரிக்கப்பட்டு இருக்கிறார். சப்-இன்ஸ்பெக்டர் சசிதரன் தன்னுடைய சாட்சியத்தில் இவர் ஸ்டேஷனில் ஓரலாக சொன்ன ஸ்டேட்மெண்ட்டை தெரிவிப்பார். இப்போது அளித்த பதில்களுக்கும் அவற்றுக்கும் உள்ள முரண்பாடுகளை கவனிக்கக் கோருகிறேன். ஐ ஸ்டாப் வித் திஸ்."

**"கோ**பாலகிருஷ்ணன், கிராஸ் எக்ஸாமின் செஞ்சி எதாச்சும் எஸ்டாபிளிஷ் பண்ண விரும்புறிங்களா?"

"யெஸ் யுவர் ஆனர். மதன், பயப்படாம சொல்லுங்க. ஸ்டேஷன்ல உங்களை பெல்ட்டால அடிச்சாங்களா?"

"ஆமாம் சார்."

"மரியகீதாவை கொலை செஞ்சதை ஒப்புக்கச் சொல்லி வற்புறுத்தினாங்களா?"

"ஆமாம் சார்."

"நீங்க யாரையாச்சும் காதலிச்சிருக்கீங்களா?"

"இல்லவே இல்லை."

"அன்னிக்கு கோயிலுக்கு தனியாதானே போனிங்க?"

"தனியாதான் போனேன்."

"மணி என்ன அப்போ?"

"ஏழரை மணி இருக்கும்."

"யுவர் ஆனர், கைண்ட்லி நோட் திஸ். போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்படி மரியகீதா மாலை ஏழுலிருந்து ஏழரைக்குள் இறந்திருக்கிறார். மதன், கோயில்லேர்ந்து நீங்க கடற்கரையிலே உக்காந்த இடத்துக்குப் போக எவ்வளவு நேரமாகும்.?"

"பத்து, பதினைஞ்சி நிமிஷமாகும்."

"சம்பவம் நடந்த தினம் அமாவாசைக்கு மறு நாள். அதனாலே அதிகமா இருட்டு. எதிர்க்க நடந்து வர்றவங்களை உங்களால பார்க்க முடிஞ்சதா?"

"முடியலை சார். கிட்டே வந்ததும் தான் மனுஷன் மாதிரி தெரிஞ்சது. அவ்வளவு இருட்டு."

"வெரிகுட். கொஞ்சம் அப்படியே திரும்பி நில்லுங்க. வலது கையை மட்டும் பின்பக்கம் நீட்டுங்க. நான் ஒரு பொருளை தர்றேன். அதை உணர்ந்து பார்த்து என்னன்னு சொல்ல முடியுமா பாருங்க. எங்கே, இது என்ன சொல்லுங்க."

"சின்ன சைஸ் ரூலர் சார். இல்லைன்னா லத்திக்கம்பு."

"யுவர் ஆனர், இது ஒரு மெழுகுவர்த்தி. அவர் சொன்ன ரெண்டுமே இல்லை. ஒரு பொருளை பாக்கிறப்போ நாம தப்பான அர்த்தம் எடுத்துக்க வாய்ப்பு இருக்குன்னு காமிக்கத்தான் இதை டெமான்ஸ்ட்ரேட் செஞ்சேன். மதன் தன் கையில் பட்டதை கத்தி என்று உணரவில்லை. கத்தி போலதான் உணர்ந்தார். ஆகவே அதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் விசிறி எறிந்தார். தட்ஸ் ஆல் யுவர் ஆனர்"

"வெல். பிராசிகியுஷன் தரப்பில் விட்னெஸ் ஆரம்பிக்கலாம்."

"சப்-இன்ஸ்பெக்டர் சசிதரன்! வாங்க."

"பிராசிகியூட்டர்."

"உங்களுக்கு கொலை தகவல் எப்படி கிடைச்சது?"

"கண்ட்ரோல் ரூம்லேர்ந்து கூப்பிட்டு உங்க ஏரியாவிலே, இந்த இடத்திலே பாடி கிடக்குதுன்னு போன் வந்திச்சி. போய் பாருங்கன்னு சொன்னாங்க. போனோம்-"

"என்ன பார்த்திங்க?"

"ஒரு பொண்ணு நெஞ்சுல கத்திக் குத்துக் காயத்தோட கடற்கரை ஓரமா மணல்ல கிடந்தா. பக்கத்திலே ஒரு லேடீஸ் கைப்பை கிடந்திச்சி."

"தட் ஈஸ் எக்ஸிபிட் நம்பர் த்ரீ யுவர் ஆனர். ம். சொல்லுங்க. வேற?"

"கொஞ்சம் தள்ளி ரத்தக்கறையோட கத்தி கிடந்திச்சி. இன்னும் கொஞ்சம் தள்ளி ஒரு மணிபர்ஸ் கிடந்திச்சி."

"இதோ இங்கே வச்சிருக்கிற கத்தி தானே? அந்த மணிபர்ஸ் தானே?"

"ஆமாம்"

"அப்புறம் என்ன செஞ்சிங்க?"

"கைப்பையிலே இருந்த விலாசம் வச்சி விசாரிச்சி இறந்த பொண்ணோட பேரு, விபரங்கள் தெரிஞ்சுக்கிட்டேன்."

"அந்த விபரங்களை சொல்லுங்க."

"அந்தப் பொண்ணு பேரு மரியகீதா. தன்னோட அக்கா ரோஸ்லின் ராஜசேகர் வீட்ல தங்கி இருந்தா. நாடகத்திலே நடிப்பா. சினிமா சான்ஸ் தேடிக்கிட்டிருந்தா. ஆறு மாசமா மதனை காதலிக்கவும் செஞ்சிருக்கா."

"ஐ ஹாவ் டு அப்ஜெக்ட் யுவர் ஆனர். மரியகீதா , மதனைக் காதலிச்சதா சப்-இன்ஸ்பெக்டர் சொல்றது ப்யூர்லி இமாஜினரி. இதுக்கு சப்போர்ட்டா எந்தவித சின்ன ஆதாரமும் சமர்ப்பிக்கப்படலை."

"திருமதி ரோஸ்லின் ராஜசேகர் பின்னாடி சாட்சி சொல்லப் போறாங்க. அது வரைக்கும் பொறுமையா இருக்கும்படி என் எதிர்க்கட்சி நண்பரைக் கேட்டுக்கறேன் யுவர் ஆனர்."

"தென், ஹாவ் டு ஓவர்ரூல் யுவர் அப்ஜெக்ஷன், கோபாலகிருஷ்ணன்."

"சொல்லுங்க மிஸ்டர் சசிதரன், ஆறு மாசமா காதலிச்சாங்க. அப்புறம்?"

"ஏற்பட்ட நெருக்கத்தினாலே மரிய கீதா கர்ப்பமானா. அதுக்கப்புறம் அவ மதனை வற்புறுத்தினா- சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி."

"யுவர் ஆனர், சப்-இன்ஸ்பெக்டரோட ஸ்டேட்டுமண்ட்டின் ஒவ்வொரு வரிக்கும் ஆதாரங்களை பிராசிகியூட்டர் சமர்ப்பிப்பார்ன்னு எதிர்பார்க்கறேன்."

"பொறுமையா இருங்க. சொல்லுங்க நீங்க."

"சம்பவத்தன்னைக்கு ரெண்டு பேரும் கடற்கரையிலே பேசிக்கிட்டிருந்தப்போ, வாதம் முத்திப் போய், ஆத்திரத்திலே தான் மரியகீதாவைக் குத்திட்டு ஓடிட்டார். ஓடினப்போ மணிபர்ஸ் தவறி விழுந்துடிச்சி."

"சரி, மணிபர்சிலே இருந்த விலாசம் வச்சி நீங்க மதன் ரூமுக்குப் போனப்போ என்ன பண்ணிக்கிட்டிருந்தார் அவர்?"

"ரத்தக்கறை படிஞ்ச வெள்ளை பாண்ட்டை துவைச்சிட்டிருந்தார்."

"நீங்க என்ன செஞ்சீங்க?"

"ஸ்டேஷனுக்கு அழைச்சிட்டு வந்து கைரேகை பதிவு செஞ்சி வாங்கிட்டு லாக்கப்ல வச்சேன். பாண்ட்டையும், கைரேகையையும் லேபுக்கு அனுப்பினேன். ரிப்போர்ட் வந்ததும், முறைப்படி மாஜிஸ்ட்ரேட் முன்னாடி ஆஜர்படுத்தி ரிமாண்ட்ல வச்சேன்."

"எதிர்க்கட்சி நண்பர் குறுக்கு விசாரணை செய்யலாம் யுவர் ஆனர்."

"மிஸ்டர் சசிதரன், மரியகீதாவும், மதனும் ஆறு மாசமா காதலிச்சாங்கன்னு சொன்னிங்க. எதை வச்சி அப்படி சொன்னிங்க?"

"மரியகீதாவோட அக்கா ரோஸ்லின் மரியதாஸ் சொன்னாங்க."

"அதைத் தவிர வேற எந்த வகையிலே யாவது அவங்க காதலை உறுதி செஞ்சிக்கிட்டிங்களா?"

"இல்லை."

"தட்ஸ் ஆல் யுவர் ஆனர்."

"நெக்ஸ்ட் எவிடென்ஸ்."

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: கே. மோகன்.
வயது: 20
முகவரி: 192, செட்டியார் தெரு, கொழும்பு-11.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: எம். நஸீர்.
வயது: 18
முகவரி: 211, எம்பக்க, ஹந்தஸ்ஸ.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கதைப் புத்தகம்.



பெயர்: என். முரளிகரன்.
வயது: 30
முகவரி: P.O.BOX-1391, DOHA, QATAR.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: எல். முஜிபுர் ரஹ்மான்.
வயது: 20
முகவரி: 69, கெகுண கொல்ல, கெகுணகொல்ல போஸ்ட்.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: ஷஹ்மா பானு.
வயது: 18
முகவரி: 25/ ஏ, ஸ்ரீநிவாச மாவத்தை, பெல்லியமலை, பேருவளை.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: எம். சத்தகத்துள்ளா.
வயது: 27
முகவரி: I.D.G.CO.LTD., MAKKAH, K.S.A.
பொழுது போக்கு : ரீவி., பேனா நட்பு.

பெயர்: எம். கலீல்.
வயது: 25
முகவரி: 583 பி/1, ஆலையடி, கைக்கா வீதி, நிந்தவூர்-06.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எஸ். ஜாபிர்.
வயது: 20
முகவரி: 184 ஜும்மா மஸ்ஜித் வீதி, கல்லொளுவை, மினுவாங்கொட.
பொழுதுபோக்கு: ரீ.வி., பத்திரிகை.

பெயர்: எஸ். சிவதாசன்.
வயது: 19
முகவரி: 4, முதலியார் தெரு, மட்டக்களப்பு.
பொழுது போக்கு: பேனா நட்பு, வானொலி.

பெயர்: எம். திருக்குமார்.
வயது: 19
முகவரி: மாக்கந்த டிவிஷன், பூனாகலை.
பொழுது போக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம்.

பெயர்: எஸ். செல்வகுமார்.
வயது: 23
முகவரி: APT #10 .1540 RUE OUIMET, ST.LAURENT MONTREAL QUEBEG H4L 3RI CANADA.
பொழுது போக்கு: சினிமா, கிரிக்கெட்.

பெயர்: எம். சித்தீக் அமீன்.
வயது: 23
முகவரி: 145, காலி வீதி, தெஹிவளை.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.


படிப்பகம்

www.padippakam.com

# தாய்

**மக்சீம் கார்க்கி**

90

"தனிச் சொத்துரிமை ஒழிக!" ▫ "உற்பத்திச் சாதனங்கள் அனைத்தும் மக்கள் கையில்!" ▫ "அனைத்து அதிகாரங்களும் மக்களிடம்!"



அந்தக் கிழ நீதிபதி வலது இடது புறமாக அசைந்து கொண்டே பாவெலின் பக்கமாகத் திரும்பி ஏதோ சொன்னார்.

ஆனால் அவரது வார்த்தைகளைப் பாவெலின் நிதானிமான ஆற்றொழுக்குப் பேச்சு அமிழ்த்தி விழுங்கிவிட்டது.

"நாங்கள் சோஷலிஸ்டுகள்! அதாவது தனி நபர் சொத்துரிமைக்கு- சொத்துரிமையின் பேரால் மக்கள் சமுதாயத்தைப் பிளவுபடுத்தி, மக்களை ஒருவருக்கொருவர் எதிராகத் தூண்டி மோதவிட்டு, தமது நல உரிமைகளின் மீது வெறுப்புணர்ச்சியை உண்டாக்கும் சமுதாய அமைப்புக்கு- நாங்கள் எதிரிகள். இந்தச் சொத்துரிமைச் சமுதாய அமைப்பு இந்த வெறுப்புணர்ச்சியை மூடி மறைப்பதற்காக, அல்லது அதை ஏற்றுக்கொள்வதற்காக, பொய்மைக்கும், புனைசுருட்டுக்கும் ஆளாகி, மக்கள் அனைவரையும் பொய்களுக்கும், மாய்மாலத்துக்கும், தீய கிரியைகளுக்கும் ஆளாக்கி விடுகிறது. தான் செழிப்பாக வாழ வேண்டும் என்பதற்காக, மனிதப் பிறவியை ஒரு கருவியாகப் பயன்படுத்த எண்ணும் சமுதாயத்தை நாங்கள் மனிதத் தன்மையற்றதாக, எங்களது நல உரிமைகளின் எதிரியாகக் கருதுகிறோம். அந்தச் சமுதாயத்தின் பொய்யான, இரண்டுபட்ட ஒழுக்க நெறியை நாங்கள் ஒப்புக்கொள்ள முடியாது. தனி மனிதனிடம் அந்தச் சமுதாயம் காட்டும் குரூரத்தையும் வக்கிர புத்தியையும் நாங்கள் வெறுத்துத் தள்ளுகிறோம். அந்த மாதிரியான சமுதாய அமைப்பு தனி மனிதனின் உடலின் மீதும் உள்ளத்தின் மீதும் சுமத்தியிருக்கும் சகலவிதமான அடிமைத்தனத்தையும், சுயநலத்தின் பேராசையால் மனிதர்களை நசுக்கிப் பிழியும் சகலவிதமான சாதனங்களையும் நாங்கள் எதிர்த்துப் போராட விரும்புகிறோம், எதிர்த்துப் போராடவே செய்வோம். நாங்கள் தொழிலாளர்கள். சிறு குழந்தைகளின் விளையாட்டுக் கருவிகளிலிருந்து பிரமாண்டமான யந்திர சாதனங்கள்வரை சகலவற்றையும் எங்கள் உழைப்பின் மூலமே நாங்கள் உலகத்துக்குப் படைத்துக் கொடுக்கிறோம். ஆனால், எங்களது மனித கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் உரிமையைக் கூடப்பறிகொடுத்தவர்களும் நாங்கள் தான். சொந்த நலன்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஒவ்வொருவரும் எங்களைத் தங்கள் கைக்கருவிகளாகப் பயன் படுத்திக்கொள்ள முடிகிறது. ஆனால் தற்போது நாங்கள் எங்கள் கைகளிலேயே சகல அதிகாரமும் இருக்க வேண்டும் என்பதற்காக, இறுதியாய் அந்த அதிகாரத்தை அடையும் அளவுக்கு சுதந்திரம் பெற விரும்புகிறோம். எங்களது கோஷங்கள் மிகவும் தெளிவானவை: 'தனிச் சொத்துரிமை ஒழிக!' உற்பத்திச் சாதனங்கள் அனைத்தும் மக்கள் கையில்!' 'அதிகாரம் அனைத்தும் மக்களிடம்' 'உழைப்பது ஒவ்வொருவருக்கும் கடமை' இவைதாம் எங்கள் கோஷங்கள். இவற்றிலிருந்து நாங்கள் வெறும் கலகக்காரர்கள் அல்ல என்பதை நீங்கள் கண்டு கொள்ளலாம்!"

பாவெல் லேசாகச் சிரித்தான். தனது தலைமயிரை விரல்களால் மெதுவாகக் கோதிவிட்டுக் கொண்டான். அவனது நீலக்கண்களின் ஒளி முன்னைவிட அதிகமாகப் பிரகாசித்தது.

"விஷயத்தை விட்டுப் புறம்பாகப் பேசாதே!" என்று அந்தக் கிழட்டு நீதிபதி தெளிவாகவும் உரத்தும் எச்சரித்தார். அவர் பாவெலின் பக்கமாகத் திரும்பி அவனைப் பார்த்தார். அவர் பார்த்த பார்வையில் அவரது மங்கிய இடது கண்ணில் பொறாமையும் புகைச்சலும் நிறைந்த ஒரு ஒளி பளிச்சிட்டு மின்னுவதாகத் தாய்க்குத் தோன்றியது. எல்லா நீதிபதிகளும் அவளது மகனை ஏறிட்டுப் பார்த்தார்கள். எல்லோரது கண்களும் அவனது முகத்தையே பற்றிப்பிடித்து, அவனது சக்தியை உறிஞ்சுவது போலவும், அவனது இரத்தத்துக்காக தாகம் கொண்டு தவிப்பது போலவும், அந்த இரத்தபானத்தால் உளுத்துக் கலகலத்துப்போன தங்கள் உடம்புகளுக்கு ஊட்டமளித்துத் தேற்றிக் கொள்ள நினைப்பது போலவும், தாய்க்குத் தோன்றியது. ஆனால் அவளது மகனோ உறுதியோடும் தைரியத்தோடும் நேராக நிமிர்ந்து நின்று தனது கையை எட்டி நீட்டிப் பேசிக் கொண்டிருந்தான்:

"நாங்கள் அனைவரும் புரட்சிக்காரர்கள். ஒரு சிலர் வேலை வாங்கவும் மற்றவர்கள் அனைவரும் வேலை செய்யவுமாக இருக்கின்ற நாள்வரையிலும், நாங்களும் புரட்சிக்காரர்களாகவே இருப்போம். யாருடைய நலன்களைக் காப்பாற்றுவதற்காக நீங்கள் அனைவரும் ஏவலாளிகளாக இருக்கிறீர்களோ, அவர்களது சமுதாயத்தோடு எந்த விதத்திலும் ஒத்துப்போகாத எதிரிகள் நாங்கள். அந்தச் சமுதாயத்துக்கும், உங்களுக்கும் எதிரிகள் நாங்கள். எங்களது போராட்டத்தில் நாங்கள் வெற்றி காணும்வரை நமக்குள் எந்தவிதமான சமாதானமும் ஏற்படப்போவதில்லை. தொழிலாளர்களாகிய நாங்கள் நிச்சயமாக வெற்றி பெறுவோம்! உங்கள் எஜமானர்களோ, அவர்கள் நினைத்துக் கொண்டிருப்பது போல பலசாலிகள் ஒன்றுமில்லை! தனி நபர் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காகவும், பெருக்கிக் குவிப்பதற்காகவும் தங்களது அதிகாரத்தால், லக்ஷோப லக்ஷ மக்களை அடிமைப்படுத்தவும் கொன்று குவிப்பதற்காகவும் உதவிக்கொண்டிருக்கும் தனிப்பட்ட சொத்துரிமைதான்,-எங்கள்மீது ஆட்சி செலுத்த அவர்களுக்குப் பலம்தரும் அந்தச் சக்திதான்- அவர்களுக்குள்ளாகவே தகராறுகளைக் கிளப்பிவிடுகிறது; அந்தச் சொத்துரிமை அவர்களை உடல்பூர்வமாகவும், உள்ளபூர்வமாகவும் சீர்குலைத்து வருகிறது. தனிச் சொத்துரிமையைக் காப்பது என்பது சாமான்யமான காரியம் அல்ல. உண்மையைச் சொல்லப் போனால், எங்களது எஜமானர்களாயிருக்கும் நீங்கள் அனைவரும் எங்களையும்விட மோசமான அடிமைகளாயிருக்கிறீர்கள். நாங்கள் உடல் பூர்வமாய் தான் அடிமையானோம்; நீங்களோ உள்ள பூர்வமாகவே அடிமையாகி விட்டீர்கள்! உங்களை உள்ள பூர்வமாகக் கொன்று விட்ட நுக்கால்லிருந்து, வெறுப்பு விருப்புப் பழக்கதோஷ மென்னும் நுகத்தடியின் பளுவிலிருந்து, உங்களை விடுவித்துக்கொள்வதற்கு நீங்கள் சக்தியற்றுப் போய்விட்டீர்கள். ஆனால் நாங்கள் சுதந்திரமான உள்ளத்தோடிருப்பதை எந்த சக்தியுமே கட்டுப்படுத்தவில்லை. உங்களது இஷ்டத்துக்கு மாறாக, நீங்கள் எங்களது உணர்விலே பெய்து கொண்டிருக்கும் முறிவு மருந்துகளாலேயே, நீங்கள் எங்களுக்கு ஊட்டி வரும் விஷங்களெல்லாம் வலுவற்று முறிந்து போகின்றன. எங்களது சத்திய தரிசனம் எந்தவிதத் தடையுமின்றி, அசுர வேகத்தோடு வளர்ந்தோங்கிக் கொண்டிருக்கிறது; மேலும் அந்த சத்தியம் நல்ல மனிதர்களை- உங்களது சமூகத்திலேயே மனத்தைப் பறிகொடுக்காது தப்பிப் பிழைத்த நல்லவர்களை- எல்லோரையும் தன்பால் கவர்ந்திழுக்கிறது. உங்களது வர்க்கத்தை நேர்மையான ஒழுங்கு முறையோடு பாதுகாப்பதற்கு உங்களிடம் ஒருவரும் இலையென்பதை நீங்களே பாருங்கள்! சரித்திர பூர்வமான நியாயத்தின் அழுத்த சக்தியிலிருந்து உங்களைக் காப்பாற்றிக்கொள்வதற்கு நீங்கள் கூறிய சகலவாதப் பிரதிவாதங்களும் வாய் சோர்ந்து வலுவிழந்து வாடி விழுந்ததை இப்போது நீங்களே கண்டீர்கள். எந்த விதமான புதிய சிந்தனைகளையும் உங்களால் படைக்க இயலாது. ஆத்மார்த்த விஷயத்தில் நீங்கள் ஆண்மையற்று மலடுதட்டிப் போய் விட்டீர்கள். ஆனால் எங்கள் கருத்துக்களோ என்றென்றும் வளர்ந்தோங்குகின்றன. என்றென்றும் அணையாத தூண்டா மணிவிளக்காய்ப் பிரகாசமுற்றோங்குகின்றன; மக்கள் அனைவருக்கும் உணர்ச்சி ஊட்டி, சுதந்திரப் போராட்டத்துக்காக அவர்களை ஒன்றுபடுத்தி பலம்பெற்று விளங்கச் செய்கின்றன. தொழிலாளர் வர்க்கம் சாதிக்க வேண்டிய மகத்தான சாதனையின் ஞானபோதம், உலகத் தொழிலாளர்கள் அனைவரையும் ஒன்றுபட உருக்கி வார்த்து அவர்களை ஒரு மகத்தான ஏக சக்தியாக உருவாக்குகிறது. அவர்களை கலகலத்து உயிர்ப்பிக்கும் பெரும் சக்தியை எதிர்த்துப்போராடுவதற்கு கொடுமையையும் வெடுவெடுப்பையும் தவிர உங்களிடம் எந்தவித ஆயுதமும் கிடையவே கிடையாது. ஆனால் உங்களது வக்கிர குணமோ வெளிப் படையானது. கொடுமையோ எரிச்சல் தருவது. இன்று எங்களது கழுத்தை நெறிக்கும் கைகளே நாளைக்கு எங்களைத் தோழமையுணர்ச்சியோடு தழுவிக் கொள்வதற்காகத் தாவி வரத்தான் போகின்றன. உங்களது சக்தியே செல்வத்தைப் பெருக்க உதவும் யந்திர சக்தி. அந்த சக்தி உங்களைத் துண்டுபடுத்தி, இரு கூறாக்கி, நீங்களே உங்களில் ஒருவரையொருவர் கொத்திக் குதறிக் குலைபிடுங்கிச் சாவதற்குத்தான் வழி கோலிக்கொடுக்கும். ஆனால் எங்களது சக்தியோ சகல தொழிலாள மக்களின் ஒன்றுபட்ட ஐக்கிய பலத்தால் என்றென்றும் ஜீவ வேகத்தோடு வளர்ந்தோங்கிக் கொண்டிருக்கும் மனச்சாட்சியினால் இயங்கிக் கொண்டிருக்கிறது. நீங்கள் செய்வது அனைத்தும் படுமோசமான பாதகச் செயல்கள்; ஏனெனில் உங்கள் செயல்கள் அனைத்தும் மக்களை அடிமைப்படுத்துவதில் தான் முனைந்து நிற்கின்றன. உங்களது பொய்மையும், பேராசையும், குரோத வெறியும் உலகத்தில் எண்ணற்ற பிசாசுகளையும் பூதங்களையும் தான் படைத்திருக்கின்றன; அந்தப் பூதங்களும் பிசாசுகளும் மக்களைக் கோழையராக்கி விட்டன; அந்தப் பைசாச ஆதிக்கப் பிடிப்பிலிருந்து மக்களை விடுவித்துக் காப்பாற்றுவதே எங்கள் பணி. நீங்கள் மனிதனை வாழ்க்கையினின்றும் பிய்த்துப் பிடுங்கி, அவனை அழித்துவிட்டீர்கள். நீங்கள் அழித்துச் சுடுகாடாக்கிய இந்த உலகத்தை, சோஷலிசம் ஒரு மகோன்னதமான மாசக்தியாக வளர்ந்து உருவாகி வளம் படுத்தும். நிச்சயம் இது நிறைவேறத்தான் போகிறது!"

பாவெல் ஒரு கணம் பேச்சை நிறுத்தினான். மீண்டும் அதே உறுதியோடு மெதுவாகக் கூறினான்:

"நிச்சயம் நிறைவேறத்தான் போகிறது!"

நீதிபதிகள் தங்களுக்குள் ஏதேதோ பேசிக் கொண்டார்கள்; பாவெலின் மீது வைத்த பார்வையை விலக்காமலேயே முகத்தை எப்படியெல்லாமோ விகாரமாகச் சுழித்துக் கொண்டார்கள். அவனது துடிப்பையும் இளமையையும், பலத்தையும் கண்டு பொறாமை பொங்கி, தங்களது பார்வையாலேயே அவனை அவர்கள் நாசப்படுத்தி விட முயல்வது போல் தாய்க்குத் தோன்றியது. கைதிகள் அனைவரும் மகிழ்ச்சியினால் கண்கள் பிரகாசிக்க, முகம் வெளிற, பரிபூரண கவனத்தோடு தங்களது தோழனின் பேச்சைக் கூர்ந்து கேட்டார்கள். தாயோ தன் மகனின் ஒவ்வொரு வார்த்தையையும் அள்ளிப் பருகினாள்: அந்த வார்த்தைகள் அனைத்தும் அவளது மனத் தகட்டில் வரிசை வரிசையாகப் பதிந்து நிலைத்தன. அந்தக் கிழ நீதிபதி எதையோ தெளிவுபடுத்திக் கொள்வதற்காக, பாவெலின் பேச்சில் எத்தனையோ முறை குறுக்கிட்டார். இடையே ஒரு முறை அவர் வருத்தத்தோடு புன்னகையும் புரிந்து கொண்டார். பாவெல், இடையிடையே பேச்சை நிறுத்தினாலும், மீண்டும் அதே அமைதி தோய்ந்த உறுதியோடு மேலும் பேசத் தொடங்குவான். மீண்டும் ஜனங்கள் அவனது பேச்சை உள்ளமிழந்து கேட்கச் செய்வான். நீதிபதிகளின் விருப்பத்தையும், அவன் தன் விருப்பத்துக்கு ஆளாக்கிவிடுவான். கடைசியாக அந்தக் கிழ நீதிபதி வாய் விட்டுக் கையை நீட்டிக் கத்தினார். பதிலுக்குப் பாவெல் கேலி பாவத்தோடு தனது பேச்சைத் தொடங்கினான்:

"இதோ நான் என் பேச்சை முடித்து விடப் போகிறேன். உங்களில் எவரையும் தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேச வேண்டும் என்ற விருப்பம் எனக்கு இல்லை. அதற்கு மாறாக, விசாரணை என்ற பெயரால் நீங்கள் நடத்தும் கேலிக் கூத்தை நான் வேண்டா வெறுப்பாக உட்கார்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறேன். உங்கள் மீது அனுதாப உணர்ச்சி தான் என் உள்ளத்தில் அநேகமாகப் பொங்கி வழிகிறது. என்ன இருந்தாலும் நீங்களும் மனிதப் பிறவிகள் தான். எங்களது இயக்கத்தின் எதிரிகளைக் கூட, மிருக சக்திக்கு ஊழியம் செய்வதற்காக கேவலமாக வெகு தாழ்ந்து கடை கெட்டுப் போனவர்களைக்கூட, மனித கௌரவத்தின் மான உணர்ச்சியையே முற்றிலும் இழந்து விட்டவர்களைக் கூட, நாங்கள் மனிதப் பிறவிகளாக மதித்து அவர்களுக்காகத் துக்கப்படுகிறோம்..."

அவன் நீதிபதிகளைப் பார்க்காமலேயே தன் இடத்தில் அமர்ந்தான். தாயோ திக்குமுக்காடும் மூச்சோடு அந்த நீதிபதிகளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

பாவெலின் கையைப் பிடித்து அழுத்திய அந்திரேயின் முகமும் பிரகாசமடைந்தது. சமோய்லவ், மாசின் முதலியவர்களும் அவன் பக்கமாகக் குனிந்து இருந்தார்கள். தன்னுடைய தோழர்களின் உற்சாகத்தைக் கண்ட பாவெல்புன்னகை செய்து கொண்டான். அவன் தன் தாயின் பக்கமாகத் திரும்பி, 'உனக்குத் திருப்தி தானே!' என்று கேட்கும் பாவனையில் தலையை ஆட்டினான்.

பதிலுக்கு அவள் மகிழ்வோடு பெருமூச்செறிந்தாள். அவளது முகத்திலே அன்புணர்ச்சி அலை பரவிச் சிலிர்த்துச் சிவந்தது.

"நீதிபதிகளே! விசாரணை என்ற பெயரால் நீங்கள் நடத்துவது கேலிக்கூத்து. உங்கள் மீது அனுதாப உணர்ச்சிதான் எழுகிறது." -பாவெல்-

"இப்போதுதான் உண்மையான விசாரணை ஆரம்பமாயிற்று!" என்று தாயிடம் மெதுவாகக் கூறினான் சிலோவ். "அவன் அவர்களை வீசி விளாசித் தள்ளி விட்டான், இல்லையா?"

அவள் பதில் கூறாமல் தலையை மட்டும் ஆட்டினாள். தன் மகன் தைரியத்தோடு பேசியதைக் கேட்டு அவள் மகிழ்வுற்றாள். அவன் பேசி முடித்ததைக் கண்டு அந்த ஆனந்தம் பேரானந்தமாயிற்று. அவளது மனத்தில் துடிதுடித்துக் கொண்டிருந்த கேள்வி ஒன்றே ஒன்று தான்:

"அவர்கள் இப்போது என்ன செய்வார்கள்?"

(தொடர்ந்து வரும்)

# நிகழ்வும் நிஜமும்

மனமெங்கும் மகிழ்ச்சிப் பிரவாகம். சிவசம்பு ஆசிரியர் பூரித்துப்போயிருந்தார். கல்யாண ஆரவாரங்கள் களைகட்டி விட்டிருந்தன. தண்ணீருற்று தலைமைக்காரர் பிரிவில் இருந்த மாமூலை கிராமத்து 'பழமுதிர்ச்சோலை' வீடு அமர்க்களப் பட்டது.

வவுனியா, நெடுங்கேணி, தண்டுவான், முள்ளியவளை, முல்லைநகர் என எல்லா இடங்களிலுமிருந்தும் உறவுகள் வந்து குவியத்தொடங்கின.

நெல் விதைப்பு, வெட்டு பயிர்ச் செய்கை எல்லாம் முடிந்து எதிர்பாராத இலாபத்தோடு பூரித்துப்போயிருந்தார் மாஸ்டர். சங்கரி சிவசம்பு சாம்ராஜ்ஜிய இளவரசி. தேவையான நஞ்சை புஞ்சை நிலங்களோடு சொத்து சுகங்கள் எல்லை மீறிக் குவிந்து கிடந்தன. நாட்டு நடப்பும் கொஞ்சம் சுமுகமாக இருப்பதாகப்பட்டதும் நிச்சயதார்த்தம் முடித்து திருமணத்திற்கு நாள் குறித்து விட்டார்.

முல்லைநகர் போய் திருமணத்துக்கான பொருட்களைக் கொள்வனவு செய்தாகிவிட்டது. விடிந்தால் திருமணம். ஒன்பதாண்டுகளுக்குப் பின்னர் ஒரு மயான காண்டத்தில் நிகழும் மங்களகாரியமாகவே நினைத்துக்கொண்டார்.

ஓடுவதும், ஒதுங்குவதும், திரும்புவதும், பயந்து பயந்து வாழுவதுமாகவே ஒன்பது ஆண்டுகள் ஓடி விட்டிருந்தன. சங்கரி பன்னிரெண்டு வயதுப் பிள்ளையாக இருந்த போது ஆரம்பித்த ஓட்டமும் ஒதுங்கலும் இன்னமும் முடிந்தபாடில்லை.

பொன் விளையும் பூமிகளெல்லாம் பொட்டல் நிலங்களாகக் கிடந்தன. சூழவும் சமகாலமாகவே மெதுமெதுவாக வேளாண்மை, மரக்கறிச் செய்கையெனப் பசுமை பொங்குகிறது.

**ஆத்மராஜா றூத் சந்திரிக்கா**



எண்பத்தியேழாம் வருடத்தின் ஐப்பசித்திங்களில் ஒரு பெரிய பிரளயம்...முதன் முதலில் உருவானபோது தண்ணீரூற்றுப் பிரிவு மக்களெல்லாம் இடம் பெயர்ந்து பயந்து பதறி வவுனியாவுக்கு ஓடிய போது மாஸ்டரும் ஓடினார். நெடுங்கேணியில் தங்கித்தரித்து பல காலத்தின் பின் ஊர்மீண்டார். "ஐயா சண்முக மாமா அவை வந்திருக்கினம்." மகளின் பேச்சில் சிந்தனை கலைந்து அவர்களை வரவேற்றார்.

தண்ணீரூற்றிலிந்து அவர் மைத்துனர் குடும்பம் வந்துசேர்ந்தது. இரவுணவு கலகலப்பாய் முடிந்தது. விடியலுக்கான ஆரவாரங்களில் பலரும் நித்திரை தொலைத்து மும்முரமாயிருந்தார்கள். ஆயத்த வேலைகள் முடிய மணி ஒன்றானது.

அனைவரும் கண்ணயர்ந்தபோது... சூழல் அதிர்ந்தது. செவிப்பறைகள் தீய்ந்து போயின. எல்லாருக்கும் கிலி பிடித்தது. சிவசம்பு மாஸ்டர் ஸ்தம்பித்துப் போனார். கல்யாண வீட்டு விருந்தாளிகள் பதறி, உள்ளதை உள்ளபடியே விட்டுவிட்டு ஓட்டம் பிடிக்கத் தொடங்கினார்கள்.

"அனைவரும் கண்ணயர்ந்தபோது செவிப்பறை அதிர்ந்தது எல்லோருக்கும் கிலிபிடித்தது"

ஓட்டம்.....ஓட்டம்....பாதை தெரியாமல் பாதங்கள் பெயர்வதே பாதையாகி காரிருளில் முல்லைப் பரப்பெங்கணும் சிதறியோடினார்கள். என்னவென்று, எதுவென்று தெரியாத ஊழிக்காலப் பிரளயம் கண்ட ஓட்டம். மாஸ்டருக்கு நெஞ்சு வலித்தது. ஒரு தசாப்தம் கடந்து நடக்கவிருந்த தன் மகளின் கன்னிகாதான வைபவம் தடைபட்டுப்போன வலி அவர் சர்வாங்கங்களிலும் ஆக்கிரமித்தது.

ஓடும் மக்களும்...புலம்பும் மக்களுமாய் திடீரென ஒரு போர்க்கால சூழல் அங்கு சதிராடியது. அறுவைக்காகக் கட்டிவைக்கப்பட்டிருந்த கடாக்கள் கதறிக்கயிறறுத்து தலைதெறித்து ஓடின. பெட்டிபெட்டியாய் கட்டி வைத்திருந்த பட்சணங்கள் பரவிக்கிடந்தன தேடுவாரற்று. மாஸ்டர் குடும்பமும் ஓட ஆயத்தமானது.

அவர்கள் வீட்டு உழவு இயந்திரப் பெட்டிக்குள் எல்லாரும் ஏறிக்குந்திக் கொண்டார்கள். போகுமிடம் தெரியாது வாகனம் ஓடியது. மாஸ்டர் வலியால் துடித்துக்கொண்டிருந்தார். அவர் மார்பை நீவிவிட்டபடி மகள் அருகே அமர்ந்திருந்தாள்.

பொழுது புலர்வதற்குள் பாதுகாப்பான இடம் தேடி ஓடியது உழவு இயந்திரம். மேடுபள்ளங்களில் சரிந்து விழுந்து பற்றைகளில் முட்டி மோதி இருள்விலகாத கானகத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது.

சங்கரி பதறிப்போய் வீரிட்டாள். மாஸ்டரின் கரங்கள் நழுவி விழுந்தன.

சட்டென வலி இறுகி மூச்சு ஸ்தம்பித்தது. உடல் விறைத்துப்போனது.

மங்களம் வேண்டிய மனங்கள் மரண ஊர்வலம் போய்க்கொண்டிருந்தன. அவர் கனவுகள் கலைந்து போன வலியில் வாழ்வு அஸ்தமனமாகியிருந்தது.

இனி அந்த மயான காண்டத்தில் மங்களநாதம் ஒலிப்பதெப்போதோ......??



படிப்பகம்

www.padippakam.com

# உயிரே உயிரே

**"என் புருஷன் குழந்தைப்பா. ஒ.:.ப்பீசில் இருக்கிறவங்க மேல உள்ள கோபத்தை என்மேல காட்டி வடிகால் தேடிக்கிறார்."**

அவன் கோபமாக வந்தான்.

"ஏண்டி, இங்க வா. புருஷன் வேலை முடிஞ்சு வீட்டுக்கு வரும் போது வாசல்ல வந்து நின்னு 'வாங்க'ன்னு கூட சொல்ல முடியாதா?" கத்தினான்.

"வந்து.....உள்ள கொஞ்சம் வேலை இருந்ததுங்க" நடுங்கினாள் அவள்.

"சரி, சரி கண்ணைக் கசக்காதே. பசிக்குது, ஏதாவது சாப்பிடக் கொடு." அதட்டினான்.

"சரிங்க" உள்ளே ஓடினாள். செய்து வைத்த இனிப்பைத் தட்டில் வைத்து அவனிடம் நீட்டினாள். தட்டு படபடத்தது. இனிப்பை எடுத்துச் சுவைத்தவன், "என்ன இது. நல்லா வேகவேயில்லை. எனக்கு வேண்டாம்." தட்டை வீசினான். அவள் கால் விரலைக் காயம் செய்து அது விழுகிறது. உதட்டைக் கடித்து அழுகையை மென்றாள்.

சமையல் அறைக்குப் போய் வேலையைக் கவனித்தாள். 'என்னைக்கு இவர் நம்மகிட்ட அன்பாய் பேசுவாரு?' என்கிற ஆதங்கம் தலை தூக்கியது அவளுக்கு. யோசனையுடனே சமையலை முடித்து, டைனிங் டேபிளில் பரப்பி வைத்தாள். நாற்காலியை இழுத்துப் போட்டு அமர்ந்தவன்,

"என்ன விசேஷம் இன்னைக்கு? பால் பாயசமெல்லாம் வைச்சிருக்கே?" கேட்கிறான்.

"இன்னைக்கு நம் கல்யாண நாள்" சொல்லும்போதே தொண்டையை அடைத்தது அவளுக்கு.

டம்ளரை எடுத்து வாயில் வைத்தவன் உடனே, "ஏண்டி, இதுதான் பாயசமா? இனிப்பே இல்லை. இப்பப் பாரு உன்னை என்ன பண்றேன்னு" என்றவன் மிளகாய்ப் பொடியை அப்படியே அந்த டம்ளரில் கவிழ்க்கிறான். "இந்தா குடி" என மிரட்டவும் வேறு வழியின்றிக் குடித்தாள். அவன் எழுந்து போனதும் பாத்திரங்களை மூடி எடுத்து வைத்துக் கொண்டிருந்தவளுக்கு லேசாகத் தலை சுற்றுகிறது. சுய நினைவில்லாமல் சரிகிறாள்.

சப்தம் கேட்டதும், "இந்நேரத்துல என்ன சத்தம்?" கத்தியபடியே வந்தவன், அவளின் நிலைகண்டு திகைக்கிறான். அவசரமாய் அள்ளிப் போட்டுக் கொண்டுபோய் மருத்துவ மனையில் சேர்க்கிறான். டாக்டர் பரிசோதித்து விட்டு, "இவங்க சாப்பிட்ட உணவிலே



## கே. வெண்ணிலா

பல்லி விழுந்திருக்கு. நல்ல வேளை, சீக்கிரமா கூட்டிட்டு வந்தீங்க. இல்லைன்னா நிலைமை இன்னும் மோசமா இருந்திருக்கும்" என்றார். அவளின் அப்பா, அம்மாவைப் பக்கத்தில் இருக்கச் சொல்லிவிட்டு வீட்டுக்கு வருகிறான்.

"அப்பாடா, நிம்மதியாய் இருக்கலாம்" எண்ணியது அவன் மனம். ஆனாலும், அவளில்லாத வீடு அவனை என்னவோ செய்கிறது. அவள் போடும் காப்பிக்காக இவன் நாக்கு ஏங்கித்தவிக்கிறது. எப்படித் திட்டினாலும் எதிர்வார்த்தை பேசாத அவள் குணம் நினைவுக்கு வருகிறது. சகலத்திற்கும் ஏவுபவன் ஆதலால் ரொம்பவே தடுமாறிப் போனான். 'சரி போய் அவளைப் பார்த்து விட்டு வரலாம்' என்று மருத்துவமனைக்குப் போனான். அவளது அறைக்குள் நுழையப் போனவனை அவளது பேச்சுக்குரல் தடுத்து நிறுத்தியது.

"நல்ல வேளைப்பா. எனக்குப் பதிலா அவர் அந்தப் பாயசத்தைக் குடிச்சிருந்தா என்ன ஆகியிருக்கும்? என்னால நினைச்சுக் கூடப் பார்க்க முடியலை. ஆயிரம் தான் திட்டினாலும், என் புருஷன் குழந்தைப்பா. ஒஃப்பீஸில் இருக்கிறவங்க மேல ஏற்படற கோபத்தை என் மேலே காட்டி வடிகால் தேடிக்கிறாரு, அவ்வளவு தான். பாவம்! நான் இல்லாம எப்படிக் கஷ்டப்படறாரோ? அவருக்கு சகலமும் நான்தான் செய்யணும். இதைப் புரிஞ்சிக்காதவங்கள் அவரை முரடன்னு திட்டறாங்க. ஆனா என் புருஷன் சொக்கத் தங்கம். என்னைத் தவிர வேற யாரையும் மனசால கூட நினைக்க மாட்டார். இப்படிப்பட்ட புருஷன் கிடைக்க நான் கொடுத்து வைச்சிருக்கணும்பா" தன்னை மறந்து பேசிக் கொண்டிருந்தாள்.

வெளியில் நின்றிருந்த அவன் கண்களில் கண்ணீர் பளபளக்க உள்ளே ஓடினான். "ஸாரிடா! உன் நல்ல குணம் புரியாம உன்னை இத்தனை நாளா சித்ரவதைப்படுத்திட்டேன். அதிகாரத்துனால உன்னை அடக்கி ஆளணும்னு நினைச்ச என்னை, நீ உன்னோட அன்பால அரவணைச்சுக்கிட்ட. இனி நான் உன்னைத் திட்டமாட்டேன். அடிக்கமாட்டேன். இந்த ரெண்டுநாள் பிரிவு என் கண்ணம்மாவோட அருமையை எனக்குப் புரிய வச்சிட்டது." நேசத்தோடு குனிந்து அவளின் நெற்றியில் முத்தமிட்டான்.

# அவளுக்குத்தான் தெரியும்

**இவளது உடை, பாவனை எல்லாமே வித்தியாசமாக உள்ளதே. எனக்கு வியர்த்துக்கொட்டியது.**

விடியற்காலை 4 மணிக்கு சிலாபத்திலிருந்து கொழும்புக்குச் செல்லும் முதலாவது இன்டர்சிட்டி பஸ்சில் ஏறி அமர்ந்து கொண்டேன். இருளையும் கிழித்துக் கொண்டு பஸ் வண்டி வேகமாக வீதியில் ஓடிக் கொண்டிருந்தது.

மருதங்குளம் சந்தியில் பஸ் வண்டி நின்றதும் பெண் பயணி ஒருத்தி வண்டிக்குள் ஏறினாள். சுற்றும் முற்றும் பார்த்தாள். உட்காருவதற்கு அவளுக்கு சீட் கிடைக்கவில்லை. முனகிக்கொண்டே பின் சீட்டில் என் பக்கத்தில் உட்கார்ந்தாள். மீண்டும் பஸ் வண்டி புறப்பட்டது.

நான் மெதுவாக அவள் முகத்தைப் பார்த்தேன். ச்சே. அவளின் அடையாள அட்டையைப் பார்க்கத் தேவை இல்லை. அவள் ஒரு தமிழ் பெண் என அவளே அடையாளம் காட்டிக் கொண்டிருந்தாள்.

அவள் மாநிறம். ஊதாப்பூ கலரில் சாறி உடுத்தியிருந்தாள். நெற்றியில் விபூதி பட்டை. இரு அடர்ந்த கண் புருவங்களுக்கிடையே இருபத்தைந்து சத அளவிலான குங்குமப்பொட்டு பளிச்சென வைத்திருந்தாள். தலையில் கும்மென மணம் வீசும் மல்லிகைப்பூச்சரம் அவளது தலையை அலங்கரித்துக்கொண்டிருந்தது. போதாக்குறைக்கு அவள் உடலில் பூசியிருந்த சென்ட் மணம் என் மூக்கை கடித்தது.

இப்போது எனக்கு அவளை நன்றாகப் பார்த்ததும் ஒரே பயம். இன்று நாட்டு நடப்பும் நல்லதாக இல்லை. இவள் வந்து என் பக்கத்தில் உட்கார்ந்துவிட்டாளே. என் மனம் பயத்தில் தடுமாறியது. நான் என் பார்வையை யன்னல் பக்கமாக திருப்பிக் கொண்டேன். ம்... இவள் எல்லாம் ஒரு பெண்ணாக ஏன் பிறந்தாள்? இவளுக்கு நாட்டு நடப்பு ஒன்றும் தெரியாதோ? செய்தி பத்திரிகைகளைக் கூட வாசித்து தெரிந்து கொள்ளமாட்டாளோ? எந்த நேரம் எப்படி நடந்துக் கொள்ள வேண்டும் என்ற விவஸ்தையே தெரியாதவள்போல அல்லவா ஜம்மென்று உட்கார்ந்துக் கொண்டு இருக்கின்றாள். இன்று வைத்தியசாலையில் கூட நம் பெண்கள் பிள்ளை பெற்றெடுத்துக் கொள்ளப் போனால் நேர்ஸ்மார்கள் வாய்க்கு வந்தப்படி திட்டும் பேச்சுக்களையும் மனதில் சுமந்துக்கொள்ள வேண்டிய காலமாக உள்ளது. இதை எல்லாம் மறந்த நிலையில் இவளுக்கு என்னவோ திருச்சி சாலை ரோடுல்ல ஓடுகிற திருவள்ளுவர் பஸ் வண்டி என்ற நினைப்பு போல உட்கார்ந்திருக்கின்றாள். இவளை எல்லாம் பழைய தேஞ்ச செருப்பால அடிக்கணும் என நான் மனதில் திட்டிக் கொண்டிருக்கும் போதே பஸ் வண்டி மாதம்பை குதிரை கோவில் முன்பாக பாதுகாப்பு படையினரால் நிறுத்தப்பட்டது.

பயணிகள் அனைவரும் இறக்கப்பட்டனர். சாமக் கோழிகள் கூவிக்கொண்டிருந்தன. தீப்பெட்டிக்குள் இருக்கும் தீக்குச்சியைப் போல அனைவரும் வரிசையாக நிறுத்தப்பட்டு விசாரிக்கப்பட்டனர். உயிரையே வாங்குகிற அடையாள அட்டையை அதிகாரிகளிடம் காட்டிவிட்டு மிகவும் பாதுகாப்பாக எனது சேர்ட் பொக்கட்டினுள் திணித்துக் கொண்டேன்.

பஸ் வண்டி புறப்பட்டது. மீண்டும் என்பக்கத்திலேயே வந்து உட்கார்ந்துக் கொண்டாள். எனக்கு பயமாகவிருந்தது. இன்னும் எத்தனையோ செக் பொயிண்டுகள் உள்ளன. இவளுக்கு கொஞ்சம் கூட மனதில் பயமே இல்லையே. என்ன தைரியமோ? தெரியவில்லை.

மீண்டும் ஒரு முறை அவள் முகத்தைப் பார்த்தேன். அவள் சிரித்தாள். நானும் அசடு வழியும் முகத்துடன் அவளைப் பார்த்து சிரித்தேன்.

"உங்கள் பெயர் என்ன?" நான்தான் முதலில் பேச்சை ஆரம்பித்தேன்.

"மாதவி"

ஆ... இப்போது அவள் அழகில் சொக்கிப் போய்விட்டேன். வெள்ளை வெளேரென்ற அவளது பல்வரிசைகள் மாதுளம் பழத்து விதைகளைப் போல அடுக்கடுக்காக இருந்தது. மீண்டும் சிரித்தாள். குஷ்புவின் கன்னத்தில் விழும் குழிபோல இவளது இடது புற கன்னத்திலும் குழிவிழுந்து என்மனதை குளு குளுக்கச் செய்தது.

"எங்கே போகிறீர்கள்"

"மகரகமைக்கு"

மகரகம என்றதும் பயம் என்னை தூக்கி வாரி வீசிவிட்டது. அவளை வியப்புடன் மீண்டும் பார்த்தேன். தனியாக இவள் மகரகமைக்கு போகிறாளாம். ஐயோ எனக்கே அங்கு தனியாகப் போக பயமாக உள்ளது. இவள் இந்த காலத்தில் தனியாக அவ்வளவு தூரம் பூவும் பொட்டோட. போகிறாளே.



## சிலாபம் பொ. புஷ்பராஜு

"ஏன்? உங்கள் வீட்டுக்காரரையும் அழைத்து வந்திருக்கலாமே நீங்கள் தனியாக..."

அவள் முகத்தில் மெல்லிய புன்னகை இழையோட "இன்னும் எனக்குத் திருமணமாகவில்லை" என்றாள்.

இதைக் கேட்டதும் எனது மனப்பயம் எல்லாம் நீங்கி இப்போது என் உடலுக்குள் ஒரு புதுத்தெம்பு ஊடுருவி விளையாடியது. அப்போது அவளது தலையை என்தோள்மீது மெதுவாக சாய்த்தாள். சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடாது. என எண்ணிக் கொண்டே நானும் அவளது கையை தொட்டுப் பார்த்தேன். சில்லென்றிருந்தது.

"என்ன? உடல் சில்லென்றிருக்கின்றது."

"நான்தான் நாளை சாகப் போகிறேனே. உடல் சில்லென்றிருந்தால் என்ன?"

அவளது பதிலைக் கேட்டதும் எங்கோ ஓடிப்போய் ஒளிந்திருந்த மரணப்பயம் மீண்டும் என்னை தொற்றிக்கொண்டது. ஐயோ! என் கைகால்கள் எல்லாம் ஆட்டம் காணத் தொடங்கிவிட்டது. இவள்... இவள் தற்கொலைப் படையைச் சேர்ந்தவளாகயிருக்குமோ? இவளது உடை, பேச்சு எல்லாமே வித்தியாசமாக உள்ளதே. எனக்கு உடல்பூரா வியர்த்துக் கொட்டியது. இப்போது தலையை நன்றாக என் தோள் மீது சாய்த்தவள் என் வலது கரத்தை இறுகப்பற்றிக் கொண்டாள். எனக்கு மீண்டும், மீண்டும் ஒருவித பயம். ஆண்டவனே இப்படியும் ஒரு சோதனையா?

குண்டுவெடித்து பஸ்வண்டியே சிதறி குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்களின் சிதைவுற்ற சடலங்களுக்கு மத்தியில் நானும் அடையாளம் காணப்பட முடியாத நிலையில் வீதியில் வீசப்பட்டு கிடப்பது போல என் மனதிற்குள் கோரக் காட்சிகள் நிழல் ஆடியது.

நான் என்னையே மறந்த நிலையில் அழத் தொடங்கி விட்டேன். அப்போது அவள் மயங்கி மடியில் விழுந்தாள்.

நான் சத்தம்போட்டு பஸ்ஸை நிறுத்தச் சொன்னேன்.

அவளின் மணி பேர்சை நடத்துனர் திறந்துப் பார்த்தான். அதற்குள் எல்லா விபரமுமிருந்தது.

அவள் ஒரு புற்று நோயாளி. சிகிச்சை பெறுவதற்காகவே வாரா வாரம் திங்கட் கிழமை அவள் மகரகம புற்று நோய் வைத்தியமனைக்கு வருவது வழக்கமாம். அவளை நீர் கொழும்பு வைத்தியமனை யில் அனுமதிக்க சென்று கொண்டிருக்கிறேன்.

# ஒரே ஒரு முத்தம்

பங்குனி வெயில் சுள்ளென்று உறைத்தது. மாணிக்கம் மரத்தடி வெளியில் சீமெந்தையும் மண்ணையும் குழைத்துக் கொண்டிருந்தான். நெற்றிவியர்வை நிலத்தில் மணியாக உதிர்ந்தது. மண் வெட்டியைக் குப்புறப்போட்டவன் நிமிர்ந்து நின்று, தலையில் சுற்றியிருந்த துண்டால் முகத்தையும் முதுகையும் உரசித் துடைத்தான். மாணிக்கத்தின் வாய்புளித்தது.

**"நீ கேட்ட ஆயிரத்தை நான் தருவேன். நீ என்ன தருவாய்?"**



சற்றுத் தொலைவில் சித்தாள் வேலையிலிருந்த தன் மனைவி மரகதத்தைப் பார்த்தான். "ஏய் மரகதம் வெத்தில கொஞ்சம் குடுபுள்ள." என்று குரல் கொடுத்தான். அவ்வளவுதான். அவனுக்குத் தலை சுற்றியது. கண்ணை இருட்டியது. பேச்சு மூச்சின்றி அப்படியே மயங்கி விழுந்து விட்டான் மாணிக்கம்.

வெற்றிலையோடு வந்த மரகதம் பதறிப்போனாள். கதறி அழுதாள். கண்டிராக்டர் கனகலிங்கத்தின் காதுக்குச் செய்தி எட்டியது. பத்து வருஷமாக அவரிடம் வேலை பார்ப்பவர்கள் தான் மரகதமும் மாணிக்கமும். கனகலிங்கம் மாணிக்கத்தை உடனடியாக வைத்தியசாலையில் சேர்த்தார். அத்தோடு அவர் கடமை முடிந்துவிட்டதாக நினைத்தார்.

"மாணிக்கம் பிழைக்க வேண்டுமானால் அவனுக்கு ஒரு இஞ்ஜெக்சன் போடவேணும். அதுவும் இருபத்திநாலு மணித்தியாலத்துக்குள்" டாக்டர் அவளிடம் ஒரு துண்டைக் கொடுத்துவிட்டுப்போனார். மாணிக்கம் சுயநினைவின்றிக் கிடந்தான். மரகதம் அழுதாள். டாக்டர் கொடுத்த துண்டைக் கையில் பத்திரமாக எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள். மருந்துக்கடைக்காரர் சொன்ன விலை அவளுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. 'ஆயிரம் ரூபாய்' மரகதம் மயங்கும் நிலைக்கு வந்துவிட்டாள். இருந்தாலும் தன் கணவனின் 'உயிர்ப்பயம்' அவளுக்கு ஒரு அசாதாரண தைரியத்தைக் கொடுத்தது. அண்டை அயலவர்களிடம் மண்டியிட்டாள்.

## ரூபராணி

எல்லோரும் கையை விரித்துவிட்டார்கள்.

மரகதம் செய்வதறியாது தவித்த போது... "ஆயிரம் ரூபாயெண்டா எப்பிடிம்மா இருக்கும்? கடவுள்ட்ட வேண்டினா.... எல்லாமே கெடைக்குமெண்டு நீதான் அடிக்கடி சொல்லுவியே. அவர் தர மாட்டாரா? எனக்கு அப்பா வேணும்மா....." மரகதத்தின் ஆறுவயதுச் சிறுவன் சொன்னான். அவள் இதயத்தை யாரோ கசக்கிப் பிழிவதுபோல் இருந்தது.

திடீரென்று கனகலிங்கத்தின் நினைவு மரகதத்துக்கு வந்தது. 'கனகலிங்கம் ஐயா அஞ்சு ரூபாயும் கடனாகக்கொடுக்க மாட்டாரே. சரியான கருமி. எச்சில் கையால கூட காக்கா விரட்டாத மனுஷன்' தனக்குள் தானே சொல்லிக்கொண்டாள். இருந்தாலும், கேட்டுப்பார்ப்போம் என்ற நப்பாசை.

மரகதம் கனகலிங்கத்தின் கதவைத் தட்டினாள். கதவு திறந்தது. கனகலிங்கத்தின் முகத்தில் ஆச்சரியம், கேள்விக்குறியாக மாறியது. மரகதம் சட்டென்று அவன் காலில் விழுந்து "ஐயா, என் தாலிய நீங்கதான் காப்பாத்தணும்" என்று அழுதாள். டாக்டர் சொன்னதைச் சொன்னாள்.

"அதுக்கு நான் என்னம்மா செய்யவேணும்?.." கனகலிங்கம் ஆதரவாகக் கேட்டான்.

"ஒரு ஆயிரம் ரூபாய்...." மரகதம் வசனத்தை முடிக்கவில்லை.

"ஆயிரம் ரூபாயா? ஐய்யோ. பெரிய தொகையாச்சே நா எங்க போவன்?"

"ஐயா மடிப்பிச்சை கேக்கிறன். இனாமா இல்ல, கடனா. வேலை செய்து எப்பிடியும் கடனை அடைச்சிடுவன். அவர்ர உசிர் உங்க கையிலதான் ஐயா," பரிதாபமாகக் கெஞ்சினாள். பதறினாள். கனகலிங்கத்தின் மூளை மும்முரமாக வேலை செய்தது.

"மரகதம் அழாத. உள்ளே வா" என்று அழைத்தார். நம்பிக்கை துளிர்விட்டது அவளுக்கு.

"நீ கேட்ட ஆயிரத்தை நான் தருவேன். நீ என்ன தருவாய்?" என்றார் கனகலிங்கம் திடீரென்று. மரகதத்துக்கு ஒன்றும் புரியவில்லை. "என்னய்யா கேலி பண்றீங்களா? இந்த ஏழைற்ற என்ன இருக்கு" என்றாள்.

"இருக்கே. ஒரே ஒரு முத்தம் கொடு." பூமியே பிளந்து மரகதத்தை விழுங்கியது போலிருந்தது. அவள் சிலையாகிப் போனாள். அந்த இருபத்தினாலு மணி நேரம் அவளை வாளால் அறுத்தது. மாணிக்கத்தின் உயிர் மணிக்கூட்டுக்குள் பென்டியூலமாய் ஊசலாடுவது தெரிந்தது. அவள் பேசவில்லை.

அவன் கதவை மூடினான்.

மரகதம் ஆயிரம் ரூபாயுடன் மருந்துக் கடையை நோக்கி ஓடுகிறாள்.



படிப்பகம்

www.padippakam.com

# இலக்கிய நயம்

## இரண்டும் ஓரிடம்

தருவது ரசிகன்



கிரேக்க நாட்டு இளவரசி
கிறக்க விழிகளின் எழிலரசி
உறக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தாள்.

யார் அந்தத் தூதுவன்?
பாருக்குள் எங்கிருக்கிறது சோழநாடு?
மார்விரிந்த காளைக்கு அதுதான் நாடு.
ஊர் எது நாடெது என்பதா முக்கியம்?
போர் தொடு, காதல் போர் தொடு,
நேருக்கு நேர் நின்று போரிடு என்றது மனது.

சோழநாட்டிலிருந்து தூதாக வந்தவனுக்கு
கோலவிழிக்காரி தூண்டில் போட நினைத்தாள்!
வேழம்போல வந்த காளை
காலமெல்லாம் தருவானோ தோளை?

திரண்ட தோள்கள் எங்கே?-அவன்
உருண்ட தசைகள் எங்கே?
மிரண்ட மானாகப் பஞ்சணையில்
உருண்டு கொண்டிருந்தாள் கிரேக்கப் பைங்கிளி!

மிரண்ட மான்
வேடனைத் தேடுவது விந்தையன்றோ?

'வியந்தேன் வேடனே!
விருந்து இதோ எடுத்துக்கொள்!'

மான் மயங்கி நின்றது!
வான் வரை காதல் வளர்த்தது!

தூதனின் நிலையும்
துயில் கொள்ளா நிலைதான்!

பெண் கண்டேன், பெண்ணோ கண்டேன்?
கண்வழியே காதல் உலகம் கண்டேன்!

மான் கண்டேன், மானோ கண்டேன்?
மைவிழியால் என்னை உண்ணக் கண்டேன்!

நேரில் கண்ட அழகி
நினைவில் நின்று போர் தொடுத்தாள்!
தூதாக வந்தவன், காதலுக்கு
தோதாக கற்பனைப் பாய்விரித்தான்!

கற்பனைப் பாயில் கண் தூங்குமா?
கைப்படுமா, காதல் கைப்படுமா?
உறக்கம் ஒளித்தது! உயிர் ஒழுகியது!

ஒழுகிய உயிரில் வழுக்கி விழ,
உருகிய பைங்கிளி ஓடி வந்தாள்!

'உயிர் கடலானது,
நினைவு படகானது
நேரில் என்னை கொண்டுவந்தது'
என்றுரைத்தாள். புன்னகைத்தாள்!

"படகிலா வந்தாய்
பாதம் வலித்ததா? தேகம் நலிந்ததா?"

"படகில் வந்தால் பாதமா வலிக்கும்?"
பைங்கிளி கேட்டாள்.

"முள் தைக்கவில்லையா
கல் தடுக்கவில்லையா?"
அர்த்தம் இல்லாத அசட்டுக் கேள்வி.
சித்தம் தடுமாறும் காதலின் நியதி!

"எனக்கு முள் குத்தினால்
உங்களுக்கா வலிக்கும்?"

"வலிப்பது மட்டுமல்ல பெண்ணே
உயிரே வதையும்!"

"ஏன் இந்த அக்கறை?"
எவருக்குமில்லாத அக்கறை?

"எவர்மீதும் இல்லாத அக்கறை
என்பதையும் உன் வினாப் பட்டியலில்
விடாமல் சேர்த்துக் கொள்!"

பூமுகம் மலர்ந்தது. பூரிப்பு விரிந்தது!
"சேர்த்துக்கொண்டேன் விடைசொன்னால்
என் மனதில் கோர்த்துக் கொள்வேன்"

"காரணம் சொல்லவா?
தோரணம் கட்டிய இதயவாசலில்
பூரண நிலவாய் புகுந்தது யார் சொல்லவா?"
அவளுக்கும் விடை தெரியும்.
அவன் உதட்டால் அறிய ஆவல்.

வெண்ணிலவு முகத்தாள் வினா தொடுத்தாள்.
"யார் அவள் அந்தப் பாக்கியசாலி?"

விழிகளில் தேக்கிய கனவோடு
எழில்களின் ராணியை ஏறிட்டான்.

"வாக்கியம் வரவில்லை
தேக்கிய எண்ணமெல்லாம் சொல்ல!
தாக்கிய கணையென
என் நெஞ்சினில் காதலை வீசிய
என் உயிரினும் இனியவள்
பொன் மகள் என் எதிரே இருக்கிறாள்!"

பூமுகம் குங்கும நிறமாய் சிவந்தது.
பொன் இதழ் துடித்தது.
பொங்கி எழுந்த தாமரை மொட்டுக்கள்
ஏங்கிய நெஞ்ச சாட்சியமாகின!

காளையின் மனம் கவலை கொண்டது.
இடை தாங்குமா,
எழில்கள் இரண்டின் எடை தாங்குமா?

"சென்றுவரவா?" சில்லென்று கேட்டாள்.
"கேள்வியை மாற்று" சட்டென்று சொல்ல,
"ஏன் அதில் தவறோ?"
"ஒன்று தரவா?" என்று நீ கேள்-!

வெட்கத்திரை முகத்தில் விழுந்தது.
"தொடவா, தரவா?"
அருகினில் சென்றவன்
இரகசியம் பேசினான்.

"தொடவும் வேண்டாம்,
தரவும் வேண்டாம்,
விடை தந்தால் போதும்!"
மறுப்பில் பொய் குடியிருந்தது.

"இடை இது உடையுமா?"
கேள்வியும், கரமும்
ஒன்றாய் நீண்டன.

"என்ன இது, இப்படி முறையா?"
இடம் கொடுத்தபடியே
கேள்வியால் தடம் போட்டாள்.

"இடைக்கொரு உதவி" என்றான்.
"என்ன உதவி, ஏன் இந்தப் பொய்?"

"பாரம் தாளாமல்
பாவம் இடை துவள்வது பாராய்!
இடர்படும் நேரத்தில் உதவுதல் தர்மம்.
துயர் படும் இடையைத் தூக்கி நிறுத்த
கரம்படும் அவசியம் நியாயமாகும்!"

முத்துப்பல் தெரிய மோகனமாய் நகைத்தாள்.
"சாரமற்ற சமாதானம்!" என்றாள்.

"பாரமுள்ள சமதனங்கள்
சமாதானத்தை விரும்புவதில்லை.
படையெடு, படையெடு என்று
போருக்கு அழைக்கின்றன.
நான் என்ன செய்வது?"
காளை கதையை மாற்றினான்.

"வெட்கமில்லா வார்த்தைகள்
சோழநாட்டில் இது சகஜமோ?"

"சோழநாட்டில் மட்டுமல்ல
காதல் உலகெங்கும் இந்த
கற்கண்டு வார்த்தைகளுக்குப்
பஞ்சமில்லை!"

"வேறெதற்குப் பஞ்சம்?"
முத்து மாலையை முகத்தால் விலக்கி
குத்தும் மலைகளின்
கூர்மை அறிந்து கொண்டிருந்தவனை
வினாவால் வெப்பமேற்றினாள்.

முகம் நிமிர்த்த மனமில்லாமல்
மலைகள் இரண்டின் மத்தியிலிருந்து
குரல் மட்டும் எழுந்தது;
"என்ன கேட்டாய்?"
"வேறெதற்கு பஞ்சம் என்றேன்."

விடை சொன்னான் காளை.
"காதலர் இருவர் சந்தித்தால்
காற்றுக்குப் பஞ்சம் வரும்.
கடும் சொல்லுக்குப் பஞ்சம் வரும்.
பெரும் பேச்சுக்கும் பஞ்சம் வரும்."

நகைத்தாள். அந்த நயத்தால் மயங்கி
அவள் இதழில் தன்னை நனைத்தான்.

நனைந்தவன் நினைத்தான்;
நோயும் இவள் தந்தாள்,
நோய் தீர்க்கும் மருந்தும்
இவளானாள்.
வியந்தான்.
விழுந்தான்.

**"பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை**
**தன் நோய்க்குத் தானே மருந்து"**

அதிகாரம் 111, குறள்-1101.

## புதுமுகம் டேவிட் ஜோன்சன்

## ஒரே மாநிலத்தில் ஆறு வீரர்கள்

சிங்கர் கிண்ணப் போட்டியிலும், கனடாவில் நடைபெறும் சஹாரா கிண்ணப்போட்டியிலும் விளையாடும் இந்திய கிரிக்கெட் அணியில் புதுமுகம் ஒருவரும் இருக்கிறார்.

அவரது பெயர் டேவிட் ஜோன்சன். இவர் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர். 1971ம் ஆண்டு அக்டோபர் 16ம் திகதி பிறந்தவர்.

இந்தியாவில் நடைபெறும் ரஞ்சிப் போட்டிகளில் ஒரு கலக்குக் கலக்கியவர். 18 ரஞ்சிப்போட்டிகளில் கர்நாடக அணி சார்பில் விளையாடிய ஜோன்சன் 69 விக்கெட்டுக்களை வீழ்த்திருக்கிறார். இவரது சிறந்த பந்துவீச்சு 55 ரன் கொடுத்து 8 விக்கெட்டுக்களை வீழ்த்தியது. டேவிட் ஜோன்சன் மிதவேகப் பந்துவீச்சாளர்.

டேவிட் ஜோன்சனுடன் சேர்த்து இந்திய கிரிக்கெட் அணியில் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த ஆறுபேர் இருக்கின்றனர்.

துணைக்கப்டன் அனில் கும்ளேயும் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர்தான்.



இந்திய அணியில் மும்பாய், கர்நாடக மாநிலங்களைச்சேர்ந்த வீரர்கள்தான் எப்போதும் ஆதிக்கம் வகிப்பதாக பரவலான அதிருப்திகள் ஏற்கெனவே இருக்கின்றன.

இந்திய கிரிக்கெட் அணித் தேர்வுக்குழுத் தலைவராக இருப்பவர் ஜி.விஸ்வநாத். அவர் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர். அவரது நிர்வாகத்தில் கர்நாடக ஆதிக்கம் வகிப்பதாக அதிருப்திகள் எழுந்துள்ளன.

அனில் கும்ளே, ராகுல் திராவிட், ஸ்ரீநாத், வெங்கடேஷ் பிரசாத், டேவிட் ஜோன்சன், சுனில் ஜோஷி ஆகிய ஆறு வீரர்களும் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்.

டெண்டுல்கர், வினோத் காம்ளி, ஜடேஜா, ஆகியோர் மும்பாய் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்.

## சிந்தியா பதில்கள்

**★ அன்பின் சிந்தியா! மாசற்ற அன்புக்கு உறைவிடம் எது?**

கே. லலிதா, தோப்பூர்.

நல்ல மனம்.

✻ ☆ ✻

**★ கவலை இல்லாத மனிதர்களே கிடையாதா சிந்தியா?**

எம். சங்கரன், களுவாஞ்சிக்குடி.

நடு இரவு. திடீரென்று வானத்திலிருந்து கடவுள் குரல் கேட்டது:

"ஓ. ஜனங்களே! உங்களில் கொஞ்சம்கூட கவலையே இல்லாத ஆள் யாரென்று எனக்குத் தெரியவேண்டும். அதனால் இந்த நாட்டிலுள்ள யாவரும் அவரவர் கவலைகளை ஒரு பையிலே போட்டு எடுத்துக் கொண்டு கோவிலுக்கு வாருங்கள்," என்றார் கடவுள்.

கோவிலுக்கு முன்னாலே எல்லோரும் கூடினார்கள். எல்லார் கையிலும் சின்னதும், பெரியதுமான பைகள் இருந்தன. கவலையே இல்லாத ஆள் யார் என்று தேடினார் கடவுள்.

ஒரே ஒரு ஆள் மட்டும் கையிலே பை இல்லாமல் வெறுங்கையை வீசிக்கொண்டு ஜாலியாக வந்தான். கடவுள் அவனிடம் போனார்.

"என்னப்பா உனக்கு கவலையே கிடையாதா?" என்று கேட்டார்.

"ஏன் இல்லாமல்?" என்றான் அவன்.

"எங்கே அவையெல்லாம்?" என்றார் கடவுள்.

"பின்னாடி லொறியில் வந்துகொண்டிருக்கின்றன!" என்றான் அவன்.

✻ ☆ ✻

**★ டியர் சிந்தியா! பாதகமான ஆயுதங்கள் எதனையும் இலங்கைக்கு வழங்கவில்லை என்று அமெரிக்கா சொல்லியிருப்பது உண்மையா?**

சி. சிவகுமார், கல்கிசை.

அமெரிக்காவின் தகுதிக்கு அணுக் குண்டுதான் பாதகமான ஆயுதம்.

✻ ☆ ✻

**★ கல்விக்கு கரை உண்டா?**

என். ஐம்சி, கற்பிட்டி.

கரை கிடையாது. தரப்படுத்தல் போன்ற தடைகள் உள்ளன.

✻ ☆ ✻

**★ 'பதவி வரும்போது பணிவும் வரவேண்டும் தோழா' என்று பாடல் இருக்கிறது. பணிவு வராதவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?**

எம்.என். சஹாப்டீன், கல்முனை.

தற்காலிகமாக ஒருவருக்கு தலைமைப் பதவி கிடைத்தது. பெரிதாக ஒன்றும் இல்லை. ஒரு கூட்டத்துக்கு தலைமை தாங்கும் பதவிதான்.

அதுக்கே அவருக்கு இருப்புக்கொள்ளவில்லை. கூட்டம் ஆரம்பித்தது. ஒரு பேச்சாளர் எழுந்து மைக் முன்பாக வந்தார்.

"பெரியோர்களே! தாய்மார்களே!" என்று ஆரம்பித்தார். தலைவருக்கு பொறுக்க முடியவில்லை.

"முதலில் தலைவர் அவர்களே! என்று சொல்லுங்க" என்று கண்டிப்பாகச் சொன்னார்.

பேச்சாளர் என்ன சொன்னார் தெரியுமா?

"மன்னிக்கவேண்டும்! தவறுதலாக, பெரியோர்கள் லிஸ்டில் தலைவரையும் சேர்த்துவிட்டேன்." என்றார்.

✻ ☆ ✻

**★ வினோத் காம்ளி மீண்டும் இந்திய அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டது பற்றி?**

செ. சுதாகரன், பெரிய நீலாவணை-01.

தண்டனை கொடுக்கப்பட்டபோதும் வாய்திறக்காமல் இருந்து தன்னடக்கம் காட்டியதற்கு பரிசு.

✻ ☆ ✻

**★ 'பாத்திரமறிந்து பிச்சையிடு' என்றால் என்ன அர்த்தம்?**

ஆர். விஜயகுமார், கொழும்பு-9.

ஒரு பக்தனின் தொல்லை தாங்காமல் கடவுளே ஒரு முறை நேரடியாக அவன் முன் தோன்றினார். கையேந்தி நின்றவனை மனம் குளிரவைக்க நினைத்தார்.

"என்ன வரம் வேண்டும் கேள்!" என்று அவன் கேட்டதையெல்லாம் கொடுத்தார்.

அவன் வீட்டு மண்பானையை தன் ஆட்காட்டி விரலால் தொட்டார் கடவுள்; அது தங்கமானது.

மர நாற்காலியை ஆட்காட்டி விரலால் தொட்டார். அது தங்கமானது. ஆட்காட்டி விரலால் வீட்டைத் தொட்டார், வீடு பூராவும் தங்கமானது.

"பக்தா அருகேவா! இப்போது உனக்கு சந்தோசம்தானே. வேறு என்ன வேண்டும் கேள்!" என்றார் கடவுள்.

"இன்னும் ஒன்றே ஒன்றுதான் வேண்டும்!" என்றான்.

"எது?" என்று கேட்டார் கடவுள்.

"உங்கள் ஆட்காட்டி விரல்" என்றான் பக்தன்.

✻ ☆ ✻

**★ நாம் நல்லதைச் சொன்னால்கூட நேர் மாறாக எடுத்துக்கொண்டு சண்டைக்கு வருகிறார்களே! என்ன செய்வது?**

எல்.எச். ஆப்தீன், திருமலை.

எதையுமே தவறான கோணத்தில் பார்க்கிறார்கள் என்று அர்த்தம்.

இப்படித்தான் ஒரு முறை, உடற்கூறு சம்பந்தப்பட்ட வகுப்பு நடத்திக்கொண்டிருந்தார் ஓர் ஆசிரியர். அவர் ஒரு மாணவியைப் பார்த்து பின்வருமாறு கேட்டார்:

"மனிதனின் உடலில் எந்த அங்கம் தூண்டப்படுதலினால் தன் அளவைக்காட்டிலும் பன்மடங்கு பெரிய அளவுக்கு வளர்ச்சியடையும்?"

அந்த மாணவி பதிலளித்தாள்: "இந்த மாதிரிக் கேள்விக்கெல்லாம் நான் விடையளிக்க மாட்டேன்," என்று விட்டு வெளியே போய்விட்டாள்.

அதே கேள்வியை அடுத்த மாணவியிடம் கேட்டார் ஆசிரியர். அதற்கு அந்த மாணவி பதிலளித்தாள்:

"கண்ணிலுள்ள கண்மணி" (The Pupil of the eye)

ஆசிரியர் சொன்னார்: "மிகவும் நன்று! நீ போய் உன் தோழிக்கு அவள் கொண்டுள்ள பிழையான எண்ணத்தை நீக்குவாயாக."

✻ ☆ ✻

**★ ஜெயலலிதாவிடம் உமக்குப் பிடித்த குணம் எது? கலைஞரிடம் பிடித்த குணம் எது?**

ஸலீம். எம். கடாபி,
ஹொறவபொத்தானை.

இருவரிடமும் பிடித்த பொதுக்குணம்-தன்னம்பிக்கை.

✻ ☆ ✻

**★ விரைவில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவோம் என்று ஜனாதிபதி கூறியிருக்கிறாரே?**

எஸ். பூபாலன், வவுனியா.



மரணப் படுக்கையில் உள்ள நோயாளிக்குக்கூட ஆறுதல் வார்த்தை சொல்லுவதுதான் நாகரீகம். "நீ சாகப்போகிறாய்!" என்றா சொல்லுவோம். "விரைவில் குணமடைந்து விடுவீர்கள்!" என்றுதானே சொல்லுவோம். ஆறுதல் வார்த்தைகளுக்கும் பொய் அழகு.

✻ ☆ ✻

**★ உங்களுக்கு பிடித்த நடிகர் யார்?**

ஏ.சி. அன்சார், புத்தளம்.

இரசிகர்களின் மனதைப் படித்து, அவர்கள் மனதில் இடம்பிடித்த நடிகர். அவரது பெயரைச் சுருக்கினால் மூன்றெழுத்து.

✻ ☆ ✻

**★ உலக சாதனை முயற்சிகளால் பலன் உண்டா?**

வி. திருவேங்கடம், பதுளை.

உண்டு. அனாவசிய சாதனை முயற்சிகள் என்றால் 'இல்லை'.

ராமகிருஷ்ணரிடம் ஒரு யோகி வந்தார்.

அந்த யோகி தற்புகழ்ச்சி எண்ணம் கொண்டவர்.

"ராமகிருஷ்ணா! இங்கு அமர்ந்திருந்து என்ன செய்கிறீர்கள்? வாருங்கள் நாம் கங்கை மீது நடந்து செல்லலாம்" என்றார்.

ராமகிருஷ்ணர் அவரிடம், "நீரின் மீது நடப்பதற்கு தங்களுக்கு எத்தனை ஆண்டுகள் ஆயின?" என்று கேட்டார்.

"பதினெட்டு ஆண்டுகளாக இமாலயத்தில் கஷ்டப்பட்டு, நோன்பிருந்து, யோகாசனங்கள் செய்து இதனைப் பயின்றேன். இது மிக கடினமாக இருந்தது. கடினம் என்பதை விட முடியாத காரியமாக இருந்தது. எனினும் விடாமல் பயிற்சி செய்தேன். சித்தி அடைந்துவிட்டேன். என்னால் இப்போது நீரின் மேல் நடக்க முடியும். உங்களால் நடக்க முடியுமா?" என்று கேட்டார்.

அதற்கு ராமகிருஷ்ணர், "அந்த அளவுக்கு நான் ஒன்றும் முட்டாள் அல்ல. அடுத்த கரைக்கு நான் செல்ல வேண்டுமென்றால் படகுக்காரனிடம் இரண்டு பைசாக்கள் கொடுக்கிறேன். அதுபோதுமானது! நீங்கள் பதினெட்டு ஆண்டுகளில் சம்பாதித்ததின் மதிப்பு வெறும் இரண்டு பைசாக்கள்" என்றார் ராமகிருஷ்ணர்.

✻ ☆ ✻

**★ சிங்கர் கிண்ணப் போட்டிக்கு அவுஸ்திரேலிய அணி வந்துவிட்டதே?**

ஏ.ஜோசப், நீர்கொழும்பு.

கப்டன் மார்க் டெய்லரும், ஷேன் வோர்ணும் சாக்குப்போக்கு சொல்லி கழன்று கொண்டுவிட்டனர். தற்போதைய அவுஸ்திரேலிய அரசு மென்போக்கானது. அதனால் தான் முன்புபோல பிடிவாதம் பிடிக்க முடியவில்லை. முன்பிருந்த அரசோடு புலிகளும் தொடர்பு வைத்திருந்தார்கள்.

✻ ☆ ✻

**★ கேட்கக்கூடியது எது? கேட்கக்கூடாதது எது?**

வே. கஜேந்திரன், மாத்தளை.

கேட்கக்கூடியது: "எப்படி சௌக்கியமா?"

கேட்கக்கூடாதது: "எப்போது போகப் போகிறீர்கள்?"

✻ ☆ ✻

**★ எம். ஜி.ஆருடன் ரஜினியை ஒப்பிடலாமா சிந்தியா?**

எஸ். பத்மாவதி, கொழும்பு-10.

அவர் அவர்தான், இவர் இவர்தான்!


படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 45



## சபரி மோட்சம்

இராமரைவிட்டு இலக்குவன் பிரிந்திருந்த சிறு இடைவெளி இராமருக்கு மிகப்பெரிய துன்பத்தைக் கொடுத்தது. இருவரும் ஒன்று கூடியதும் துயரம் மறைந்து ஓரளவு மகிழ்ச்சி பொங்கியது. இரவும் பகலும் மாறிமாறி வருவது போல அந்த இன்பமும் நீடித்திருக்கவில்லை. சீதையைப் பற்றிய சிந்தனை இராமரை ஆட்கொண்டதும் மீண்டும் துன்பக் கடலில் இராமர் தத்தளித்தார். அண்ணன் துயரம் கண்டு தம்பியும் பெரும் துயரடைந்தான்.

இராமருடைய தாகம் இப்போது பன்மடங்காகியிருந்தது. இயற்கை நீர்நிலைகளைத் தேடி அலைவதை விட்டுவிட்டு தங்களிடமுள்ள மந்திரவலிமையினால் வருண தேவனை வருவித்து தாகம் தீர்க்கத் திட்டமிட்டனர். வருணபகவானுக்குரிய மந்திரத்தை இராமர் உச்சாடனம் பண்ணியதும் மழை பொழிய ஆரம்பித்தது. வான்னின்று பெய்த வானமிழ்தத்தை உண்ட இருவரும் புதுத் தெம்பு பெற்றனர்.

இருவரும் கானகத்தினூடாகப் பயணத்தை மேற்கொண்டனர். இயற்கைச் செல்வம் எங்கும் இறைக்கப்பட்டுக்கிடந்தது. இவற்றைப் பார்த்து இரசித்து மகிழும் நிலையில் இராமருமில்லை; இலக்குமணனுமில்லை. கண்ணால் காணும் காட்சிகள் அனைத்திலும் சீதையின் மாசற்ற அழகுருபத்தையே இராமர் கண்டார். அக்காட்சிகளைத் தன்னுடன் சேர்ந்து அனுபவிக்க ஜானகி தன்னருகில் இல்லையே என்ற ஏக்கம் தொடர்ந்து அதிகரிக்கவே செய்தது.

### பயங்கரப் பேயுருவம்

காலை கடந்து மதியவேளை விரைந்தது. இராமரும் இலக்குவனும் வருணபகவானை வரவழைத்து நீர் அருந்தியமையினால் பசி இருக்கவில்லை. ஆகவே உணவு தேடவேண்டியதுமில்லை. சற்று நேரம் ஒரு பெரிய மரத்தின் நிழலில் இருவரும் அமர்ந்தனர். சிறிது நேரத்தில் ஏதோ ஒரு வகைக் காந்த சக்தியால் கவரப்பட்டது போல் இருவரும் கவர்ந்திழுக்கப்பட்டனர். இழுக்கப்பட்ட திசையை இருவரும் உற்று நோக்கிய போது, பயங்கரமானதோர் உருவத்தை நோக்கிச் சென்று கொண்டிருப்பதை உணர்ந்தனர். இராம இலக்குவன் மட்டுமல்ல, அவர்கள் நிழலுக்காய் ஒதுங்கியிருந்த அந்தப் பெரிய மரமும் அவர்களுடன் சேர்ந்து அப்பயங்கர உருவத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது.

வெகு தூரத்துக்கப்பால் தெரிந்த அந்த விகார உருவத்தின் மிகப்பெரிய வாய் அகன்று பருத்துக்காணப்பட்டது. அவ்வுருவத்துக்கு தலையோ முகமோ இருக்கவில்லை. வயிற்றிலேயே வாயும் அதன்மேல் ஒரு மூக்கும் ஒரேயொரு கண்ணும் இருப்பதை இருவரும் கண்டனர். அந்தப் பெரு வயிறுடன் இரு கைகளும் கால்களும் மட்டும் ஒட்டியிருந்தன. அப்பெருவாய்க்குள் வனவிலங்குகளும் பறவையினங்களும்கூட புகுந்து மறைந்து விடுவதையும் அவதானித்தனர்.

தாமதித்தால் தாங்கள் இருவருமே அந்தப் பயங்கர உருவத்தின் வாய்வழி புகுந்து அதன் வயிற்றுள் போய் மறைந்துவிட வேண்டி நேருமோ என்ற எண்ணம் ஏற்பட்டது இராமருக்கும் இலக்குவனுக்கும். இராமர் தம்பி இலக்குவனைப் பார்த்து, "தம்பி! கையில் உடைவாளைத் தயாராக வைத்துக் கொள். இதோ நானும் வாளை எடுத்துக் கொள்கிறேன். அந்த உருவத்தின் அருகில் சென்றதும் தாமதியாமல் அந்த உருவத்தின் கைகள் இரண்டையும் இருவரும் ஒரே சமயத்தில் வெட்டி வீழ்த்திவிடுவோம், அவ்வாறு செய்தால்தான் நாம் தப்பமுடியும் என்றார்." இலக்குவனும் அண்ணனின் கருத்தினை ஆமோதித்தவனாக வாளை எடுத்துக் கொண்டான்.

இதேவேளை இருவரும் அந்த உருவத்தை அண்மித்தனர். இருவரும் ஒரே நேரத்தில் அதன் கைகளை வெட்டி வீழ்த்தினர். கைகள் துண்டிக்கப்பட்டதும் அவர்களை இழுக்கும் சக்தி தானாக நின்றுவிட்டது. அந்த உருவம் விபரீதமானதோர் ஒலியை எழுப்பிய வண்ணம் தரையில் சாய்ந்தது.

அக்கானகமே அதிரும்படி எழுந்த அந்தப் பயங்கர ஒலி அடங்கியதும் மென்மையான ஒரு குரல் கேட்டது. "இராமா! இலக்குமணா! உங்கள் இருவரையும் தரிசிக்க வேண்டுமென்று இத்தனை காலமும் காத்திருந்தேன். உங்கள் இருவரையும் கண்டதும் என் ஜென்மம் சாபல்யம் அடைந்துவிட்டது. உங்கள் இருவரின் ஆயுதங்கள் என்மீது பட்டதும் நான் சுயநினைவினைப் பெற்றுவிட்டேன். இதோ என் சடலத்தை தீ மூட்டி அத்தீயில் போட்டுவிடுங்கள். அப்போதுதான் என் சாபம் நீங்கி விமோசனம் கிடைக்கும்." இவ்வாறு அந்த அசரீரி கேட்டது.

இராமரும் இலக்குவனும் மரங்களை வெட்டி, முறைப்படி தீ வளர்த்து, ஈமச் சடங்கு செய்வது போன்று சகல சடங்குகளையும் செய்து அந்தச் சடலத்தையும் எடுத்து தீயிலிட்டனர். அந்த உருவம் முற்றாக எரிந்ததும், தீயிலிருந்த அழகிய இளைஞனின் உருவம் மேலெழுந்தது. இருவரையும் வணங்கியது.

### கபந்தன் சாப விமோசனம்

"அரசகுமாரர்களே! தேவருலகைச் சேர்ந்த எனது பெயர் கபந்தன். இந்திரன் அளித்த சாபத்தினால் எனக்கு இக்கதி நேர்ந்தது. நீங்கள் இருவரும் என் கைகளை வெட்டி உடம்பைத் தீயிலிட்டால் எனக்கு சாபவிமோசனம் உண்டு என்றும் தேவேந்திரன் சொல்லியிருந்தான். எனக்கு சாப விமோசனமளித்த உங்களுக்கு என்னாலான உதவி ஒன்றை மட்டும் செய்கிறேன். சீதா பிராட்டியை நீங்கள் அடைவதானால் நீங்கள் இருவரும் பம்பா நதி வரை செல்ல வேண்டும். அங்கு ரிச்சிய முக மலையில் வானர மன்னன் சுக்கிரீவன் தங்கியுள்ளான். அம்மன்னனுடைய அண்ணன் வாலி சுக்கிரீவனுடைய இராச்சியத்தைப் பறித்துவிட்டான். இதனால் சுக்கிரீவன் இக்கானகத்தில் வாழ்கிறான். அவனுடைய நட்பைப் பெற்று அவனுடைய துணையுடன் முயற்சித்தால் மட்டுமே சீதையை நீங்கள் காணமுடியும். அரக்கர்களையும் அழித்தொழிக்க சுக்கிரீவனுடைய துணை உங்களுக்கு நிச்சயம் தேவைப்படும்."

இவ்வாறு கூறிய கபந்தன் விண்ணிலிருந்து வந்த விமானத்திலேறி தேவலோகம் புறப்பட்டான். இன்னும் என்னென்ன துன்ப துயரங்களுக்கு ஆளாக நேருமோ என்று விசனமுற்றிருந்த இராமரும் இலக்குவனும் கபந்தனுடைய வார்த்தைகளால் ஓரளவு ஆறுதலடைந்து, பம்பா நதி தீரத்தை நோக்கி இருவரும் புறப்பட்டனர்.

இயற்கை வனப்பு அப்பிரதேசத்திலும் கொலுவீற்றிருந்தது. வண்ண வண்ணமான மலர்களும் வகைவகையான பட்சிகளும், மான், முயல் போன்ற சிறு பிராணிகளும் அந்தப் பிரதேசத்தின் அழகுக்கு மேலும் அழகூட்டுவனவாகவே காணப்பட்டன. இயற்கையின் அழகு எப்பேற்பட்டோரையும் கவர்ந்திழுக்கும் தன்மை வாய்ந்தது. ஆனால் இராமருக்கும் இலக்குவனுக்கும் அந்த அழகே வேதனையைப் பன்மடங்காக அதிகரிக்க வைத்தது.

தடாகங்களில் தாமரை மலர்கள் பூத்துக் குலுங்கின. அன்னப்பறவைகள் தடாகங்களில் படகுகள்போல் அங்குமிங்கும் போட்டி போட்டுக் கொண்டு நீந்திக் கொண்டிருந்தன. இக்காட்சிகளைக் கண்ட இராமர் அக்காட்சிகள் ஒவ்வொன்றிலும் சீதையை காணலானார். அவ்வழகினை ஆசையோடு இரசிக்கும் தன் துணைவி அப்போது தன்னருகில் இல்லையே என்ற பெருங்கவலையே இராமரை ஆட்கொண்டது.

### பம்பை நதிக்கரை

அக்கானகத்தின் நடுவே சலசல எனும் ஓசையுடன் பம்பை ஆறு ஓடிக்கொண்டிருந்தது. இராமரும் இலக்குவனும் அந்நதியில் நீராடினார்கள். நித்திய கருமங்களை முடித்துவிட்டு அந்நதிக்கரையோரமாக இருவரும் நடந்து சென்ற போது அழகிய சோலை ஒன்று தென்பட்டது. அச்சோலையின் நடுவே ஒரு சிறு குடிசையும் காணப்பட்டது. அக்குடிசையைக் கண்டதும் அக்குடிசையை நோக்கி இருவரும் சென்றனர். சற்றும் எதிர்பாராத விதமாக அக்குடிசைக்குள்ளிருந்து ஒரு மெல்லிய உருவம், இராம இலக்குவனைக் கண்டதும் அவர்களை நோக்கி ஓடோடிவருவதைக் கண்டு திகைத்தனர். அவ்வுருவம் அண்மித்து வந்ததும் அது வயதான மூதாட்டி என்பதனையும் கண்டுகொண்டனர்.

### சபரி அம்மை

வயதையும் மீறிய வேகத்துடன் ஓடிவந்த அந்த மூதாட்டி இராமரின் பாதங்களில் தடாரென விழுந்தார். "இராமா! இராமா! இன்றுதான் உன்திருவடி தரிசனம் எனக்குக் கிட்டியது. இத்தனை காலமும் இந்தப் பொழுதுக்காகவே நான் இந்தக் கட்டையுடன் காத்துக்கிடந்தேன். வாருங்கள்...! இருவரும் வாருங்கள்!" என்று இருவருக்கும் பாத பூசை செய்து உபசரித்து உள் அழைத்துச் சென்று தர்ப்பைப் பாய் விரித்து அமர வைத்தார்.

"உங்களுக்காகவே இப்பழங்களைச் சேர்த்து வைத்திருக்கிறேன். அருந்துங்கள்" என்று பலவாறான உபசார வார்த்தைகளைக் கூறி மகிழ்வடைந்தார் அந்த மாதரசி.

மதங்காசிரமத்தில் பன்நெடுங்காலமாக தவமியற்றி வந்த சபரி என்ற பெயருடைய பெண்மணியே இராம இலக்குவனை பயபக்தியுடன் வரவேற்று உபசரித்தார். திருமாலின் அவதாரமான இராம இலக்குவனைதன் வாழ்நாளின் இறுதிக்குள் தரிசித்த பின்னரே தன் உயிர் பிரிய வேண்டும் என்ற உறுதியுடன் வாழ்ந்து வந்தார். இருவரையும் உபசரித்த பின் தனது இறுதி மூச்சையும் இராமபிரானின் பாதங் களைத் தொட்டவாறே விட்டார்.

வேடுவகுலத்தைச் சேர்ந்த அந்த ஞானியான சபரியின் பெயரிலேயே இன்றும் தெய்வீக ஒளிபரப்பும் சபரிமலை கேரள மாநிலத்தில் உள்ளது. இங்குதான் அரிஅர சுதனான ஸ்ரீ ஐயப்பன் ஆலயமும் இருக்கிறது. சபரிமலை செல்பவர்கள் பம்பை நதி தீரத் திலும் நீராடியபின்னரே ஆலயம் செல்வார்கள்.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி: 43**

**சரியானவிடை:- வினை**

1. **செல்வி வினோதினி சரச்சந்திரன்.** 146 கட்டுவான வீதி, ஹோமாகம.
2. **க. சந்திரகலா.** 23/13 பந்சல வீதி, இராகலை பஜார், ஹல்கரனோயா.
3. **ச. துரைராஜா.** 34, சிறில் லேன் மட்டக்களப்பு.
4. **ஐ. எல். அன்வர்.** துறைமுகப் பொலிஸ் நிலையம், திருகோணமலை.
5. **ஆர். சசிக் குமார்.** பாரதி மகா வித்தியாலயம், பசறை வீதி, பதுளை.

**போட்டி இல. 45** கேள்வி:- கபந்தனுக்குச் சாபமிட்டவர் யார்?

ஆகஸ்ட்.31 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:
**இராமாயணப் போட்டி—இல.44, தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

# காதில பூ கந்தசாமி

**தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமரர் அமிர்தலிங்கம் நம் காதிலை பூ கந்தசாமியார் முன்பாக ஆவியாகத் தோன்றினாராம். விடுவாரா கந்தசாமியார். ஒரு பேட்டியே கண்டுவிட்டார்.**

## அமுதரின் ஆவியுடன் ஒரு பேட்டி

*வானத்திலிருந்து ஸ்லோமோஷனில் இறங்கிவருகிறது அமுதரின் ஆவி. காதிலை பூ கந்தசாமியார் ஒரு கையில் தாளுடனும், மறுகையில் பேனாவுடனும் காத்திருக்கிறார். ஆவி இப்போது அருகில் வந்துவிட்டது.*

அமுதர்:- எனக்காகவோ காத்திருக்கிறீர்?

கா.பூ.க:- அழகு தமிழில் தாங்கள் பேருரையாற்றுவதைக் காண வேண்டும் என்று முன் ஒரு காலத்தில் தவமிருந்தோம். இப்போது ஆவியுரை கேட்க தவமிருக்கக் கூடாதா?

அமுதர்:- அது ஒரு காலமடா தம்பி. நான் நடந்தால் பேரணி. நின்றால் பொதுக்கூட்டம். குந்தியிருந்தால் போராட்டம். சந்தியில் நின்றால் சட்டமறுப்பு ஆர்ப்பாட்டம். பந்தியில் இருந்தால் சமபந்திப் போசனம், சாதி ஒழிப்புப் போராட்டம். 'மந்தியே' என்றேன் என்றால் அது துரோகிகளுக்கு திண்டாட்டம். தம்பியே என்றழைத்தால் இளைஞர்களுக்கு கொண்டாட்டம்.

கா.பூ.க:- மறந்தா போனீர்கள் அண்ணா தளபதியே, தானைத் தளபதியே, தமிழீழ முதல்வரே என்றெல்லாம் நாம் அழைப்போமே. புன்னகையோடு மேடையேறி புயலாய் வீசுவீர்களே!

அமுதர்:- மறக்க முடியுமா தம்பி. (பெருமூச்சு விடுகிறார்)

கா.பூ.க:- அடுத்த பொங்கலுக்குள் தமிழீழம் என்று சொன்னீர்களே அமிரண்ணா. ஏன் இன்னும் காணவில்லை?

அமுதர்:- நான் சொன்ன பொங்கல் இன்னும் வரவில்லையே தம்பி.

கா.பூ.க:- அடுத்த மேதினத்துக்குள் தமிழீழம் என்று 1978ல் சொன்னீர்களே அண்ணா.

அமுதர்:- எந்த வருசத்து மேதினம் என்று நீங்களும் கேட்கவில்லை, நானும் சொல்லவில்லை நான் நினைத்த மேதினம் இன்னும் வரவுமில்லை.

கா.பூ.க:- இன்றைய இளைஞர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

அமுதர்:- 'தம்பியுள்ளான் படைக்கஞ்சான்' என்றார் அறிஞர் அண்ணாத்துரை. அதைத்தான் நானும் ஆணித்தரமாக சொல்ல ஆசைப்படுகிறேன்.

கா.பூ.க:- உங்கள் கட்சியின் இன்றைய நிலை?

அமுதர்:- கழுதை தேய்ந்தால் கட்டெறும்பு.

கா.பூ.க:- கட்டெறும்பும் கடிக்கும்தானே.

அமுதர்:- சலுகைகள் என்ற சர்க்கரையைக் கண்டால் கட்டெறும்பு என்ன செய்யும் தெரியுமா?

கா.பூ.க:- ஊர்ந்தோடிச் சுவைக்கும்.

அமுதர்:- சுவைத்தபடியே கடிப்பதுபோலவும் நடிக்கத்தெரிந்த கட்டெறும்புகளடா தம்பி இவர்கள். (புன்னகைக்கிறார்)

கா.பூ.க:- தங்கள் நினைவையே மறந்துவிட்டார்களே தலைவா?

அமுதர்:- சொன்னதை மறப்பது, செய்வதை மறைப்பது, ஏறிவந்த ஏணியை எட்டி உதைப்பது, அதுதானே தம்பி அரசியல்.

கா.பூ.க:- தங்கள் பெயரால் சிரமதானம் செய்யப் போவதாக அறிவித்தார்களே?

அமுதர்:- (முகத்தில் வருத்தமான புன்னகை) அறிவித்தார்கள். அறிவித்தார்கள்; பின்னர் பயந்துவிட்டார்கள்.

கா.பூ.க:- என்ன பயம் அண்ணா?

அமுதர்:- என் பெயரில் சிரமதானம் செய்தால் தங்கள் சிரசுகளை தானம் செய்யவேண்டி வருமோ என்று பயந்துவிட்டார்கள்.

கா.பூ.க:- நன்றி மறப்பது தமிழருக்கு அழகோ?

அமுதர்:- தம்பி! நன்றி என்பதும் மூன்றெழுத்து. உயிர் என்பதும் மூன்றெழுத்து. முன்னதை மறந்தால்தான் பின்னது நிலைக்கும் என்பது தான் தமிழரின் தலையெழுத்து.

கா.பூ.க:- இன்றைய அரசியல் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

அமுதர்:- முன்பெல்லாம் பொதுக்கூட்டங்களில் பேச்சாளர்கள்தான் மக்களை நோக்கி வெடிப்பார்கள். இப்போதெல்லாம் பொதுக்கூட்டங்களில் குண்டுகள்தான் வெடிக்கின்றன. அதனால்தான் நம்மவர்கள் பொதுக்கூட்டங்களே நடத்துவதில்லை. அதனால் மைதானங்கள் அமைதியாக இருக்கின்றன. மைக்குகள் ஓய்வெடுக்கின்றன. ஸ்பீக்கர்கள் ஒரு ஓரத்தில் கிடந்து துருப்பிடிக்கின்றன.

கா.பூ.க:- யாழ்ப்பாணம் சென்றீர்களா அண்ணா?

அமுதர்:- ஆவியாகச் செல்லக்கூட இப்போது தான் வாய்ப்புக் கிடைத்தது.

கா.பூ.க:- யாழ்ப்பாணம் எப்படியிருக்கிறது?

அமுதர்:- கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய தமிழர்கள் நாம் என்று சான்று சொல்லக்கூடிய வகையிலே இருக்கிறது. கட்டிடங்கள் இடிந்து கற்களே எங்கும் காணப்படுவதால் மண்ணைக் காணமுடியவில்லை.

கா.பூ.க:- அங்கொரு பொதுக்கூட்டம் போட்டிருந்தால் எப்படியண்ணா பேசியிருப்பீர்கள்,

அமுதர்:- ஓடுகள் இல்லாத வீடுகள். உறக்கமில்லாத மனிதர்கள். ஆதி மனிதன் நிர்வாணமாகத் திரிந்தான். தமிழ் சாதியில் பிறந்த மனிதனோ, இங்கே நிவாரணத்துக்காக அலைகிறான்.

திரைகடல் ஓடித் திரவியம் தேடிய தமிழன் இன்று தினப்படி தேடி தெருவிலே அலைகிறான்.

கப்பலோட்டி வணிகம் செய்த தமிழர்கள், இன்று உணவுக் கப்பல்தேடி வெறும் வயிற்றோடு காத்திருக்கிறார்கள்.

இமயத்திலே கொடி பொறித்த தமிழன், இன்று பொறிவெடிகளைப் புதைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கனகர், விசயர் தலையிலே கல் சுமக்கவைத்த மரபிலே வந்தவர்கள், இன்று இடிந்தவீடு கட்டக் கல் சுமந்துகொண்டிருக்கிறான்.

வானசாஸ்திரம் கண்ட தமிழர்கள், இன்று ஓடு உடைந்த கூரைகள் வழியாக வானத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று துள்ளித்திரிந்த தமிழர்கள், யாது ஊர்? யாவரும் புலியோ? என்னும் சந்தேகப்பார்வையால் சங்கடப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

உலக நாடெல்லாம் சுற்றிவந்த தமிழர்கள் இன்று குடாநாட்டில் சுற்றித்திரியக்கூட ஒன்றுக்கு மூன்று அடையாள அட்டைகள் அவசியம் தேவைப்படுகின்றன.

ஆறுமணியானால் ஊரடங்கும். தெருவில் இறங்கினால் உயிரடங்கும். இரவில் வெடி கேட்டால் உயிர் நடுங்கும்.

ஏடா தமிழா! மாடாய், மந்தையாய் போனாயேடா! நாடா, காடா, சுடுகாடா? நமக்கேன் வாழ்க்கை ஒரு கேடா?

கா.பூ.க:- உலகெங்கும் பரந்துவாழும் தமிழர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

அமுதர்:- காணியைவித்து, பூமியை வித்து, கட்டின பெண்டில் தாலியை வித்து கொழும்பிலே சுருட்டுக்கடை போட்ட தமிழர்கள், இன்று கனடாவிலும் கடை போட்டிருக்கிறார்கள். ஐரோப்பிய நாடுகளில் தோசைக் கடை. அமெரிக்க நாடுகளில் புட்டுக்கடை. பாரெங்கும் தமிழ் மணம் வீசவில்லையென்றாலும், நம் தமிழர் சமையல் மணம் வீசுகிறதடா தம்பி.

படை நடத்தி பல நாடுகளை வென்ற தமிழர்கள் கடை நடத்தி பல நாடுகளில் வாடிக்கையாளர்களை பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கா.பூ.க:- விஞ்ஞான உலகமே வியந்து கொண்டிருக்கிறது என்று கூறுங்கள்.

அமுதர்:- விமானத்தையும், சொகுசான வாகனங்களையும் கண்டுபிடித்த விஞ்ஞானிகள்தான் ஈழத்தமிழர் மீது கோபமாக இருக்கிறார்கள்?



கா.பூ.க:- ஏன் அண்ணா?

அமுதர்:- பின்னே என்னடா தம்பி. அவனவன் வேலை மெனக்கிட்டு காரையும், வேனையும், விமானத்தையும் தயாரித்து போக்குவரத்துக்கு விட்டிருக்கிறான். நம் ஈழத்தமிழன் அதையெல்லாம் புறக்கணித்துவிட்டு, பெற்றோல் பவுசர்களுக்குள் ஒட்சிசன் சிலிண்டர்களோடு பயணம் செய்கிறானே!

கா.பூ.க:- என்ன செய்வது, ஏஜென்சிக்காரர்கள் அவர்களை இடையிலே விட்டுவிட்டு வந்துவிடுகிறார்களே. அண்ணா, உங்கள் கட்சிக்காரர்களுக்கும், ஏஜென்சிக்காரருக்கும் ஒரு ஒற்றுமை இருக்கிறது.

அமுதர்:- என்ன தம்பி ஒற்றுமை?

கா.பூ.க:- தம்பிமாரே வாருங்கள் தமிழீழத்துக்கு போவோம் என்றீர்கள். புறப்பட்டுவந்தவர்களை இடையிலே கைவிட்டு நழுவிவிட்டீர்கள். இப்போது என்னடாவென்றால், வெளிநாட்டு தலைவர்கள் யாருமே கைகொடுக்கவில்லை, அதனால்தான் தமிழீழப் பாதையைக் கைவிட்டோம் என்கிறார் ஜோசப் பரராஜசிங்கத்தார்.

அமுதர்:- அவர் சொல்வதும் உண்மைதான்.

கா.பூ.க:- வெளிநாட்டுத் தலைவர்களிடம் விசா கேட்டுவிட்டு எங்களை கூப்பிட்டிருக்கலாமே. இடையிலே கொண்டுபோய் நிறுத்திவிட்டுத்தான் விசாரித்துக் கொண்டிருந்தீர்களாக்கும். இதே மாதிரித்தானே ஏஜென்சிக்காரர்களும் செய்துகொண்டிருக்கிறார்கள்.

அமுதர்:- விவாதம் வேண்டாம் தம்பி.

கா.பூ.க:- அரசியல் தீர்வுப் பொதி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

அமுதர்- அதுவும் நம் ஆவியுலகில்தான் இருக்கிறது.

கா.பூ.க:- என்ன?

அமுதர்:- இறந்தது எதுவும் அங்குதான் வரும்.

கா.பூ.க:- அப்படியானால் இப்போது எதை வைத்து விவாதம் நடக்கிறது?

அமுதர்:- அது பிரேத பரிசோதனை. (சிரித்தபடியே ஆவி காணாமல் போய்விடுகிறது. மேசையில் உள்ள தேநீர் ஆறிப்போயிருக்கிறது.



படிப்பகம்

...at the G.P.O.(QD/24/NEWS/96)

www.padippakam.com





பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


## புதுசா புதுசாய்



விதம் விதமாக கார்களை உற்பத்தி செய்து தள்ளிக் கொண்டிருக்கிறார்கள். கண்பார்வைக்குள் அடங்கும் அளவில் எல்லாம் அழகான கார்கள் தயாராகி விட்டன.

படத்தில் உள்ள குட்டிக்கார் ஜெனரல் மோட்டர்ஸ் நிறுவனத்தின் உற்பத்தி. பெயர்; இம்பாக்ற EV 1 சமீபத்தில் கனடாவில் வெள்ளோட்டம் விடப்பட்டது. இருவர் மட்டுமே செல்லலாம். இதன் விசேஷம் என்னவென்றால், பெற்றோல் தேவையில்லை. மின்சார சக்தியில் இயங்கும் கார் இது. குளிர்சாதனம், சி.டி.பிளேயர், பவர் பிரேக்குகள் போன்றவை உண்டு.

விரைவில் பெற்றோல் மற்றும் டீசல் எதற்குமே வேலையில்லாத பற்றரி மற்றும் மின்சக்தி மூலம் இயங்கும் கார்கள் விற்பனைக்கு விடப்பட உள்ளதாக ஜெனரல் மோட்டர்ஸ் நிறுவனம் கூறியுள்ளது. இன்னும் சில வாரங்களில் 20 கார்கள் பாவனைக்கு விடப்பட உள்ளன. எண்ணெய் வியாபாரிகளுக்கு மட்டும் சற்றுக் கசப்பான செய்திதான்.






SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
3236557


## அனுபவ ஆட்டம்





சலீம் மாலிக். பாகிஸ்தானின் முதல்தர கிரிக்கெட் வீரர். இப்போது 33 வயதாகும் சலீம் மாலிக் 19 வயதில் டெஸ்ட் போட்டியில் விளையாடத் தொடங்கியபோதே சகலராலும் கவனிக்கப்படும் நட்சத்திரமானார்.

கராச்சியில் 1982 இல் இலங்கைக்கு எதிரான டெஸ்ட் போட்டிதான் சலீம் மாலிக் பாகிஸ்தான் தேசிய அணிக்காக முதலில் கண்ட களம். முதல் போட்டியிலேயே சதம் அடித்தார்.

துடுப்பாட்டத்தில் அசாத்திய திறமை. வலதுகை பந்துவீச்சாளராகவும் பிரகாசித்திருக்கிறார். பாகிஸ்தான் அணிக்கு கப்டனாக இருந்தபோது அவுஸ்திரேலிய வீரர்களுக்கு லஞ்சம் கொடுக்க முயன்றார் என்ற புகாரில் சிக்கினார்.

அந்த புகார் கிளப்பிய சர்ச்சையால் மனமுடைந்து போயிருந்த சலீம் மாலிக், கடந்த உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் விளையாடி மீண்டும் தனது முத்திரையைப் பதித்தார்.

அணியை சரிவில் இருந்து மீட்கக்கூடிய ஆட்டக்காரர்கள் வரிசையில் சலீம் மாலிக்குக்கும் ஒரு முக்கிய இடம் இருக்கிறது.

1987இல் இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்தது பாகிஸ்தான் அணி. கல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் ஒரு நாள் சர்வதேசப் போட்டி நடந்தது. பாகிஸ்தான் அணிக்கு தோல்வி நிச்சயம் என்றுதான் எல்லோரும் நினைத்தனர். அப்போதுதான் சலீம் மாலிக் களத்தில் இறங்கினார். பயங்கர விளாசல்.

35 பந்துகளில் 72 ரன் குவித்தார். தூள் கிளம்பியது. பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றது. சலீம் மாலிக்கின் கிரிக்கெட் வாழ்க்கையில் அது ஒரு துடிப்பான, அற்புதமான நாள்.

தற்போது இங்கிலாந்து சுற்றுப் பயணத்தில் உள்ள பாகிஸ்தான் அணியில் தனது திறமையை தொடர்ந்து நிரூபிக்கும் வகையில் விளையாடிக் கொண்டிருக்கிறார். டெஸ்ட் போட்டிகளில் ஐயாயிரம் ரன்களை தாண்டிவிட்டார் இந்த 33 வயது துடிப்பான வீரர்.

## நடனச் செல்வி





உலகில் இதுவரை நடைபெற்ற விமான விபத்துகளில் சமீபத்தில் அமெரிக்காவில் நடைபெற்ற விமான வெடிப்பு 4வது இடத்தைப் பெற்றுள்ளது. முதல் பெரிய விமான விபத்து 1985 ஜூன் மாதம் நடந்தது. எயார் இந்தியா போயிங்747 நாசவேலையால் வெடித்து சிதறியது. 329 பேர் மாண்டனர். அட்லாண்டிக் சமுத்திரத்தின்மேல், தென் அயர்லாந்து கடலில் சிதறிவிழுந்து அமிழ்ந்து போனது.

## கடைசித் துண்டு

1996, ஜூலை 18. அமெரிக்க நேரப்படி இரவு 8.48 அமெரிக்க நியூயோர்க் கென்னடி விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட விமானம். ட்ரான்ஸ் வேர்ல்ட் எயர்லைன்ஸ் போயிங் 747. உலகில் மிகப்பெரிய பயணிகள் விமானம்.

உள்ளே அமர்ந்திருந்தனர் 230 பேர். கீழே கடல். 13 ஆயிரத்து 700 அடி உயரத்தில் வானில் பறந்துகொண்டிருந்த விமானம் திடீரென்று வெடித்துச் சிதறியது.

மாபெரும் நாசம். நாசவேலைதான் காரணம் என்று இப்போது கண்டுபிடித்துவிட்டார்கள். கண்டுபிடித்து என்ன பயன்? நடுக்கடலில் வெடித்து கடலில் துண்டு துண்டாக தொலைந்தவர்களை மீட்க முடியுமா? உறவுகளை இழந்தவர்கள் தேறுவது எப்படி?

மிஞ்சியது படத்தில் காணப்படும் ஒரு துண்டு மட்டும்தான். இதுதான் மாபெரும் இழப்பில் மிஞ்சிய விமானத்தின் கடைசித் துண்டு. இது கடலில் மிதக்கிறது. தரைக்கு கொண்டுவந்தால், பலியானவர்களின் உறவினர்களது கண்ணீரில் மிதக்கும்.

தோட்டத்தில் விளைந்த நீட்டு நீட்டுப் புடலங்காய். காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு. இந்த விவசாயிக்கும் தன் உழைப்பில் விளைந்த புடலங்காய் பொன்னுக்குச் சமன். என்ன ஒரு பூரிப்புப் பாருங்கள்.




இலங்கையில் வீசத் தொடங்கிய போர்புயலுக்கு அஞ்சி தமிழ்நாட்டுக்கு அகதிகளாகச் சென்றவர்கள் ஆயிரமாயிரம் பேர்.

படத்தில் இருப்பவர் செல்வி தேன்மொழி. மட்டக்களப்பு ஏறாவூர்தான் சொந்த இடம். இவரது அம்மா பிலோமினா. தன்னம்பிக்கையுள்ள பெண். தமிழ் நாட்டில் திரையுலக ஒப்பனைக் கலைஞராகப் பணியாற்றுகிறார்.

போரும், அகதிவாழ்க்கையும் களைப்பில் ஆழ்த்தினாலும் தமிழ் கலை உணர்வை மறக்கவில்லை. தேன்மொழிக்கு நாட்டியத்தில் ஈடுபாடு ஏற்படுத்தினார் பிலோமினா. பிரபல நாட்டிய விற்பன்னரான பத்மஸ்ரீ கே.என்.தண்டாயுதபாணியின் துணைவியார் கலைமாமணி சந்திராவிடம் நாட்டியம் பயின்றார் தேன்மொழி.

சென்னையில் அரங்கேற்றமும் நடந்து முடிந்துவிட்டது. அரங்கேற்றம் கண்டவர்களுக்கு வியப்பை ஏற்படுத்தியது தேன்மொழியின் நாட்டிய நயமும், திறமும் மட்டுமல்ல, வயதும்தான்.

தேன்மொழிக்கு எத்தனை வயதென்கிறீர்கள். ஆக, பன்னிரண்டு வயதுதான்.

வயதுக்கும், கலைத்திறனுக்கும் என்ன சம்பந்தம். ஆர்வம், முயற்சி, நம்பிக்கை மூன்றும் இருந்தால் போதும். அந்த வானமும் வசப்படும். தேன்மொழிக்கு நடனம் வசப்பட்டுள்ளது.

நாடு கடந்த பலர் தமிழையும், தமிழ் மக்கள் என்ற உணர்வையும் மறந்துவரும் வேதனையான காலம் இது. தம் பிள்ளைகளுக்கு தமிழை ஊட்டவே வெட்கப்படுவதும் நம் வெளிநாட்டு தமிழர்களில் ஒரு சாராருக்கு நாகரீகமாகி விட்டது.

அப்படியிருந்தும் எங்கிருந்தபோதும் நாம் தமிழ் மக்கள் என்ற உணர்வோடும், தம் பிள்ளைகளுக்கு நற்றமிழ் கலை ஈடுபாட்டையும் வளர்க்கும் நல்ல உள்ளங்களை பாராட்டியே ஆகவேண்டும்.

## காணிவிளையட்டும் மச்சான்



இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை காலிந்த பிளேஸ், 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, வெள்ளா, நாவலவில் உள்ள சமலை அச்சகத்தில் ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்